204

204

திருநூல்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

18 NOV 1944

2338

1-44

திருநூல்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

894.8114

8 NOV 1944
MADRAS

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

பதிப்புரிமை

முதற் பதிப்பு: 1938
இரண்டாம் பதிப்பு: 1940
மூன்றும் பதிப்பு: 1944

031,6

விலை ரூ. 2-4-0

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ். லிட்., சென்னை.

பதிப்புரை

இத் "திருநூல்" மூன்றும் பதிப்பை சுத்த சன்மார்க்கக் கடவுளின் மலரடியில் வைத்து வணங்குகிறோம்.

தனி வாழ்விலும் சமுத்தாய வாழ்விலும் எழும் பிரச்னைகளை **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்கள் பலதுறை யனுபவங்களால் ஆராய்ந்து அவ்வப்போது தமது நாட்குறிப்பில் எழுதி வைத்து வந்தார்கள்; அக் குறிப்புகளினின்றும் தொகுத்த அனுபவமணிகளே, இந்நூலிற் பொதிந்துள்ளன. சுத்தான்ம விளக்கம், சுத்த சன்மார்க்க வாழ்க்கை, ஆன்மநேய ஒற்றுமை, தேசசுதந்தரம், சமுதாயச் சீர்திருத்தம், தொழில் வளர்ச்சி, அரசியல், அருளுடைமை, அருளாட்சி, தேசீயக் கல்வி, இல்லற வாழ்க்கை, தொழிலாளர் இயக்கம், வீர வளர்ச்சி, சர்வமத சமரசம், உலகியல்பு, வாழும் வகை, தியான சாதனம், சுத்தசன்மார்க்கம் முதலிய பல அரிய பெரிய பொருள்கள் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன.

நமது சமுதாயம் அறிவுத்திரு, அருள்திரு, அன்புத்திரு, வீரத்திரு, சுதந்தரத்திரு, அழகுத்திரு, செல்வத்திரு, வெற்றித்திரு ஆகிய **திருக்களைப்** பெற்றேறுங்கத் தமது அனுபவத்திற்கண்டு கடைப்பிடித்த உண்மை வழிகளையும் சுத்த சன்மார்க்க சாதனங்களையும் ஆசிரியர் இந்நூலில் விளக்குவதால், இதற்குத் "**திருநூல்**" எனப் பெயரிடலாயிற்று.

எல்லாரும் அந்தர்யாமியான சுத்தான்மாவுடன் ஒன்றுபட்டு, இறைவன் அருட்குடைக்கீழ் **தூய வாழ்வு** வாழ்ந்து இன்ப நிறைவுற்றேறுங்க !

இராமச்சந்திரபுரம்,
1-10-1944
கஉ-கூ-கூடுா

அன்பு நிலயத்தார்.

அணிந்துரை

(திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்)

உலகியலுடன் தொடர்புகொண்டு தமது நலங் கருதாது மற்ற உயிர்நலங் கருதித் தொண்டு செய்வோரே அறவோராவர். நமது நாட்டில் இந்நாளிலும் பலதிறப் பணியில் ஈடுபட்டுள்ள அறவோர் சிலருளர்; அவருள் ஒருவர், **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.** * * * *

அறவோராகிய திரு. சுத்தானந்த அடிகளிடமிருந்து மலர்ந்துள்ள நூல்கள் பல. அவைகளுள் ஒன்று, இத் **திருநூல்.** '**திருநூலி**'ல் பல '**திரு**'க்கள் விளங்குகின்றன; அவை யாவும் காலத்துக்குரியன.

'திருநூல்' ஓர் அழகிய தமிழ்க் கோயிலெனத் திகழ்கிறது. இந்நாளில் நாட்டுக்கு வேண்டப்படும் நறும் பொருள்களால் அக்கோயில் ஆக்கப்பட்டிருக்கிறது; அகத்துக்குரிய பொருள்களும், புறத்துக்குரிய பொருள்களும் நிரலே அரண்களாக எழுப்பப்பட்டிருக்கின்றன. வீர எழுச்சி, கோபுரமாக எடுக்கப்பட்டிருக்கிறது. முயற்சித் துறைகள், பற்பல உறுப்புக்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயிலின் உள்ளே தெய்வமணமும், உரிமை வேட்கையும், வீரவுணர்வும், அருளறமும், இன்ன பிறவும் விளைகின்றன. அவ்விளைவு விடுதலை நல்குவதாகும். ****

திருநூற் கோயிலிற் புகுந்து வழிபாடு செய்வோர் உள்ளத்தில் உரிமை வேட்கை நேரிய வழியில் எழுதல் ஒருதலை; அவர்தம் நாட்டம் தன்னாட்சியில் புகுதல் உறுதி. அவர்க்கு உலகம் இறைமயமாகத் தோன்றுதல் திண்ணம்.

இத்தகைய அறிவுக்கோயிலைத் தந்த அருட்பெரியார் புதுவையிலுள்ள அரவிந்த நிலையத்தில் வீற்றிருந்துகொண்டு காலத்துக்குரிய சேவை செய்துவருகிறார். அவர்தம் திரிகரணங்களும் தெய்வத்தன்மை வாய்ந்த திருப்பணியிலேயே ஈடுபட்டுக் கிடக்

கின்றன. அப்பெரியார், தியானத்தால் - உரையால் - பாட்டால் - செயலால், நாட்டைத் தட்டி எழுப்பிவருகிறார்; நாடும் எழுச்சி பெற்றுவருகிறது. சுத்தானந்த அடிகளின் உரைநடை பல வழியிலும் போற்றற்குரியது; அது தமிழனுக்கு ஆறுதலளிப்பது; கிளர்ச்சி தருவது. நூலின் உள்ளுறை அறமுடையது; பொருளுடையது; இன்பமுடையது. * * * *

இத்துணைச் சிறப்பு வாய்ந்த சீரிய நூலை நாட்டுக்கு வழங்கிய அறவோர் திரு. சுத்தானந்த பாரதியார்க்குத் தமிழ்நாடு எவ்வழியில் கைம்மாறு செலுத்தப் போகிறது? அவர்தம் நூலைப் பயின்று, அதன் உள்ளுறை வழிநின்று வாழ்வு நடாத்தி, நாட்டைப் பண்டை நிலைக்குக் கொணர ஊக்கங்கொண்டு உழைக்கும் வாயிலாகக் கைம்மாறு செலுத்துவதாக!

இத்தகைய அறிவுக் கோயிலைத் தந்த பெரியார் வாழ்க; நீடு வாழ்க! அவர்தம் நூல் வாழ்க! அறம் வெல்க! தமிழ் வெல்க!

—திரு. வி. க

பொருளடக்கம்

		பக்கம்
	பதிப்புரை	
	அணிந்துரை (திரு. வி. க.)	
	பொருளடக்கம்	
க.	வாழ்வுத் தோட்டம்	9
உ.	வேதம்	11
௩.	படைப்பு	12
ச.	உலகிர்	14
ரு.	தேசாபிமானம்	14
சு.	வாழ்க்கை	15
எ.	அறநெறி	16
அ.	துறவு	17
கூ.	இடம்ப கண்டனம்	18
க0.	உலகின் பிணி	19
கக.	உலகின் பாம்புகள்	21
கஉ.	வெளிநாட்டுச் சாமான்கள்	23
க௩.	குடி மறுத்தல்	24
கச.	கொலை மறுத்தல்	27
கரு.	சுபநாள்	30
கசு.	பொன்மாயம்	31
கஎ.	அடிமைத்தனம்	34
கஅ.	சமூக வாழ்க்கை	35
ககூ.	சிக்கனம்	36
உ0.	நாகரிகம்	37
உக.	பயிர்த்தொழில்	38
உஉ.	நூற்று நெய்தல்	41
உ௩.	சாவும், சடங்கும்	43
உச.	கல்வி	46
உரு.	இளந்தமிழ் வீரர்	49
உசு.	புத்துயிர்	52
உஎ.	ஜனோபகார சங்கம்	55
உஅ.	கிராமப் பள்ளிக் கூடம்	59
உகூ.	இடம்	61
௩0.	பயிற்சி முறை	61
௩க.	நன்னெறி	63
௩உ.	தேக சுத்தம்	65
௩௩.	பெண்ணுக்கிரங்கு!	67
௩ச.	இல்லற வாழ்வு	71
௩ரு.	திருமணக் குறிப்பு	73
௩சு.	காதலர்	75
௩எ.	மனைவி	78
௩அ.	கணவன்	80
௩கூ.	அவதாரம்	81
ச0.	தேவீ !	82
சக.	வீர விளக்கம்	83
சஉ.	கடவுளுண்மை	91
ச௩.	உலகம் பலவிதம்	95
சச.	மதவாதம் வீண்	97
சரு.	சுத்தான்ம வாழ்வு	103
சசு.	உலக மாயம்	104
சஎ.	உலகியல்பு	107
சஅ.	உண்மைச் சுடர் வணக்கம்	111
சகூ.	சுத்த சக்தி	114
ரு0.	தேகி	115
ருக.	சுத்த சன்மார்க்கம்	117
ருஉ.	வாழும் வகை	129

உ

திருநூல்

அல்லது

தூய வாழ்வு

க. வாழ்வுத் தோட்டம்

வாழ்வுத் தோட்டம் எல்லையற்றது; இதில் வெற்றி மன்னர்போல வானளாவி நிவந்து கனி குலுங்கும் மரங்கள் ஒருபுறம் உள்ளன; மனவுறுதியைப்பற்றி யேறும் கடவுளன்புபோலப் பூங்கொடிகள் ஒருபுறம் ஓடு கின்றன; பலநிறப் பூச்செடிகள் பாத்தி பாத்தியாகவுள் ளன; பசும்புற்கள் தரையை மரகத மணிபோல் அலங் கரிக்கின்றன. இத்தோட்டத்தைப் புல்லும் அழகு செய் கிறது; தென்னை வாழை மா பலா போன்ற மரங்களும் பயனுற அணி செய்கின்றன.

உலகம், திருவருள் விளையாடும் தோட்டம். அதில், பலவகை ஜீவப்பயிர்கள் வளர்கின்றன. விதைத்து முளைத் துச் செழித்துக் கிளைத்துப் பூத்துப் பழுத்து உதிர்ந்து, மீண்டும் மரபை விதையூன்றி வளர்த்து வளர்த்து இந்த வாழ்வுத் தோட்டம் நிலைத்து நிற்கிறது. பிள்ளையாகி, இள மையாகி, வாலிபத்தை நுகர்ந்து, முதிர்ந்து, மரபைப் பின் விடுத்து ஐம்பூதக் கூட்டை யுதறிச்செல்கிறது ஜீவன். ஜீவத்தொகுதிகள் பல; எனினும், ஜீவசக்தி ஒன்றே. எல்லையற்ற வேறுபாடுள்ள உயிர்களில் உயிராயிருப்ப வன் அருளிறைவனே. புல்லின் பசுமையும் மாங்கனியின் இனிமையும் அவ னருள்விளக்கமேயாகும். இவ்வாழ்வுத் தோட்டத்திற் கனிகளும் உள்ளன; முட்களும் உள்ளன.

முட்களை வெளியிட்டுக் கனி விளைவிப்போம். உலகிலுள்ள எப்பொருளும் அற்பமன்று. அஃததற்கும் ஒரு நற்பயன் உண்டு. மனிதனுக்கு நெல், மாட்டுக்குப் புல் பயனாகும். நெல்லும் புல்லும் அஃததனிடத்திற் பெருமை பெற்றனவே. எதையும் இகழாது, இறைவன் படைப்பணிகளைச் சமநோக்காற் காண்போம். வாழ்வுத்தோட்டம் மேடுபள்ள முள்ளது. அதில் நன்னிழற் சாலைகளும் உண்டு; கரடுமுரடான முட்புதர்க் காடுகளும் உண்டு. பகுத்தறிவென்னும் விழியால் நன்னெறி கண்டு, நடந்து வீடு சேரவேண்டும். உள்ளந்தோறும் இறைவன் உள்ளான். அவனது திருவருட் சுடர் நம்மை நடத்துக! அவனால் நாம் உடல்கொண்டு வாழ்கிறோம். அவனை மறவோம். நம் நினைப்பும், மொழியும் செயலும் அவனுக்கே நிவேதனமாகுக! உடல் ஒரு கோயில். அதைச் சுத்தமாக வைத்திருப்போம். இவ்வுடல் கடவுளில்லம்; ஆருயிரன்பும், ஆண்டவ னன்புங்கொண்டு அதிற் குடியிருப்போம். 'நான், நான்' என்று இறைவன் இதயத்தில் நடம்புரிகிறான். அவனடிபற்றியே வாழ்வோம். அவனருளை இவ்வாறு வாழுத்துவோம் :

"கோடி இரவிபோல் எங்கும் விளங்கி, எல்லாவற்றையும் விளக்கும் அருட்சுடரே, உலகம் உனது திருவிளையாட்டு; ஐந்தொழிலியற்றும் ஆற்றலே, மழையானது கடலாவியாலெழுந்து, கடலிலேயே கலப்பது போல், உன் கருணையினாலெழுந்த ஜீவன் உன் கருணையிற் கூடுக! நீ வாய்மனங் கடந்த வாய்மை; வான், காற்று, தீ, நீர். மண் ஆகிய ஐம்பூதச் சேர்க்கையால் அனைத்தையும் ஆக்கினை; உனது திறமை வாழ்க! உனது நினைப்பே படைப்பு. கண்ணிற்காணும் கண்ணே, செவியுட்கேட்குஞ் செவியே, மனத்தில் நினைப்பவனே, ஜீவசாட்சியே, நீயே எம் உயிரும் உயிர்ப்பும் உயிராட்டமும் ஆவாய்; நீ எங்களை எப்பொழுதும் பார்க்கிறாய். நாங்கள் உன் கண்முன் தீயவை செய்யாதொழிய அருள்! உன் காதுகள் எங்கும் கேட்கின்றன. நாங்கள் தீயசொற்களைப் பேசாதிருக்க அருள்; எம் வாயையடக்கி, மனத்தைத் திறந்தருள்; எம் உட்கண்ணைத் திறந்து உன் னொளியைக் காட்டியருள்; எம் முறைகளைக் கேட்டருள்!

(க) நாங்கள் என்றும் உன்னை மறவாது உன் சக்தியால் உந்தப்பெற்று நன்மை புரிவோமாக;

(உ) எமக்காகவே வாழாது, பெரிதும் பிறர்க்காகவே நல வாழ்வு வாழ்வோமாக;

(ந) உடல், உரை, உள்ளம் அனைத்திலும் நாங்கள் தூயரா யிருக்கத் துணைசெய்;

(ச) எமது மனம் தீமை நினைக்கையில், உனது கோர ரூபத்தைக் காட்டித் தீமைப் பேயைத் துரத்து;

(ரு) உண்மை, பொறுமை, அன்பு, இன்சொல், அஹிம்சை, சமரசம், ஆன்மஞானம், தியாகம், சுயேச்சை உட்களிப்பு முதலிய நற்குணங்கள் எம்முடைய உறுப்புக்களாகுக;

(சா) உடை, உணவு, இருக்கை—இவற்றைப் பாபமற்ற தொழிலால் உன் குழந்தைகளாக நாங்கள் அடைவோமாக;

(எ) பாபங்களுக்கு மூலமான வறுமையும் மடமையும் எங்களை அணுகாதிருக்க அருள்;

(அ) எம் வாழ்வு உன் அருட்பணிக்கே யாகுக;

(கூ) உலகிற் கியல்பான இன்பதுன்பமாற்றங்களிற் சிக்காது, நாங்கள் என்றும் சமநிலையிலிருக்கும் அமைதியருள்;

(க0) உன் சிறப்பும், படைப்பும், அருளும் அனைத்தும் வாழ்க!”

உ. வேதம்

வேதம், உள்ளறிவு, கடவுளறிவு; வேதியர் உள்ளறிஞர், கடவுளறிஞர். உண்மையினும் உயர்மறை இல்லை; வேதம் உண்மை விளக்கம்; உண்மையைப் போலவே அது சாதிமத வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானது. வேதம் சுத்த சன்மார்க்கத்தைப் போதிக்கும். சந்=உள்ள பொருள்; சுத்த சத்தாவது அனைவருள்ளும் தானேதானான சுத்தான்மா; சுத்தான்ம சித்திக்கு வழிகாட்டுவதே வேதம். அஃது எந்த மொழியிலிருந்தாலும் அதைக் கற்றுப் பின்பற்றலாம். நிறைமொழி மாந்தர் உரைகளே வேதம்; ஆன்மானுபவம் பெற்ற மகாத்மாக்களின் அனுபூதி வாக்குகளே நிறைமொழியாகும். செந்

தமிழ் வேதமும், ஆரிய வேதமும் அத்தகைய அனுபூதி வாக்குகளே. வேதரிஷிகள், வியாசர், சுகர், வால்மீகி, வள்ளுவர், சங்கரர், இராமாநுஜர், மத்வர், மணிவாசகர், அப்பர், திருமூலர், ஔவை, நம்மாழ்வார்போன்ற அருட் புலவர் நமக்கு வேதமளித்தனர். உள்ளும்புறமும் இறைவனைக் கலந்து அவனன்பில் அவனறிவில் வாழ்தலே பாரத வேதசாரம். அன்பு, பொறுமை, இன்சொல், அகத் தூய்மை, பந்தநிவிர்த்தி—இவற்றால் வரும் முத்தியின்பத்தைப் புத்த மதம் கூறும். அன்பு, அஹிம்சை, வினையறு விடுதலை—இவையே ஜைனமத சாரம். பரிவு, பொறுமை, தியாகம், தன்னுயிர்போல் எவ்வுயிரையும் கருதும் அன்பு, எளிய வாழ்வு—இவற்றைக் கிறிஸ்து மதம் வற்புறுத்தும். அன்புறுதி, அடைக்கலம், உண்மை, இறைவணக்கம்—இவற்றை அல்குரான் உபதேசிக்கும். எல்லா வேதங்களும் அன்பு, உயிர்க்கருணை, பொதுநலம், சமரசம், உட்புறத் தூய்மை, வாய்மை—இவற்றையே உரைக்கின்றன. தீமை, பந்தம், ஆசை, பொய்—இவற்றை எல்லா வேதங்களும் கண்டிக்கின்றன. சுத்தி, முக்தி, சமத்துவம்—இவையே வேதசாரம். அன்பு, வாய்மை, தூய்மை, பொறுமை, அறிவு வளர்ச்சி, பரோபகாரம்—இவை எல்லாவேதங்களுக்கும் சம்மதமானவை. பெயர், வடிவ, வேடபேதங்களைக் கண்டு மருளற்க! பூச்சு, சிகை, ஆடை, சடங்கு—இவை யல்ல; வாய்மையும் தூய்மையும், அன்பும் அருளுமே வேத நெறி; சுத்தசன்மார்க்க வேதம் தழைத் தோங்குக! உடல்கள் பல; உயிரிறைவன் ஒருவன். உள்ளத்தைக் கோயிலாக்குக; அங்கே விளங்கும் சுத்தான்மக் கடவுளைத் தியானமலர் தூவி வழிபடுக! பிறகு, புற வேறுபாடுகளால் மனம் மாறாமல் எல்லாரும் உள்ளொன்றி வாழலாம். உள்ளமே வேதநூலாகும்.

௩. படைப்பு

உலகம் சக்தி விலாசம்; அதில் இறைவனருள் பலவாக விளையாடுகிறது. அருளிறைவன், உலகுயிர்களின் அம்மையப்பனவன். இறைவன் சத்து; சக்தி சித்து. இவர் ஆனந்த விரிவே படைப்பணிகளாகும்: "திருவருளே,

உன்னிடமிருந்தே கல்பமும் பிரளயமும் உண்டாகின்றன; உன் எண்ணமே உலகின்படைப்பு; உன் ஓங்காரமே உலகின் நிறைவு; உன் ஓங்காரத்தினின்றே ஒளிபிறந்தது; அதுவே சூரிய சந்திர நட்சத்திரங்களாயின. சூரியனுல் மழையுண்டாயிற்று; மழையால் பூமி உயிர்த்தது; பூமியி னின்று அன்னம் உண்டாயிற்று; அன்னத்தினின்று ஜீவ கோடிகளுண்டாயின. அன்னசாரமே விந்து! புல் பூண்டு செடி கொடி மரம் முதலிய மூலிகைகள்; பஞ்சு பவழம் நத்தை முத்து புழு பூச்சி நீர்வாழ்வன ஊர்வன பறவைகள் மிருகங்கள் மனிதன் முதலிய உயிர்க்குலங்கள்— அனைத்தையும் நீயன்றோ உண்டாக்கினை! மலை கடல் வனம் ஆறு சூரியன் முதலான இயற்கை யற்புதங்கள் உன் பெருமையைப் பேசும். உன் கட்டளையினுலே குளிர் காற்று உஷ்ணமான தேசத்தையும், உஷ்ணக்காற்று குளிர்ச்சியான தேசத்தையும் நோக்கியடித்துச் சுழல் கிறது. உன் ஆணையினுலேயே, சூரியன் கடலினின்று நீரை ஆவியாக்கி, மேகமாக்கி மழையைத் தருகிறுன். நீ ஒவ்வொன்றினுக்கும் கொடுத்துள்ள சக்தியினுலே அஃததுவும் தழைக்கிறது. நீயே செயலை உந்துகிருய்; பயனையளிக்கிருய். நீ எங்களுக்குள்ளே பிரியாதிருப்பத னுல் நாங்கள் அறிகிறோம்; இல்லையேல் மூச்சுவிடக்கூட எங்களுக்குச் செயலில்லை. நீயே எங்கள் மூச்சு. உன்னை என்று இழக்கிறோமோ, அன்றே எங்களையும் இழக் கிறோம். எல்லா உயிர்களினும் மேலான பகுத்தறிவை மனிதனுக் களித்தாய். உயிர்க்கருணையால் மனிதன் உன் கருணையை அடைகிறுன்; உயிர்களுக்குத் தீங்கு செய்தால் மனிதன் தீமைக்குள்ளாகிறுன். எரிமலையும் வெள்ளமும் இடியும், உன் கோபத்தின் விளக்கம். மழையும் தென்ற லும் நிலவும் உன் கருணையின் விளக்கம். உலகம் உன்வீடு; அதில் நாங்கள் ஓர் அபசாரமும் செய்யாதிருக்க அருள்; அதில் நாங்கள் சமத்துவ புத்தியோடிருக்க அருள்; ஒரு வர் உணவை மற்றொருவர் பறிக்காது, உழைப்பும் உதவி யும் பத்தியும் பரோபகாரமும் கொண்டு வாழவருள்! ஒவ் வொரு பொருளிலும் அருள் விளக்கமாகுக!”

௪. உலகீர்

நடமாடுங் கோயில்காள், உம்முள் உறையும் கடவுளுக்கு வணக்கம். உயிர்க்குயிரான அவனை அறிமின்; உடலுட் புகுந்த உத்தமனைக் காண்மின்! பிறகு, உங்களுக்குச் சாவும் பயமும் தீங்கும் ஒருபோது மில்லை: ஐம்பூதவுடல் ஐம்பூதங்களாகப் பிரிந்து போகும்; உயிர் இன்னொரு வினையுடல் பெறும்; இவ்வுலகம் எல்லாருக்கும் பொதுவானது; சமமானது. இதில் அனைவரும் சுதந்தரராக வாழலாம். போதிய மட்டும் உலகின் பயனை அனுபவிக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அவரவர் தேவையளவு இடம்பமின்றி யனுபவித்தால், உலகிற் குறைவேயிராது. சேர்த்துவைப்பதொன்றும் நம்முடன் வாராது. சேர்த்துவைக்க நாம் உலகிற்குவரவில்லை; வினைநீங்கி விடுதலை பெறவே வந்தோம். பொதுநலமான ஓர் உழைப்பால் உயிரை நிலைநிறுத்த உண்போம்; அன்பு அறிவு அருட்பணி—இவற்றால் வாழ்வை மாசறச்செய்து தெய்வத்தன்மை யடைவோம்; உழுதுண்போம்; நூற்று நெய்துடுத்துவோம்; ஆசை பொறாமை பொய் இடம்பம் ஆகிய தீமைகளை விடுப்போம்; தூய வாழ்க்கை வாழ்ந்து, பிறர்க்குதவி, அறவழி நின்று, அறவடிவான இறைவனைச் சேர்வோம். ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொரு சிறந்த செயலை நோக்கமாகக் கொண்டது. வந்த வினையை அறிந்து செய்து முடித்து, இருவினைக் கட்டற்று, இறைவனடிபற்றி இன்புறுவோம். இதுவே உலக வாழ்வின் பயனும்.

ரு. தேசாபிமானம்

பராசக்தி, எங்களை எவ்வளவு இன்பமான நாட்டிற் படைத்தாய்! இது புண்ணிய பூமி; இங்கே ஆடைக்கும், உணவிற்கும், அறிவு வளத்திற்கும் பஞ்சமில்லை, எங்கள் தேசமாதா, மகான்களின் அன்னை; எங்கள் இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் அவள் சக்தியே கனல்கிறது. எங்கள் உடல் பொருள் ஆவி மூன்றும் அவளுடைய தொண்டிற்கே உரியன.

எங்கள் நாடு யோக பூமி, தியாக பூமி; அதன் வடக்கே சிவசக்தியும், தெற்கே குமரியும் தவம் புரிகின்றனர். ஆரிய திராவிட முனிவர் இன்றும் இப்புண்ணிய பூமியில் தவக்கனல் பரப்புகின்றனர். இத்தவ நிலத்தின் ஒவ்வொரு துளி மண்ணிற்கும் வணக்கம்; நாமெல்லாரும் இப்பாரதாலயத்தில் தொண்டுவழிபாடு செய்வோம். இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர், யூதர், சீக்கியர், ஜரதுஷ்ட்ரர், புத்தர், ஜைனர் முதலிய எல்லா மதத்தினரும் ஒருகுல மைந்தராகப் பாரததேவியை அன்புசெய்வோம். நாம் ஆன்ம வீரராக அவள் சந்நிதியில் நிற்போம். ஆன்ம சக்தியே அவள் நமக்கீந்த வரம். அதைக்கொண்டு நாம் அவளை அரியணையேற்றுவோம். ஆன்மநேய வாழ்வால், உலகின் சண்டைகளையெல்லாம் தீர்ப்போம்.

எங்கள் நாட்டை வறுமையும், மடமையும் அணுகாதிருக்கட்டும்; எங்கள் ஆன்ம சக்தியும், தீரமும், சுத்த சன்மார்க்க வாழ்வும் எழில்பெற்று விளங்கட்டும்; அடிமைத் தளைகள முறிந்து, ஆண்மை தழைக்கட்டும்!

பாரததேவி, உன் வளமும், வண்மையும், வாய்மையும், அறமும், திருவும் ஓங்குக; உன் மக்கள் உலகின் ஞான விளக்குகளாகுக; உன் மங்கல மறையொலிகள் மனதில் ஊறுக! உன் புண்ணிய நதிகளுக்கு, தவமோங்கும் மலைகளுக்கு, சிவமோங்கும் தமிழுக்கு, கம்பீரமான ஆரியத்திற்கு, திருவோங்கும் க்ஷேத்திரங்களுக்கு, மகான்களின் திருவடி தோய்ந்த மண்ணிற்கு வணக்கம் வணக்கம்! எந்தாய் வாழ்க!

௬. வாழ்க்கை

உண்டுறங்கிச் செல்வதே வாழ்வின் நோக்கமன்று.

நமது ஜீவநதி, கருணைக் கடலாகிய ஈசனிடமிருந்து உலகைச் செழிப்பிக்கவும், பிறர்க்குதவியே தன்னைத் தூய்மை செய்து முடிவில் ஈசனுடன் இரண்டறக் கலக்கவுமே வந்தது; மோக சோக வனாந்தர மண்ணில் வற்றிப்போகவன்று. ஆன்மஞானம், அருள், அறம், அன்பு, வாய்மை, தூய்மை, சீர்மை, நேர்மை, தற்காப்பு,

ஒப்புரவு, நல்ல தொழில்முயற்சி ஆகியவை வாழ்வைப் பெருமை செய்யும். ஒருவன், அருட்செல்வத்தையே பெரிதும் வளர்க்கவேண்டும். உண்ண, உடுக்க, இருக்க, விருந்தோம்ப, அறிவை வளர்க்கப் போதுமான பொருட் செல்வம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். சமுதாயத்திற் குப் பயனுள்ள ஒரு தொழிலால் அச்செல்வத்தைப் பெறல்வேண்டும். பேராசை கூடாது. சிறுகக் கட்டிப் பெருக வாழவேண்டும். எளிய வாழ்வும் பெருகிய நோக்கமும் வேண்டும். அசத்திய வழியில், அருளின்றி, அன்பின்றி, பிறர்நோக வஞ்சமாகப் பொருளீட்டி, அதைப் பூட்டித் தனக்கே மாளிகை கட்டிச் சுற்றிலு முள்ள ஏழைகளின் கண்ணீரைக் கண்டு கரையாது தன் சுகபோகங்களையே கருதுவோன், வாழ்க்கைப் பயனைப் பெறுதவனுவான். நமது வாழ்க்கை ஒரு மணமலர். அஃது அருள்மணம் பரவுக; இறைவனடி சேர்க! உலகின் துர் நாற்றத்தில் வீழ்ந்து வாடிப் போகவேண்டா! பிறப்பவர் இறப்பதுறுதி. இருக்கும்போதே ஒவ்வொரு மூச்சும் அருட்பணியிலும் அறிவுவளர்ச்சியிலும், கடவுளன்பிலும் செல்லவேண்டும். நன்முயற்சி, பத்தி, பரோபகாரம்—இம் மூன்றும் தூய வாழ்விற்கு இன்றியமையாதவை.

எ. அறநெறி

வாழ்வை மாசறுத்துத் தனக்கும் பிறர்க்கும் மாசற்ற இன்பமளிக்கும் சுத்த சன்மார்க்கமே அற நெறி யாகும். வாய்மை, தூய்மை, அன்பு, பொதுநலம், ஆன்ம நேயம்—இவை அறத்தின் உயிர் போன்றவை. அறமே இன்பம்; அறத்தால் வருவதே இன்பம். அறியாமையில் நம்மைத் தளைப்பதெல்லாம் அதருமமாகும். கட்டவிழ்த்து உண்மையான விடுதலை யளிப்பதே அறமாகும். ஒருவன் பிறர்க்கு அடிமையாகாமலும், உணவுடைக்குப் பிறரை எதிர்பாராமலும், நேர்மையான உழைப்பாற் பிழைக்க வேண்டும்; காமக்குரோதாதிகளை அடக்கியாள வேண் டும். ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப் புலமையுண்டு. அதை அறிந்து வளர்த்து உலகிற்குப் பயனுகும்படி சீர்பெற வேண்டும். அடிமைத் தொழிலையும், பாபச் செல்வத்தை

யும், இரத்த வுணவையும், சுகபோகச் சோம்பலையும் பொறாமைச் சூழ்ச்சிகளையும், இடம்பக் கூத்தையும், இழி செயல்களையும் அறிவுள்ள மனிதன் நீக்கவேண்டும். அறத்தை, 'இல்லறம், துறவறம்' என முன்னோர் வகுத்தனர். உலகிற் பெரும்பாலார் இல்லறமே விரும்புவர்; இல்லற மின்றேல் உலகில்லை. மனத்துறவுடன் இல்லறம் போற்றலே சிறந்த அறநெறியாகும். அன்பும் அறமும் சேர்ந்த இல்லறமே, மனிதவாழ்வின் பண்பாகும். இல்லறத்தார் வள்ளுவர் குறளைப் பின்பற்றி வாழ்க!

அ. துறவு

மனத்தி லருண்மல்கி மாணுலக முய்யுந்
தனைத்துறக்குந் தொண்டே தவம்.

தன்னகந்தையை விடுவதே துறவு. சந்திரன் தன் குறைகளைக் கருதாது, மேகம் தன்னை மறைத்தாலும் உலகிற் கொளிதருகிறான். தன்னைக் கோடாரியால் சிதைப்பவனுக்கும் மரம், கனியும் நிழலும் கொடுக்கிறது. எரிவதனால் தன்னிடமுள்ள எண்ணெயும் திரியும் குறைந்தாலும், உலகிற்கு விளக்கு வெளிச்சம் கொடுக்கிறது. அதுபோலவே பஞ்சபூதவிகாரமான உடலுக்கு வரும் இடர்களையும் பொறுத்து, நடமாடும் கோயில்களாகிய மக்களுக்கு அருட்பணி செய்வதே சிறந்த துறவாம். துறவும் தொண்டும் சேர்ந் தியங்கவேண்டும். தியாகமும் போகமும் யோகமும் சேர்ந்து வாழ்வை உயர்த்தவேண்டும். தானும் உலகும் நலம்பெற வாழவேண்டும்; பொது நலத்தில் சுயநலத்தைக் கரைக்கவேண்டும். காட்டுத் தனிமையில் மனிதவாடையின்றி யிருப்பது வறட்டுத் துறவாகும். குரங்குகளும் காட்டில் வசிக்கின்றன; அவையும் பழங்களைத் தின்றுகொண்டிருக்கின்றன. குளிர் வட்டக் காடிகளும் 6 மாதம் பனிக்குகையிலுறைகின்றன; இவை துறவிகளாகுமா? மனித தருமத்தை நன்குணர்ந்து அதை நிலைநாட்டும் தியாக வீரரே நமக்கு வேண்டும். எவனொருவன் ஆசையாணவ மாயங்களுக்கு அடிமையாகாமல் உலகக் கோயிலின்

பணியைச் செய்கிறனே, அவனே சிறந்த துறவி. ஜனசமுதாய முன்னேற்றத்திற்குத் தன்னை அர்ப்பணஞ் செய்து, பேர்புகழ் கருதாது தன் திறமைகளைக்கொண்டு அருட்பணி புரியும் தியாகி, கர்மயோகியாவான். சடையும் மொட்டையும் காவியும் அல்ல, அருளும் தன்னறிவும் அன்புப்பணியுமே துறவிற் கழகாகும். ஏசுநாதரும், நபிநாயகமும், அப்பரும், மகாத்மாவும் துறவிகளுக்குச் சிறந்த உதாரணமாவர். 84 கோடி ஜீவராசிகளிலும் தன்னையே காணும் சமதரிசனம் துறவிக்கிருக்க வேண்டும்; மனோவாக்குக் காய சுத்தம் அவனுக்கு வேண்டும். துறவிக்குப் பொருளாதாரச் சுதந்தரமும் வேண்டும். வயிற்றிற்கு அரும்பாடு படும் சம்சாரிகளிடம் பிச்சையை எதிர் பாராமல், துறவி தனக்கிசைந்த ஒருதொழில் செய்தே உண்ணவேண்டும். திரிகரணசுத்தம், தியாகம், தியானம், அஹிம்சை, சாந்தம், பிரமசரியம், மிதமான ஆகாரம், ஆன்ம சுதந்தரம், புலனடக்கம், மனோஜயம், காமஜயம், பரோபகாரம்—இவை துறவிக்குப் பெருமையாகும். துறவிக்கு ஜாதிமத பேதம் கூடாது. தனது தேவைக்குமேல் துறவி சேர்க்கக்கூடாது; நாளைக் கவலையில்லாமல், வந்ததை யுவந்து, சிந்தையை இறைவனிடம்வைத்து, அவன் மயமாகவே ஆன்மாக்களைக் கண்டு தொண்டு செய்யும் துறவிகள் நமது நாட்டில் பெருகி வாழ்க!

௯. இடம்ப கண்டனம்

காலதேச வர்த்தமானங்களுக் கேற்றபடி மானமாகப் பிழைக்க ஒவ்வொருவனுக்கும் பொருள் வேண்டும். அப்பொருளை, ஜனசமுதாயத்திற்குப் பயனுள்ள உழைப்பால், தேவையளவு பெறவேண்டும்; எஞ்சிய பொருளை நாடோங்க வழங்கவேண்டும். அநியாயப் பொருள் தேடிப் பகட்டுச்செலவிற் கிறைத்தலே இடம்பமாகும். பகல் தீவட்டி போடும் இடம்பம், இராவிளக்கிற்கும் இல்லாத வறுமையில் முடியும். பசித்துண்ணும் உழைப்பாளி, விருந்துண்ணும் பணக்காரனைக் காட்டிலும் திடசாலியாயிருக்கிறான்; ஆடையாபரண மினுக்கினாலும், செல்வச் செருக்கினாலும், பெட்டகத்திற் புதையுண்ட பணத்

தாலும், பலபேர் அனுபவிக்கவேண்டிய செல்வத்தை அநாவசியமாக ஒருவனே பேராசையுடன் சுமந்து திரிகிறன். கடுக்கன் இல்லாது காது கேளாதா? இடம்பமான வாழ்க்கை பாபப் பொருளேத் தேடும்; நம்மைத் தீய வாழ்க்கையில் ஆழ்த்திவிடும். மானங்காக்கப்போதிய ஆடையணிக! இயற்கையழகைப் பூச்சினல் மறைக்க வேண்டா! எளிமையே அழகு. இடம்பத்தினல் தேவை பெருகும்; தேவை பெருகினல் தீய வழிகளிலும் பணம் சேர்க்க வேண்டிவரும்! கடன்பட நேரிடும். இடம்பச் செல்வரைப் பார்த்து நடிக்காமல் கடன்வாங்காமல், அவரவர் நிலைமைக்கேற்ற சிக்கனத்துடன் எளிய வாழ்வு வாழவேண்டும். மனிதா, உன் கைகால்களை உபயோகி; உலகில் மற்றவரெல்லாம் சுகமாயிருக்க வேண்டுமானல் நீ எளிய வாழ்க்கை நடத்து; ஒருவன் தன்னுடைய தேவைகளை எவ்வளவுக் கெவ்வளவு சுருக்கிக் கொள்கிறனே, அவ்வளவுக் கவ்வளவு கவலையற்று வாழ்வான்.

௧௦. உலகின் பிணி

அறம் நிலைகுலைந்தது; நாத்திகம் வலுத்தது; ஆசையாணவப் பேய்கள் உலகில் நடமாடுகின்றன. மனிதர், தன்னலமும், போர்வெறியும், பணப்பைத்தியமும், இடம்பமும், திருட்டும், காமமும், பொறுமையும் நிறைந்த பாழ்வீடுபோ லானர்கள். ஆன்மஞான விளக்கைக் கல்நெஞ்சு வளைத்துக்கொண்டிருக்கிறது. மனிதன் மடமையிருளில் தடுமாறுகிறன். அகந்தையால் அவன் செய்யும் காரியங்களும் இருளாயிருக்கின்றன. எளியனை வலியன் இரக்கமின்றி நலிக்கிறன்; நிலத்திமிர்கொண்டு போர் செய்கிறன்; மனிதர்களைக் கொல்லுகிறன்; திருடுகிறன்; ஆயிரம் மனிதரை ஒரு நொடியில் கொல்லுவதற்கு வெடி மருந்துகளும், பீரங்கிகளும், கொலைக்கருவிகளும் செய்கிறன்; ஒரு தேசத்தை விரைவாகக் கொள்ளையடிக்கப் பல வாகனங்களைச் செய்கிறன்; ஆயிரம் பேர் உழுது உண்ணக்கூடிய நிலத்தை ஒருவன் அபகரிக்கிறன்; ஆயிரம் ஏழைகள் வசிக்கக்கூடிய இடத்தை வளைத்து, ஒருவன் மாளிகை கட்டிக்கொள்கிறன்; பிறந்தபோது தன்னேடு கொண்டுவந்தவன் போன்று, "தனதே உலகம்" என்

கிறான். தன்னைப்போன்ற மாந்தரை அடிமைப் படுத்து கிறான். உழைப்பது ஏழை; செழிப்பது செல்வனா? மரம் வைத்து வளர்ப்பவன் பாட்டாளி; பழம் தின்று கொழுப்பவன் சுகவாசிப் பணக்காரன். உழைத்தும் பட்டினியோடு சாவது ஏழை; உழையாது விருந்துண்டு உறங்குவது பணக்காரன். பிள்ளை குட்டிகளோடு, இடிந்த மண் வீடுகளில் மழையிலும் வெயிலிலும் வறுமை யிலும் மடமையிலும் வருந்தும் ஏழைச் சகோதரரைக் கண்டால், அந்தோ, இரத்தக் கண்ணீர் வருகிறது! செல் வம் பொழியு மெங்கள் நாடு பீரங்கிவாயில் துடிக்கிறது; மிருக பலத்திற்கு அடிமையா யிருக்கிறது நாட்டின் பொருளெல்லாம் பகற்கொள்ளை போகிறது. எங்கே பார்த் தாலும் எத்துறையிலும் அன்னியர் ஆதிக்கமே காணப்படு கிறது. தீய கல்வி விஷம்போல் நாட்டுச் சிறுவர்களைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது. அயல் நாட்டு இயந்திரச் சாமான்களுக்கு நமது வளநாடு சந்தையாயிருக்கிறது. பல இயந்திரங்கள் நாட்டிற் புகுந்து பணக்காரரையே பணக்காரராக்கிக் குடிசைக் கைத்தொழிலை ஒழித்தன. பருத்தியும் இராட்டினமும் தறியும் உள்ள நாட்டிற்குப் பதினாயிரம் மைல் தூரத்திலிருந்து துணி வரலாயிற்று. அயலான் துணி கொடுத்து (டக்கா மஸிலின் நூற்ற) இந்தியர்கள் உடுத்தும் இந்த நிர்வாண நிலை என்றைக்கு ஒழியும்? நாட்டில் வயிற்றுக் கவலையே பெருங்கவலையா யிருக்கிறது. நமது நாட்டிற்குத் தனிப் பெருமை தரும் தெய்விக நூல்களைக்கூட அன்னியர் மொழிபெயர்த்து நாம் படிக்கும் நிலைமையிலிருக்கிறோம்! வியாபாரக் கொள்ளை மட்டுமன்று; வேதாந்தக் கொள்ளையும் நடக் கிறது! நமது விலையுயர்ந்த வாழ்க்கை ஒரு சாண் வயிற்றிற்கே தொத்தடிமைப் பட்டுக் கிடக்கிறது. நமது அறிவுகூட நமக்கு உரிமையில்லா திருக்கிறது. நமது நாடு மெலிந்தது; புலிசூழ்ந்த மான்போல இந்தத் தருமநிலம் தவிக்கிறது. எதிர்க்க பலமில்லை; நம்மிடையே ஒற்றுமை யில்லை; ஆன்மபலம் நமக்குள் இருக்கிறது; அதைத் தவக் கனலால் தூண்டவேண்டும். அச்சம் ஒழிய வேண்டும். நாம் ஒருகுல வீரராகப் பொதுநலத்திற்கே வாழ்வைப் பலிதானமாக்கவேண்டும். சாதிமத வேறுபாடுகளைக் கொண்டு நம் நாட்டார் தற்கொலை புரிகின்றனர். தீண்

டாமை இந்து மதத்தைத் தீண்டலாக்கியது. இத்தீட்டு இப்போது ஒழிந்துவருகிறது. மதவித்தியாசம் உலகின் ஒற்றுமையைக் கெடுத்துப் பயங்கரமான போர்களை உண்டாக்கியது. சகல மதங்கட்கும் அடிப்படை சுத் தான்மா. இதை மக்கள் மறந்தனர்; நல்லோர் உபதேசத் தைத் ஆறந்தனர். வறுமையும், மடமையும், அநீதியும், பிறநாடுகளைக் கொள்ளையடிக்கும் பேராசையும், வஞ்சக மும், அன்னிய மோகமும், குண்டுணித்தனமும், செல் வச் சோம்பலும், உயிர்க் கொலையும் மக்களைக் கொலை செய்கின்றன. உலகம், ஆணவ அஞ்ஞானப் பிரளயத்தில் மூழ்கி யிருக்கிறது. ஆ, எத்தனை நோய்கள் மாந்தரைப் பிணித்துத் தொல்லை செய்கின்றன!

கக. உலகின் பாம்புகள்

கருநாகத்தைவிடப் பொருமை கொடிது! பாம்பிற்குப் பல்லில் மட்டும் விஷமுண்டு; பொருமைக்காரனுக்கு நினைப்பிலும் செயலிலும் சொல்லிலும், மூச்சிலுங்கூட விஷமிருக்கிறது. பாம்பு தன் சட்டையை மட்டும் கழற் றும்; தன் விஷத்தையும், கோபத்தையும் போக்காது. மனிதன் வெளியே நாகரிகம் பகட்டுகிறான்; பழைய ஆசாரங்களை உதறி யெறிந்ததாகப் பேசுகிறான். உள்ளே வஞ்சனைகள் புகுந்து அவனது நெஞ்சை, அதருமக் காடாக்குகின்றன. மனிதன் உடலழுக்கைமட்டும் நீக்க நீராடுகிறான். மனதில் காமக்குரோதாதி அழுக்குகள் மண்டிக்கிடக்கின்றன; அவற்றை ஞானமுழுக்கினால் அவன் நீக்கவேண்டும். மனிதர்களைக் கண்டால் பாம்பு அஞ்சி ஓடுகிறது. தருமத்தைக் கண்டால் மனிதன் அஞ்சி ஓடுகிறான். பாம்பு நல்லோர் தீயோரெனப் பாராது கடிக்கிறது. பகுத்தறிவிருந்தும், மனிதன், தன் பொருமை யால் எல்லாரையும் துன்புறுத்துகிறான். தன் விஷமே, பாம்பிற்குப் பலருடைய பகையைச் சம்பாதிக்கிறது; தன் அகம்பாவமே மனிதனைச் சத்துருவாக்குகிறது. பாம்பு, தான் முயன்று வீடு கட்டாமல் எளிய கறை யான்கள் சிரமப் பட்டெழுப்பிய புற்றுகளில் நுழைந்து கொள்கிறது. மனிதன் தன் முயற்சியால் தூயவழியில்

கைகால்களை உபயோகித்துப் பிழைக்காமல், எளியவர் உணவையும் உழைப்பையும் கைப்பற்றுகிறான். ஆ, செல்வச் செருக்கால் எழுந்த ஆடம்பரங்களைச் சுற்றி ஏழையின் கண்ணீர் சலசலத் தோடுகிறது! பாட்டாளி பசியால் வருந்த, அவன் உழைப்பின் பயனைக் கொள்ளையடித்துப் பொருள் சேர்த்துப் பூட்டுகிற கொடுமை ஒழியவேண்டும்! மணியை நாகம் காப்பதுபோலப் பணத்தைக் கருமி காக்கிறான். குரோதம் பெரிய மலைப்பாம்பைப் போலும். அதனாற் பற்றப்பட்டவன் கொலைக்கும் அஞ்சமாட்டான்; அற்பத்தனமாக நடந்துகொள்வான். குடும்பச் சண்டைகள் குரோதத்தால் வளரும். காலகோடி சர்ப்பத்தைவிடக் காமசர்ப்பம் மிகவும் கொடியது. இதன் வாடை பட்டாலும் மனிதன் தன் பரிசுத்தத்தை இழப்பான்; இதைப் பார்த்தாலும் மனம் கலங்குவான்; இதன் அருகில் போனால் பஞ்சமா பாதகங்களையும் அடைவான். இராவணன், கீசகன் முதலியோர் காம சர்ப்பத்தால் தீண்டப் பட்டு இறந்தனர். இறைவனே, காம காஞ்சன சர்ப்பங்களுக்கு உனது அருளே பெரிய மருந்து; உனது திருநாமமே மந்திரம். காமம் குரோதம் லோபம் மதம் மாச்சர்யம் ஈர்ஷை முதலிய பாம்புகள் மனப்புதரிற் பதுங்கா வண்ணம் மனிதன் கவனமாயிருக்கவேண்டும். மனதிலுள்ள புதர்களை யெல்லாம் நீக்கி, அதைப் புண்ணியக் கோவிலாக்க வேண்டும். மோகத்தையும் பேராசையையும் சஞ்சல புத்தியையும் அகங்காரத்தையும் விடுத்துச் சுத்தஞான வுணர்வென்ற மூலிகையை மனதில் வளர்த்தால், அஞ்ஞானப் பாம்பு வந்து அடையாது; மனதில் ஒளியும், நன்மணமும், கருணையும் புகும்படி, அதைத் திருவருளுக்குத் திறக்க வேண்டும். அருளொளியாலே இருளொழியும். மனிதன் உள்விழிப்புட னிருந்து, காமக் குரோதாதிப் பாம்புகளின் அரவம் கேட்டாற்கூட எழுந்து அதை எதிர்த்து விரட்டியடிக்கவேண்டும. எலி நிறைந்த கூரையில் பாம்பு வரும்; ஆசை நிறைந்த உள்ளத்தில் அஞ்ஞானப் பாம்பு வந்து புகும்.

கஉ. வெளிநாட்டுச் சாமான்கள்

ஒவ்வொருவரும் தமக்கு அவசியமான சாமான்களை நேர்மையான உழைப்பினால் அடைக! மனிதனுக்கு அவசியமாக வேண்டியவை உண்ணவும், உடுக்கவும், வீடு கட்டவும், அறிவை வளர்க்கவும் வேண்டிய பொருளணிகளே. அவரவர் நாட்டில் விளையும் தானியங்களையே மக்கள் உண்பார்களாக. இரும்புச்சாமான்களும், மரச்சாமான்களும், பாத்திரங்களும், துணிமணிகளும் உள்நாட்டிலேயே செய்யப்படல் வேண்டும். பணத்திற்காக ஆசைப்பட்டு நாட்டின் மூலப் பொருள்களை அயல்நாட்டிற்கு அனுப்புவதும், இங்கே இருக்கும் சாமான்களை நிராகரித்து அதே பண்டங்களை அயல் நாட்டினின்று வாங்குவதும், தேவையானவற்றைச் செய்துகொள்ள இயல்வளங்களிருந்தும் தொழிலுறக்கங் கொண்டு பிறநாட்டுப் பொருள்களை வாங்குவதும், சுதேசத்தைச் சூறையிடுவதற்கு ஒப்பாகும். பத்தினியிருக்கப் பரத்தையை மணப்பவன் செயல் எவ்வளவு கொடிது! அன்னிய மோகத்தால் நம் நாட்டின் செல்வம் அழியும்; வறுமையும் சோம்பலும் இடம்பமும் மடமையும் பெருகி நாடு கெடும்; நாட்டின் சுதந்தரம் போய்விடும். ஜனங்களெல்லாம் அடிமையாவார்கள். அடிமையுற்ற மக்களுக்கு ஆன்ம பலமும், சரீர பலமும் போய்விடும். ஒவ்வொருவரும் எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித்துப் பாவமற்ற வழிகளில் தத்தம் உடைஉணவுகளைச் சம்பாதித்துக் கொண்டால், அயல் நாட்டை எதிர்பார்க்க வேண்டியதேயில்லை. நம் நாட்டில் பஞ்சும் இராட்டினமும் தறியும் இருக்கும்போது, வெளிநாட்டுத் துணியை ஆதரிப்பது, நம்மை நாமே நிர்வாணமாக்குவதற்குச் சமானமாகும். நாட்டுணவைவிட்டு அயல் நாட்டு உணவுகளை வரவழைத்தல், நம் நாட்டைப் பட்டினி போடுவதற்குச் சமானமாகும். நாட்டுவளத்திற்கேற்றபடி அளவறிந்து வாழ்வது சுதந்தரத்தின் முதற்படியாகும். அளவு கடந்து தேவைகளைப் பெருக்கிப் பிறநாட்டுப் பொருள்களை ஆவலுடன் வாங்குவதும், கணவன் அன்புடன் தந்ததை நிராகரித்து, உயர்ந்த ஆடையாபரணங்களுக்காக ஆசைப்பட்டுப் பரபுருஷனை

இச்சித்துக் கெடுவதைப்போலும். நாட்டின் பொருளே நமது பொருள்; அதை நுகர்வதே பாங்காகும். பிற நாட்டின் பொருள் நம்மை அடிமைப்படுத்தும் பிணி யாகும். இடம்பச் செருக்கைப்போல பிறநாட்டு மோக மும் வறுமை தரும் தொற்றுநோய் போன்றது.

கூ. குடி மறுத்தல்

தென்னை பனை திராட்சை இம் மூன்றும் நற்பயனுள் ளவை: தென்னைமரத்தின் ஒவ்வொரு பாகமும் மனித ருக்கு மிகவும் பயனுள்ளது. மரம் வீடு கட்டவும், ஓலை கூரை வேயவும், தட்டி முடையவும், ஈர்க்கு துடைப்பத் திற்கும், நார் கயிறு திரிக்கவும், தேங்காய் உண்ணவும், எண்ணெய் பிழியவும், பாளைநீர் இனிமையான வெல்லம் செய்யவும் பயனாகும்: திராட்சைப்பழம் இரசமான உண வாகும். பனைநுங்கும் இனிய உணவாகும். மனித சமூகத்திற்கு நன்மை பயக்கும் இவற்றின் சாற்றைக் கள்ளாகவும் சாராயமாகவும் செய்து குடித்து மனிதன் மதிமயங்கி அழிகிறான். கள்ளென்னும் நஞ்சை யருந்தி, வெறிபிடித்தலையும் மாக்களை என் சொல்வது! கொலைக் கும் களவுக்கும் சூதிற்கும் காமக்களியாட்டிற்கும் குடி வெறியர் அடிமையாகி, வாழ்வைப் பாபநரக மாக்கு கின்றனர். ஏழை மனிதன், நெற்றி வியர்வை சொட்டச் சொட்ட நாளெல்லாம் உழைத்துச் சம்பாதிக்கும் அரை ரூபாவில் நான்கணாவிற்குக் குடித்துவிட்டு, மீதி நான்கணா வையும் கள்மயக்கத்தில் உதறி வெறி யாட்டமாடி விட்டு, வெறுங் கையோடு தடுமாறி வாய் நாறி ஆபாசமாகக் கூச்சலிட்டு வீட்டை யடைகிறான். மனைவிமக்கள் இவ னுடைய கூலிக்காகவே பட்டினியோடு ஆவலாக எதிர் பார்த்திருந்து, இவன் வந்ததும் "குடிக்கக் கஞ்சியில்லை" என்று சொல்லி முறையிடுகிறார்கள். பணம் கேட்கக் கேட்கக் குடிவெறியில் மனைவியையும் மக்களையும் நொய யப் புடைத்துத் தானும் நிலை தடுமாறி விழுந்து புரண்டு கூக்குரலிட்டுத் தெருவிலுள்ளோர் சமாதானத்தையும் கெடுக்கிறான், குடிகாரன். ஏழைக் குடியரும், இடம்பக் குடியரும் சேர்ந்து உலகைப் பித்தர்கூட மாக்குகின்றார்

கள். இவர்களோ மனிதர்கள்? நாகரிகக் குடியர், அயல் நாட்டினின்று விலையுயர்ந்த சாராயங்களை வரவழைத்துக் குடித்து நம் நாட்டுப் பொருளைக் கோடி கோடியாகக் கொள்ளை கொடுக்கிறார்கள். இக்குடியரையும், இவர்குடி கெட்டழிவதையும் கண்டால் உள்ளம் துடிக்கிறதே; கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறதே! அந்தோ, என் இம் மனிதர் சாராயக் கிடங்கில் விழுந்தழிகின்றனர்?

உலகோரே, பாளை நீரினின்று வெல்லம் செய்யுங்கள்! அந்த வெல்லம் உடம்பிற்கு நல்லது. பாளையை அடிக்கடி சீவுவது தேங்காயின் இனிப்பைக் கெடுக்கும். பாளைநீரை அடிக்கடி கொடூரமாக வடித்துப் புளிக்க வைத்துக் கள்ளாக்கி ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களை மயங்க வைத்துப் பழி சுமந்து உலகத்தைப் பாவக் காடாக்காதீர்கள்; கள்ளினின்று வரும் பாவப் பொருளைக்காட்டிலும் தேங்காய் விற்பதனால் வரும் தருமமான இலாபம், இலாபமென்று தோன்றவில்லையா? அந்தோ! கடவுளுக்குக்கூட ஊன் கள் சுருட்டு வைத்து வழிபடுகிறீர்களே! கோவிலுக்குப் போகும்பொழுதுகூட சாராயம் அருந்தவேண்டுமா? திருவிழாக்கள் பொங்கல் தீபாவளி முதலிய நன்னாட்களிலுங் குடித்துவிட்டு ஆடவேண்டுமா? குடியர்களே, உங்கள் பாவத்தை யுணர்ந்து இக் கொடிய பழக்கத்தை விட்டுவிடுங்கள்; உங்கள் கூலிப் பணத்திற்கு நல்ல உணவுப் பொருள்கள் செய்து உண்ணுங்கள், உங்கள் குடும்பங்களைப் பட்டினி போடாதீர்கள்; தருமதேவதையின் கோபத்திற்கு ஆளாகாதீர்கள்! தென்னையைக் கட்குத்தகைக்கு விட்டுத் தீயவழியில் பொருளீட்டப் பேராசை கொள்ளும் பணக்காரர்களே, நீங்கள் தேவைக்கதிகமாய்ச் சேர்த்து வைத்தது போதாதா? இன்னமும் ஏழைகளின் பணத்தைக் கொள்ளையடித்து அவர் குடியைப் பொட்டலாக்க வேண்டுமா? மனிதரின் முக்கிய உணவாகிய தேங்காயை, கடவுள் வழிபாட்டிற்குரிய தேங்காயைப் பெருக விடுங்கள்! கள் இறக்கும் தொழிலாளிகளே, பாளைநீரைச் சுத்தமான பாத்திரங்களில் ஊற்றி, இஞ்சிச் சாற்றைச் சேர்த்து நல்ல கரியடுப்புக்களிற் காய்ச்சி அடையாக்கித் தென்னை வட்டுக்கள் செய்து மிதமாக உபயோகப் படுத்தினால் நன்மை

தரும். ஆப்காரி இலாக்கா வேலைக்காரர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டா. நம் நாட்டுச் செல்வத்தில் 50 கோடி ரூபா அயல்நாட்டிற்குப் போகிறது. வஞ்சமும், பொய்ப் பிராதுகளும், களவும், கொலையும், பஞ்சமும் குடியினாலேயே உண்டாகின்றன. கள்ளை விற்றுக் கல்வியளிக்கிறார்கள்! இஃதென்ன கொடுமை? சன்மார்க்கப் பிரசாரம் பலமாகச் செய்யவேண்டும்; கட்கடைகளெல்லாம் ஒழிந்து பஜனை மடங்களாக வேண்டும். நம் மாகாண தேசீய மந்திரிசபை, இப்பணியை ஓரளவு வெற்றியுறச் செய்து காட்டிற்று. சன்மார்க்க வுணர்ச்சி மக்கள் உள்ளத்தைத் தொட்டால் பஞ்சமா பாதகங்கள் ஒழியும். அரசாங்கச் சட்டத்தால் கள்ளுக்கடைகளை மூடவேண்டும்; சுயாட்சி வந்தால் அப்படிச் செய்யலாம். வருக விடுதலை; ஒழிக தீமைகள்!

பாலை நீரினின்று வெல்லம் செய்யும்படி, அறவோர் எங்கும் பிரசாரம் செய்க; தென்னையைக் கள்ளுக் குத்தகைக்கு விடாதபடி மறியல் செய்க; சாதிக் கட்டாலும் சமய உறுதியாலும் ஜனங்கள் கள்ளைத் தவிர்க்கும்படி செய்க; கிராமப் பஞ்சாயத்தார் குடியருக்குத் தக்க அபராதம் போடுக; அவருக்கு நன்ருகப் புத்திமதி சொல்லுக; குடிவெறி வரும்போது நீராகாரத்தையாவது, கஞ்சியையாவது உண்ணுமாறு கூறுக; குடிவெறி நேரமாகிய மாலையில், இனிய பிரசங்கம் பஜனை நாடகம் கோவில்வழிபாடு இவற்ருல் மாந்தர் மனதை நல்லவழியில் திருப்புக; கள் விற்பனை அதருமமென்பதை எடுத்துரைத்துக் கட்கிடங்குக்காரரை வேறு யோக்கியமான தொழில் செய்யும்படி வேண்டுக! அறவோர், கள்ளுக்கடைக்கு எதிரே நல்ல தண்ணீர்ப்பந்தலும் கஞ்சித்தொட்டியும் வைத்துக் குடியர்களைத் தடுத்து, அவ்விடத்திற்கு அழைத்து வந்து அவர்களுடைய பசியை ஆற்றிப் புத்தி புகட்டுக; இவ்விதமாகவே காபி, டீ முதலிய குடிகளையும் விலக்குக! இஃது உங்களுடைய தருமம். எல்லாரும் நம்மவர்; நம் சகோதரன் குடித்துக் கெடப் பார்ப்போமா? தொண்டர்களே, சமுதாய சேவையைக் கோயில் வழிபாடெனச் செய்யுங்கள்; நமது பாரத தேசம் உலகின் புண்ணியக் கோயில். அதில் இனிக் கள் சாராய வாடை வீசாமல்

தீவிரமாகப் பணிசெய்யுங்கள்! ஆம் ஆம், ஒரு நாள் கள் ஒழியும்; ஏழையின் கண்ணீர் நீங்கும்!

கச. கொலை மறுத்தல்

வான் பொழிய மண் விளைகிறது; பாடுபட்டால் பயிர் செழிக்கும். கணக்கற்ற தானியங்களையும், கடலைகளையும், காய் கனி கிழங்குகளையும் பூமாதேவி அருளுகிறாள்; அவற்றையுண்டு ஜீவசக்தி பெருகி மனிதன் நூறாண்டு வாழலாம். தாவரமே மனித உணவு; அவற்றையும் அளவுடன் உண்ணவேண்டும்.

இயற்கைக்கு மாறாக மனிதர் புலால் உண்பது அறமோ? இரக்கமும் அன்பும் நன்றியும் பகுத்தறிவும் இல்லாத விலங்குகள் போலல்லவோ, மக்களும் பிறவுயிர்களைக் கொன்றுண்கிறார்கள், மனிதர் வயிறு சுடுகாடோ? மனிதர் பிறவுயிர்களின் கூற்றுவரோ?

மனிதன் ஊனருந்தப் படைக்கப்பட்டிருப்பானாகில், புலிபோல் அவனுடைய நகங்களும் பற்களும் கூர்மையுடையனவாயிருக்கும். புலாலை யுண்ணும் புலிக்கும், மரக்கறி யுண்ணும் யானை குரங்கு, ஒட்டகம் முதலியவற்றிற்குமுள்ள உடல் அமைப்பு வேற்றுமைகளைப் பாருங்கள்! மனிதன் உணவு மரக்கறியே. ஆடு கோழிகளைக் கிழித்து இரக்கமின்றி நறுக்கி அழுகவைத்துப் பிணமருந்தும் மனிதன், மனிதனா? அவனிடம் அகந்தையும் வஞ்சமும் மூர்க்கமும் அறியாமையும் இன்னும் எண்ணில்லாத் தீய குணங்களும் குடிபுகும். ஐம்பெரும் பாதகங்களில் முதன்மையானது கொலை.

நாத்தடிப்பால் மனிதன் புலாலுண்ணக் கடவுள் பெயர் வைத்துக் கொலை செய்கிறான்—யாகக் கொலை—பலிக்கொலை.. ஆ! யாகம் என்பது என்ன? அதுவே தியாகம்; அகம்பாவத்தைக் கொன்று. தன்னையே உலகவடிவான ஈசன் பணிக்குப் பலிதானமாக அளிப்பதே யாகம். அந்தணர்களே, நீங்கள் சுவர்க்க இன்பத்தை அடைய ஆடுகளை வெட்டவேண்டுமா! ஆடு செத்தால் ஐயருக்கு மோட்சமா? ஓர் உயிரைக் கொன்றால் அதன்

கொலைப்பாவம் உங்களுக்கு வருமேயொழிய, சுவர்க்கம் எப்படிவரும்? இருளை நீக்குங்கள்! சுவர்க்கமும் நரகமும் நமது வினைப்படியே வருவன. அவற்றை நாம் இவ்வுலகிலேயே அனுபவிக்கிறோம். தன்னலம் விட்டவனுக்கே சுவர்க்கானந்தம் உரியது. "நான் சுவர்க்கம் செல்லுகிறேன்; இந்த ஆடு சாகட்டும்" என்பது எவ்வளவு தன்னலத்தைக் காட்டுகிறது? புத்தர் பெருமான் இப்படு கொலையை நிறுத்தவே அவதரித்தார். யாகச் செலவைக் கொண்டு ஏழைகள் உண்ண வழிசெய்யுங்கள்! அந்தோ, அவர்கள் பசிக்கொடுமைக்குப் பலியாகிறார்கள்! கைத்தொழிலையும் கல்வியையும் பெருக்குங்கள்; உங்களால் நாடெல்லாம் பிழைக்கும்! ஒரு கொலை-யாகஞ் செய்வதினும், பல உயிர்கள் பிழைத்து உங்களை வாழ்த்தும்படி தொழில்களை வளர்ப்பது நல்லதன்றோ?

அந்தோ பராசக்தி, உனக்குமா ஆடு வேண்டும்? அன்பு வடிவே, உன் குழந்தைகளாகிய ஆடு கோழிகளை, உன்னெதிரேயே ஆறறிவு படைத்த மக்கள் வெட்டுவதைப் பொறுத்தா இருக்கிறாய்? புலாலுண்ணும் பாவிகளே, நீங்கள் புலாலருந்தும் பழியைத் தெய்வத்தின்மேல் போடாதீர்கள்; தெய்வத்தின் பெயரைக் கெடுக்காதீர்கள்! உங்கள் மனம் கொலையிலும் தீமையிலும் செல்லுவதால்தான் அம்மனம் போன்ற கொடிய உருக்களைச் செய்து, தெய்வத்திற்கு நீங்கள் உண்ணும் கொடிய உணவைப் படைக்கிறீர்கள்; இது தொன்றுதொட்டு வந்த பழக்கம் என்கிறீர்கள். உங்கள் பாட்டன் அறியாமையால் பாபம் செய்தால் நீங்களும் பாபம் செய்யவேண்டுமா? அவன் குடித்தால் நீங்களும் குடிக்க வேண்டுமா? இன்றே இப்பழக்கத்தை நிறுத்துங்கள்! தென்னாலியில் பெத்தம்மாளுக்குப் பதினாயிரக் கணக்கான ஆடுகள் பலி கொடுத்தார்கள். பத்துநாட்கள் பிரசாரம்செய்து மக்கள் மனத்தைக் கரைத்தேன். பூசாரி என்னை வைதான்; வாளை ஓங்கினான். 'பலி முற்றிலும் நிறுத்தினாலொழிய, உணவு கொள்ளேன்' என்று விரதம் பூண்டேன். கலெக்டருக்குச் செய்தி யெட்டியது. அதிகாரிகளிடம் உண்மையைச் சொன்னேன். பலி கூடாதென்று சர்க்காரே உத்தர விட்டது! பூசாரி தலை குனிந்தான். தேங்காய் பழம்

படைத்து அம்மனை வழிபட்டோம். அம்மன் அன்று மலர்நகை புரிந்தாள்! 'பலிகிலி' யெல்லாம் மனிதருட் புகுந்த புலியின் வேலை; அம்மனும் சாமியும் அன்பு மயம்! தெய்வம் ஒன்றே; அதற்கு நாம் தரும் நிவேதனம் உள்ளன்பே. சாந்தமான உருவில் கடவுளைத் தொழுங்கள்! கருணைக்கடலான கடவுளைக் கோர ரூபத்தில் தொழாதீர்கள்! உலகமெல்லாம் உங்கள் செய்கையைக்கண்டு நகைக்கின்றன! பலி என்பது தன்னையே உலகின் தொண்டிற்கு ஈந்துகொள்ளலாகும். உலகே பலிபீடம்; அதுவே பராசக்தியின் சந்நிதி. அதில் உங்கள் தீயகுணங்களைப் பலியிட்டுத் தன்னலம்விடுத்துத் திருத்தொண்டு செய்து உயருங்கள்!

உணவினாலேயே குணநலம் வளர்கிறது. பசியறிந்து, சுசிருசியான சைவ வுணவை அளவுடன் உண்க! நாவிற்கு அடிமைப்பட்டுக் கண்டதை யுண்டால், வயிறு புரட்சி செய்யும்; உடல் நோயுறும். தீயளவுண்பதே நோயிலா நெறியாம்; மரக்கறி யுண்ணும் குரங்கும் யானையும் எவ்வளவு சுறுசுறுப்பா யிருக்கின்றன! மனிதன் மற்றப் பிராணிகளிலும் பெரிய மூளையுடையவன். மனவுறுதி வாய்மை தூய்மை அறிவாற்றல்களால் மனிதன், தனது வாழ்வைத் திருத்தி உலகிற்கும் உதவியாக வாழக் கடமைப்பட்டிருக்கிறான். மனிதன் எதை உண்கிறானோ அதற்குத் தக்க குணத்தையே அடைகிறான். மாமிசம் கள் முட்டை அழுகல்பதார்த்தங்கள் முதலியவற்றை உண்கிறவன், விலங்குக்குணம் பெருக்கித் தாமதனாகிறான். ஊனுணவு நின்றால் போர்வெறி தணியும். அறுசுவைகளையும் மிகுதியாக விரும்புகிறவன், உணவிற்கு அடிமையாகித் தன் புலன்களை அடக்கத் திறனற்றவனாகிறான். மிளகாய்க் காரம் அதிகமாக உண்பவன் கோபத்திற்கு ஆளாகிறான்.

நாவடக்கம் வேண்டும்; சுவைகளை வெல்ல வேண்டும். நாம் அவற்றிற்கு அடிமையாகக் கூடாது. உணவுப் பிழை, உறக்கப் பிழை, புணர்ச்சிப் பிழை—இவற்றால் உயிர் உடல் மனம் கெடும், குணங் கெடும். மனிதன் நல்ல பழங்களையும், தேங்காய் கடலை சுத்தமான பால் முதலியவற்றையும் உண்டு வந்தால், சாத்விக புத்தியும்,

சுறுசுறுப்பும், ஒளியும் பெறுவான். மனிதனே, உனக்கு விதித்த உணவை உண்; வீணுகக் கொலே செய்யாதே! வாயில்லா வுயிர்களே இரக்கமின்றி மனிதன் கொன்றுண்கிருன்; அந்த இரத்தவுணவு, பாபவுணவு, உயிர்ச்சாபவுணவு கொலைவெறியாக மாறிப் போரில் மனிதரை வாளாலும் குண்டு பீரங்கிகளாலும் கொன்று குவித்துப் பழிவாங்குகிறது. இதுவரை மடவுலகம், போர் என்ற நரவதையால் மனிதனையே மனிதனுக்கு எமனுகும்படி செய்தது. கொலைக்கருவிகள் கண்டுபிடிப்பதில் தன் மூளையைச் செலுத்தி மனிதன் பாழானுன். இனி, ஆன்ம சக்தியே உலகிற் பரவும்; ஆன்ம பலத்தினலேதான் பாரத தேசத்திற்குச் சுதந்தரம் கிடைக்கும். சாத்விக சக்தி எழுந்தது! இதுகாறும் கொன்றதற்காக வருந்தி, உலகம் கொல்லா விரதத்தை உறுதியாகப் பூணப்போகிறது. போரரக்கர் தம் குண்டு பீரங்கிகளுடன் போரில் ஒழிவர். மனிதா, வீண் கேள்வி கேட்டு ஆயுளைக் கொலே செய்யாதே! புலாலுண்ணலையும், கொலையையும் தவிர்; எவ்வுயிர்க்கும் அன்பாயிரு, உலகைச் சாந்த நிலயமாக்கு! புலால் நின்ருல் ஆகார சுத்தம் ஏற்படும்; அப்போது உலகில் அமைதியும் ஒற்றுமையும் நிலவும். உணர்மின், கொலைபுலை யொழிமின், உய்மின்!

கரு. சுபநாள்

நாம் பல நன்னுட்களைக் கொண்டாடுகிறேம். அவற்ருல் நமக்குப் புதிய மகிழ்வும் கூட்டுறவும் ஏற்படுகின்றன. நம்முடைய சுபநாட்களிற் சிறந்தது, தைப் பொங்கல். அன்று பாற்பொங்கலிட்டுச் சூரியனை வணங்கியுண்கிறேம்.

பொங்கல் நாளில் நாம் அடியிற் காணும் கொள்கைகளை உறுதியாகக் கைக்கொள்ள வேண்டும்:

க. அன்னிய ஆடையை ஒழித்து ஏழைகள் நூற்றுநெய்த நாட்டுத் துணியணிதல்;

உ. மினுக்கரிசியை ஒழித்துக் கைக்குத்தரிசியையே சமைத்துண்ணல்;

௩. சீனிவகைகளை அறவே நீக்கி, தென்னை வெல்லமும், கரும்பு வெல்லமும் உபயோகித்தல் ;

௪. காப்பி, டீ, கள் முதலிய குடிகளை யொழித்துப் பால் சாப்பிடல், அல்லது மோர், இளநீர், பழரசம் இவற்றைக் குடித்தல் ;

௫. பசு வளர்த்தல், புலாலொழித்தல் ;

௬. கள்ளுக்குத்தகைக்கு விடாமல், தென்னை மரம் வளர்த்தல் ;

௭. உணவில் தேங்காய், கனிவகைகளைத் தாராளமாக உபயோகித்தல்,

௮. பித்தளை வெண்கலம் தாமிரம் அலுமினியம் பாத்திரங்களுக்குப் பதிலாக, மண்பாண்டங்களையே சமையலுக்கு உபயோகித்தல்.

௯. கொல்லைத் தோட்டம் போட்டு வீட்டிற்கு வேண்டிய காய்கறிகளை விளைத்தல்.

௧௦. கதிரொளி நீர் காற்று மண் ஆகிய இயற்கையின் வரப்பிரசாதங்களை நன்கு பயன் படுத்தி உடலுறுதி பெறல்.

"இறைவனே, எமது நாட்டில் வளம் பொழிக; வறுமை யொழிக; கல்வி யொளி பரவுக; மடமை நீங்குக; கைத்தொழில் வளர்க; சோம்பல் ஒழிக; நீர் நில வளங்கள் பெருகுக; ஏழைகளின் பட்டினி தீர்க; கட்டுகள் ஒழிக; விடுதலை விளங்குக; மனமாசுகள் ஒழிக; ஆன்ம ஞானம் பொலிக; அறம், பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளும் எமது வாழ்வில் இணைந்து பொலிக!" என்று பொங்கலன்று ஒவ்வொரு வீட்டிலும் கடவுள் வணக்கம் நடத்தி மகிழ்க!

௧௬. பொன்மாயம்

பூக்களும் புட்களும் பொன்னகையாலா, இவ்வளவு அழகாயிருக்கின்றன? இயலழகே யழகு! மலை நதி வனக்காட்சிகள் எவ்வளவு அழகா யிருக்கின்றன!

இயற்கை அவற்றிற்குத் தங்க நகைகள் போட்டா அழகு செய்கிறது? இயற்கை யழகின்மேல் பொறாமை கொண்டோ, கடவுளழகை வெல்லவோ மக்கள் தங்க விலங்குகள் செய்து போட்டுக்கொள்கிறார்கள்! 'கடவுள் கொடுத்த அழகிற்குமேல் எனது அழகு இருக்கிறது பாருங்கள்; என்னைப் பார்த்து எல்லோரும் மயங்குங்கள்' என்பது போலிருக்கிறது அவர் நகைமினுக்கு! அணிச்சுமை அகம் பாவச்சுமையாகி ஆன்மாவை அழுத்துகிறது. உலகைக் கெடுக்கும் அந்த மஞ்சள்மண் உடம்பில் ஏறிய மக்களுக்கு எவ்வளவு ஒய்யாரம், மமதை, கர்வம், மோகம், அசூயை? எவ்வளவு தேகாபிமானம்? ஆசை, அறிவழகிற்கு விலங்கு மாட்டுகிறது. நகையாசையால் கற்பிழப்போர் எத்தனைபேர்? பிறருக்குக் கொடுக்காது தன் வயிற்றையும் கட்டிப் பொன்சேர்த்து ஒருநாள் திருடனுக்குப் பறிகொடுத்து மாரடித்தழுவோர் எத்தனை பேர்? கம்மமில்லாவிடில் காது கேளாதா? காசுமாலையின்றிக் கழுத்து வளையாதா? காப்பின்றிக் கை வேலை செய்யாதா? காப்புப் போட்டவருக்கு மூப்பு வாராதா? நகை, மாந்தர் மடமையை நகைக்கிறது!

பணக்காரர்களே, உங்கள் ஆபரணங்களெல்லாம் ஏழைகளின் மனப்புண்கள்; பாபவிலங்குகள்! ஆயிரம் ஏழைகள் பிழைக்கக்கூடிய பொருளைத் தேவைக்குமேலே சேர்த்துக்குவித்து, அதைத் தங்க விலங்குகளாக அடித்து உங்கள் பெண்டு பிள்ளைகளுக்குப் போட்டு அழகு பார்க்கிறீர்கள்; நீங்கள் சேர்த்தது எப்படி? யாரிடமிருந்து? நீங்கள் உங்கள் தேவையளவே அனுபவித்தால், உலகில் நீங்கள் சேர்த்து வைக்கக்கூடிய செல்வத்தை எத்தனை கோடி ஏழைகள் அனுபவிப்பார்கள்? வீண் விருந்துகளும், இடம்பமும், அணிகளும் விழுங்கும் பணத்தால் எத்தனையோ பாட்டாளிகள் பிழைக்கலாமே! அவர்களுடைய ஜீவனத்தை யெல்லாம் திருடி, உடம்பில் தங்கமும் வயிரமுமாகத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; வெட்கம், வெட்கம்! இந்த நாற்ற உடலை அலங்கரித்து மகிழும் நகைகளை விற்றால், எத்தனையோ இராட்டினங்களும், தறிகளும், கலப்பைகளும், மாடுகளும் வாங்கலாமே; உலகில் ஆடையும் உணவும் எவ்வளவோ மலி

யுமே! வறுமைப்பிணியின் தூதர்களே, உங்கள் நகையைக் கண்டால், எனது அழுகை பொங்குகிறது. பத்தினிமார்களே, வீணாக உங்கள் மனதைத் தங்க மண்ணுக்க வேண்டா! நீங்கள் காது, மூக்குகளில் துளையிட்டுக் கொண்டு, அழுக்குப் படியும்படி சங்கிலிகளைப் போட்டுக் கொண்டு, கைக் காப்பு கால் காப்புகளால், 'நான் நான்' என்று குலுக்கிப் பிறர் மனதைக் கலக்காதிருங்கள்! நீங்களே உலகிற்கு ஆபரணம்; நீங்களே உலகிற்குக் கட்டழகு! உலகைப் பசும்பயிர்போல் அழகு செய்யவே நீங்கள் பிறந்தீர்கள். உங்களுக்கு அழகு, பரிசுத்த வாழ்வும், நன்மக்கட்பேறும், கற்புமேயன்றி வேறில்லை. நீங்கள் வள்ளுவர் மனைவிபோல் இருங்கள்! நம் நாடு குசேலர் வீட்டினும் கேவலமாயிருக்கிறதே! உலகின் செல்விகளே, இந்த ஏழை நாடு நமது டாம்பீகத்தால் வருந்துவதை உணருங்கள்! ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகளின் கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறது. தாய்மார்களே, அவர்களுக்கு இரங்குங்கள்; நகைகளை ஒழியுங்கள்! கணவர்காள், அன்பைக்கொண்டு மனைவியருக்கு அறிவைப் புகட்டுங்கள்; எளிமையை வணங்குங்கள்! பிறர் நம்மைக்கண்டு மயங்க வேண்டுமென்று போட்டுக்கொள்ளும் நகையை அவர்களுக்குப் போடாதீர்கள்! எத்தனை விதமான திருடர் இடம்ப அணியைக் கவர மறைந்து நிற்கின்றனர்! அதனால் எத்தனைக் கொலை, மோசம், ஏமாற்றம், துயரம்! இத்தனையும் உங்களால் வரவேண்டுமா? கடவுள் கொடுத்த மேனிக்கு மானங் காக்கப் போதுமான ஆடை யணியுங்கள்! மனத்திற்கணி அன்பு; வாய்க்கணி வாய்மை; உடலுக்கணி அருட்பணி!

கடவுளையும், மனிதன் பொன்னாலும், செம்பாலும், வெள்ளியாலும் அடித்துவைத்துப் பூண்கள் மாட்டுகின்றான். 'பூண்கள்' என்றாலே ஏழைகளின் புண்களை நினைத்து மனம் வருந்துகிறது. இப்புண்களால் விபசாரம், துராசை, கொலைப்பழி, திருட்டு, வறுமை ஆகிய எத்தனையோ தீமைகள் புகுந்து மனித சமுதாயத்தைப் புண்படுத்துகின்றன. பொன்மாயத்தின் தீமையைக் கருதியே இயற்கை யன்னை அதை ஆழச் சுரங்கத்திற் புதைத்து மறைத்தாள்! ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு உழைப்

பும் பிழைப்பும் தரும் செல்வத்தை இரும்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டுகிறுன் லோபி. அவன் பணச்சுமை பாபச்சுமையாய், ஏழைகளின் சாபச் சுமையாய் உறங்குகிறது.

பொருள் வேண்டியதே : 'பொருள்' என்ருல் பொன்னும் வெள்ளியுமட்டுமன்று; பாட்டாளி விளைவிப்பதெல்லாம் பொருளே; பயிர்களெல்லாம் பொருளே; அறிவாற்றல்களால் பலதுறைப் புலவர் தருவதெல்லாம் பொருளே! உலகோர் பண்ட மாற்றிஞலேயே வாழ்ந்தால் பணத்திமிர் ஒழியும். பிரயாணங்களில் அவசர நிமித்தம் நாணயங்கள் பயனுகலாம். மற்றைப்படி உள்ளூரில் பண்ட மாற்றிஞலேயே சமுதாயம் பிழைக்க முடியும். அவரவர் தமக்கியன்றதை முயன்று விளைவிக்கவேண்டும்; தமது விளைபொருளைத் தமக்கு வேண்டிய பொருளுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும். நெல்லைக் கொடுத்துப் பருப்பைப் பெறுக; பருத்தி யீந்து ஆடை பெறுக; வாழையை ஈந்து மாங்கனி பெறுக; தேங்காயை யீந்து காய்கறி பெறுக; உழைப்பாளிகளுக்கு உணவுப்பொருளைக் கூலியாகத் தருக! இப்பண்டமாற்று நமது நாட்டிற்குப் புதிதன்று; இன்றும் பல கிராமங்களில் இவ்வழக்கம் உண்டு. பயிரைப் பெருக்குக! உழைப்பிற்கு மதிப்புயர்க; பண்டமாற்ருேங்குக; பணத்தைப் பூட்டிவைக்காமல் தொழிலாக மாற்றுக! உலகம் வளம்பெறும்; சமுதாய வாழ்க்கை இன்புறும்!

கஎ. அடிமைத்தனம்

மனிதன் பல தீமைகளுக்கு அடிமையாஞன்: உடல் சோம்பலுக்கு அடிமை, புலனுக்கடிமை, பிணிகளுக்கு அடிமை; மனம் ஆசைகளுக்கடிமை. அழகுபோலக் காட்டி அடிமையாக்கும் பொருளை அவாவி ஓடுகிறுன் மனிதன். உள் விழியால் காணும் பேரின்பத்தைக் கருதாமல், புறப்புலன்களால் காணும் சிற்றின்பப் பொருள்களையே மனிதன் பற்றியலைகிறுன். பற்றிஞல் அவா, அதனுல் குரோதம் மோகம் மதிமயக்கம் எல்லாம் உண்டாகி வாழ்க்கை இடர்ப்படுகிறது. அடிமை, பிறர்கைப் பாவையாகிறுன். அடிமைத்தனம் ஆன்ம வளர்ச்சியைத் தேய்க்கும்.

அச்சம் ஆசை வயிற்றுக்கொடுமை—இவற்றுலேதான் மனிதன் அடிமையாகிருன். அறிவு தொழில் வீரம்—இம் மூன்றையும் வளர்த்தால், அடிமைப்பிணி நீங்கும்.

உலகை இறைவன் உயிர்களுக்காகப் படைத்தான்; ஒரு மன்னனுக்காகவன்று. தனது இயல்பிற்கேற்றபடி ஒரு நல்ல தொழிற்பயனுலே பிழைத்து ஆண்டவனுக்கே ஆளாக வாழ மனிதனுக்கு உரிமையுண்டு. "நாமார்க்கும் குடியல்லோம்" என்று சொல்லும் திறமை மனிதனுக் குண்டு. மனிதன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அறிவையும், மனத்தையும், உடலையும், வீட்டையும், நாட்டையும் அடிமையாக்கும் அனைத்தையும் மனிதன் அறவே விலக்கவேண்டும்; ஆன்ம சுதந்தரம், தேச சுதந்தரம் இரண்டும் பெறவேண்டும். அடிமை நாட்டில் எந்தத் தவமும் பூரணசித்தி பெருது.

கஅ. சமூக வாழ்க்கை

மனித சமுதாயம் கூட்டுறவினுலேயே முன்னேறும். ஒவ்வொரு மனிதனும் சமுதாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். மனிதன் தனக்காக வாழவே பிறக்கவில்லை; அவன் தன் சமூகத் தொண்டிற்கே பிறந்துள்ளான். தன்னலத்துடன் பிரிந்துவாழ்வது மனிதவியல்பன்று; அன்புடன் சேர்ந்து வாழ்வதே மனிதத் தன்மையாம். தேனீக்களைப் போல மனிதர் சமூக வாழ்வு வாழவேண்டும். மக்களெல்லாம் ஒரு குலமாக வாழும் நாள் நெருங்குகிறது. அமைதிக்கு முன்னே புயல்போல, மனிதர் சாந்தமாக மனவொற்றுமையுடன் வாழுநாள், போர் பொருமை வியாபாரப் போட்டி இவற்றேடு மாருடுகிறது. இப்போது உலகு நீண்ட இரவில் அழுந்தியுள்ளது. நடுநிசி வந்துவிட்டது. பயங்கரமான போரும் கொடுமைகளும் நிகழுகின்றன. நடுநிசி நீங்க நீங்கப் பகல் நெருங்கி வரும்; தீமைகள் குறையும்; சாதிமத நிறபேதங்கள் ஒழியும்; பழந்தீமைகள் மறையும்; புதிய சமரச வாழ்வு முகிழ்க்கும்; ஆன்மநேயம் தழைக்கும்; மதச் சடங்குகளின் தேவையில்லாமலே மாந்தர் மனச்சாட்சியைப்பற்றியொழுகுவர்; உயிர்க்கருணை பெருகும்; கொலை புலை அருகும்; ஐம்பிழை நீங்கும்; ஒவ்வொருவரும் அனைவருக்

கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும் வாழ்வர். ஒவ்வொரு கையும் சமுதாயத்தாயின் கையென உழைக்கும்; 'தமர், பிறர்' என்ற வேறுபாடின்றி எல்லாரும் உள்ளொன்றி வாழுவர்; இயற்கைநெறியில், மனமொழி மெய்த்தூய்மையுடன் உலகிற் பயில்வர்; இன்பம் நிறைவர்; தம்மைத்தாம் அறிவர்; தாமே பிறரென்றுணர்ந்து அன்பு செய்வர்; தங்கள் மனமாலைகளை அன்பால் தொடுத்து, உலகிறைவனுக்கு வெற்றி மாலையாகப் போடுவர். சுத்தமனமும், சுதந்தர வுணர்வும், சமரச நோக்கமுங்கொண்டு மனிதர் சாந்தமான சமூக வாழ்க்கை வாழும் அந்நாள் நெருங்குகிறது! சாதிமதத் தடை நொறுங்குகிறது! நாடு நிற வுணர்வு நீங்குகிறது! மனித சமுதாயம் முழுதும் ஒரே விசுவசமுதாயமாய் வாழும்நாள் இதோ வருகிறது!

கக. சிக்கனம்

சிக்கனம் என்பது இடம்பத்தின் எதிரிடை: சிக்கனம் ஒருவனுக்குச் சுதந்தரமும், களிப்பும் தரும்; தனது தேவையளவே தூய வழியில் ஈட்டி மகிழ்வது சிக்கனம். செலவுசெய்யவேண்டிய வழியில் தன்சக்திக்குத்தக்கவாறு இடம்பமின்றி, வெளிப்பகட்டின்றி, பிறர் நம்மைப் புகழவேண்டுமென்ற ஆசையின்றி, போட்டி பொறாமையின்றிச் சிறிது மிஞ்சும்படியே செலவிடவேண்டும். சிக்கனம் மனிதனுக்குப் பெரிய காப்பாளி: நம்முடைய பேச்சு, நினைப்பு, நடை முதலியவற்றிலும் அளவுடன் சிக்கனமாயிருக்க வேண்டும். சிக்கனமில்லாதவன் கடனாளியாவான்; கடன்பட்டவன் கவலை சுமப்பான். கவலை, வாழ்வைச் சிதைக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் மாதம் 10 ரூபா போதுமானது. $7\frac{1}{2}$ படி அரிசி, 3 படி பாசிப் பருப்பு, ஒரு சில காய்கறி கனிகள் இருந்தாற் போதும்! வரவிற்கேற்ற செலவு செய்து மனிதன் கடனின்றி வாழவேண்டும். பராசக்தி, எனக்குச் சிக்கன வாழ்வைக் கொடுத்த உன்னை மெச்சுகிறேன். ஓரணாவிற்கு 10 பூவன் பழங்கள் விற்கின்றன. *அரையணாப் பழம், முக்காலணாத் தேங்காய்,

---

* இஃது அமைதிக்கால அளவு; போர்க்காலத்திற் குரியதாகாது.

காலணுக் கடலே இருந்தால் ஒரு நாள் உண்ணப் போது மானதாகச் செய்தாய். 2 அணுவுக்குமேல் எனது வயிற்றிற்காகச் செலவழிக்க முடியாத முறையைக் கற்பித்தாய். ஒரு நாள் எனது பேராசையால் மிகவும் உண்டால் மறுநாள் பட்டினியிருந்து அற்றதுபோற்றி யுண்ணும் ஒழுக்கமீந்தாய். மாதம் 4 நாளாவது உபவாச மிருக்கிறேன். எனக்கு மாதம் 5 ரூபாவுக்குமேற் செல வில்லே. மீதியை யெல்லாம் உன் பணிக்கே காணிக்கை யாகச் சேர்த்து வைக்கிறேன். என் உறக்கத்தையும் சிக்கனஞ் செய்து, உன்னேத் தியானித்தும், நீ கட்டளே யிட்டு எழுதத் தூண்டும் நூல்களே எழுதியும் வழிபடு கிறேன். இரவிலும் விழித்த எனக்கு இன்பத்தைத் தரும் இறைவியே, என் ஆயுளே நான் மிகவும் சிக்கனமாகவே எனக்கு உபயோகித்து, உன்பணிக்கே அதிகமாக வழங்க அருள்! என் பேச்சிலும் சிக்கனமாகவேயுள்ளேன். வாராவாரம் உன்னேச் சரண்புகுந்து மௌன சமாதியில், சகஜ நிஷ்டையில் ஆழ்ந்து அங்கேதோன்றும் பேரின்பத் தைப் பாடுகிறேன். பேர்புகழ் கருதாது, அடக்கமாக உனது திருவடியிலிருந்து, பாடுவதும் பணி செய்வதும் எனது கடமை. உனக்கே என் வாழ்வு பலிதானமாகுக! உனது திருவுளமே என்னுள் உயிர்த்தோங்குக!

உ௦. நாகரிகம்

அன்பு பண்பு நாண் ஒப்புரவு எளிமை அடக்கம் தன்னுதவி ஆகிய இவை, நாகரிகத்திற்கு அறிகுறி களாகும். நாகரிகன் இடம்பச் சோம்பலே வெறுப்பான். யோக்கியமான உழைப்பை விரும்புவான்; பிறர் பொரு ளுக்குப் பேராசைப் படமாட்டான்; சிக்கனமாகவே வாழ்வான்; அடக்கமாகப் பேசுவான்; இயன்றமட்டும் தன் வேலேயைத் தானே செய்வான்; எல்லாருக்கும் நல்லது செய்வான்; தீயது செய்யக் கூசுவான்; பிறர் நாணத்தக்கதைத் தான் நாணுவான்; மனமொழி மெய்களில் தூய்மை யுறுவான்; வாய்மையை உயிர் போலக் காப்பான். அழகுபோல் காட்டி அடிமைப் படுத்தும் பொருள்களில் அவன் மனம் சிக்காது. அவன் மனம் எல்லாரும் இன்புற்றிருக்கவே நினேக்

கும். அவனது நாவில் வாய்மையும், நடையிற் செம்மையும், உளத்தில் உண்மையன்பும் விளங்கும். மக்களை நடமாடும் கோயில்களென அவன் மதித்து நடப்பான்.

நாகரிகம் அன்பையும் பண்பையும் அறிவையும் அழகையும் அருளையும் நட்பையும் இன்பத்தையும் உலகிற் பரப்பி, மனித வாழ்வை உயர்த்தும் சக்தி வாய்ந்தது. நாகரிகமற்ற நாடு காடினுங் கேடாகும். அதில் போரும், பொறாமையும், வேற்றுமையும், பாபமும் பெருகும்; மனிதனை மனிதன் நம்பமாட்டான்; காட்டு மிருகங்களினும் கேடான மூர்க்கத்தனத்துடன் பிறரைக் கொள்ளையடிக்க மனிதன் துணிவான்; எளியவரை வாட்டுவான்; நல்லாரை வீழ்த்தச் சூழ்ச்சி செய்வான்; 'தான் வலியன், பெரியன்; மற்றோர் தன்னினும் மெலியர், கீழோர்' என்று மமதை கொள்வான்; பொன்மண் போகமே பெரிதென மதிப்பான்; அதை அடையக் கொலைக்கும் கூசான்! மாடமாளிகையும், பொற்குவியலும், ஆடையாபரணங்களும், விருந்தும், கேளிக்கையும், அதிகார மமதையும், சாய்வு நாற்காலி வாழ்வும் நாகரிகமென மனிதன் தப்பெண்ணங் கொண்டுள்ளான். அதனால் உலகில் ஒருபுறம் இடம்பமும், மறுபுறம் வறுமையும், உணவுப் பஞ்சமும், பாபங்களும் உலவுகின்றன. உண்மையான நாகரிகம், சுத்த-சுதந்தர-சமத்துவ வாழ்வையளிக்கும்.

உக. பயிர்த் தொழில்

ஏருழுவதில் இன்பமிருக்கிறது; ஏற்றமிறைப்பதில் மகிழ்விருக்கிறது. நாம் நட்ட விதை முளைகிளம்பி நாளுக்கு நாள் உயர்ந்து வளருகிறது. அதன் பசும் பொலிவைக் கண்டு கண் குளிருகிறது; உள்ளங் குளிருகிறது. வயலுக்கு எரு வைக்கும்போது, குழந்தைகளுக்கு அன்னமிடும் தாய்மனம்போல் நமது மனமும் அன்பால் நிறைகிறது. காற்றும், வெயிலும்பட வயலில் உழைக்கும் போது, நம்மையறியாது உள்ளம் சுதந்தரப் பாட்டொலிக்கிறது.

இயற்கை வெளியில் உடம்பு வியர்க்கப் பாடுபட்டு, மாலையில் நீராடி, இறைவனை நினைத்து உண்ணும் கூழ் அமுதத்திலும் இனிதாயிருக்கிறது! சென்ற ஆண்டினும் இவ்வாண்டு நிலம் அதிகமான பலனைக் கொடுத்தால், பாட்டாளி நவநிதிபெற்றது போலவே மகிழ்கின்றான்.

உழுதூண், தொழுதூணினும் இனிது: பயிரால் உயிர் நிலைக்கிறது; உணவால் உடல் வாழ்கிறது; மன்னாதி மன்னனானாலும், ஞானியானாலும், வில்லாதி வில்லனானாலும், புலவனானாலும் கலப்பைக்கும், பயிருக்கும், நிலத்திற்கும், வேளாண்மைக்கும், பாட்டாளிக்கும் நன்றி செலுத்தியே தீரவேண்டும். உலகம் உயிர்த்து வாழ்வது பயிர்த்தொழிலாளியால். மண்ணை மதித்தால், அஃது உண்ணக்கொடுக்கும்.

போதுமான நிலம், நடைகிணறு, ஏற்றச்சால், சில மாடுகள், இரண்டு பசுக்கள் ஆகிய இவற்றைக் கொண்டு பாடுபட்டுப் பயிர் செய்துண்ணும் குடும்பம், சுதந்தரமாக வாழும். அந்நிலத்தருகே ஓலைக்குடி லமைத்து, அதில் நான்கு இராட்டினங்களும், ஒரு கைத்தறியும் வேலை செய்தால் ஆடைக்குப் பஞ்சமில்லை. இவ்வாறு ஆடை உணவு இரண்டையும் தன் உழைப்பினால் அடைந்தால், ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு அடிமையாகாமல் சுயேச்சையாக வாழலாம்; தனக்குக் கண்டு மிஞ்சிய பொருளைக் கொடுத்துத் தனக்குத் தேவையான பொருளை அடையலாம். வயிற்றுக் கொடுமையால் மனிதன் எத்தனைப் பாபத் தொழில்களைச் செய்கிறான்! குடும்பத்துடன் பயிர்த்தொழிலும் கைத் தொழிலும் செய்தால், குறைவற்று வாழலாம்; மனச்சாட்சி மகிழும்; இவ்வாழ்க்கை தனக்கும் நல்லது; சமுதாயத்திற்கும் நல்லதன்றோ? இத்தொழிலே சிறந்த கல்விப் பயிற்சியும் அளிக்கும். அறிவும் தொழிலும், உழைப்பும் பயனும் சேர்ந்த கல்வியே கல்வியாகும். கலப்பை, இராட்டினம், கைத்தறி, மாடு, பசு, ஏற்றச்சால், நிலம், விதை, உரம்—இவற்றை மனிதன் நன்கு மதித்தால் சோற்றுக் கவலை யொழியும்; தன்னுதவி, தொழிற்பெருமை—இரண்டும் துலங்கும்; வறுமைத் துயரொழியும்.

எல்லாரும் வேளாளராவோம்! காப்பி, தேயிலே, புகையிலே, கள், கஞ்சா போன்ற தீயபொருள்களே மனிதன் விளேவிக்கக்கூடாது. வாழை மா பலா விளா மாதுளே நாரத்தை பேரிலந்தை (அப்பிள்) கொய்யா திராட்சை பப்பாளி அன்னுசி ஆரஞ்சு பம்பளிமாஸ் போன்ற கனிகள்; நிலக்கடலே கொத்துக்கடலே பட்டாணி துவரை உளுந்து எள்ளு கொள்ளு மொச்சை வகைகள்; தினே கேப்பை கம்பு சோளம் போன்ற புஞ்சைப் பயிர்கள்; நெல் கரும்பு போன்ற நஞ்சைப் பயிர்கள்; உருளேக் கிழங்கு, சேப்பங்கிழங்கு, கருணேக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மருச்சீனிக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகள்; வெண்டை, பீர்க்கை, புடல், பரங்கி, பூசணி, கத்தரி, அவரை, முட்டைகோஸ், கீரைகள், வெங்காயம், பெருந்தக்காளி போன்ற காய்கறிகள்; பருத்தி, சணல் மூங்கில், அவுரி போன்ற கைத்தொழிலுக்கேற்ற பயிர்கள்; பேரீச்சை, பனே, தென்னே போன்ற பல பயனுள்ள மரங்கள்; ஆல், அரசு, நாவல், வேங்கை, கருங்காலி, தேக்கு போன்ற மரங்கள்; இவற்றை விளேவித்து, ஏராளமான கைத்தொழில் நடத்தி, நாட்டில் உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணலாம். மூலப்பொருட்களேக் கொண்டு கைத்தொழில்களே வளர்த்தால் நாட்டிற் பஞ்சமிராது. மூலப்பொருளே அன்னியருக்கு விற்று, அவரிடமிருந்து செய்பொருள் வாங்குவது, வீட்டு நெல்லேவிட்டு விலேச்சோறு வாங்கி யுண்பது போலாகும். நாட்டிற்கும், பாட்டிற்கும் ஏற்ற வளமையை இயற்கை யன்னே எப்போதும் அளிக்கிருள். மனிதன் அதை நன்றியுடன் ஏற்றுத் தானும் நாடும் வாழப் பயன்படுத்தவேண்டும். உலகில் ஆயிரக் கணக்கான நற்றொழில்களுண்டு. ஏதேனும் ஒன்றைச் செய்து பிழைக்கலாம்.

உழைப்பை மதிக்க வேண்டும்; தொழிலாளியைப் போற்றவேண்டும். இப்போது முதலாளிக் கூட்டம் பெருத்துப் போய்விட்டது, பாட்டாளி பட்டினி கிடக்கிருன்; பணக்காரன் பை கட்டுகிருன். உழைத்த வேர்வைக்கு மதிப்பில்லேயா? மேனி குலுங்காது அதிகாரம் செலுத்தும் முதலாளிதாஞ சுகபோகம் அனுபவிக்கவேண்டும்? முதலாளி உழைப்பாளியாக வேண்டும்: பெட்டியி

லுறங்கும் பணம் தொழிலாகச் செழித்துப் பலருக்கும் பிழைப்பை யுண்டுபண்ண வேண்டும்; உழைப்பே செல்வமாகவேண்டும்; சோம்பற் செல்வம் ஒழியவேண்டும்! உழைப்பு பணத்திற்கு அடிமையாகக் கூடாது. பணம் தொழிலைப் பணியவேண்டும். வீடுதோறும் அறிவும் அறமும் தொழிலும் வளமும் பெருகவேண்டும். ஒவ்வொருவரும் தினம் 5-மணி நேரம் தம்முடைய பிழைப்பிற்கும் சமுதாய நலத்திற்கும் ஏற்ற ஒரு தொழிலைச் செய்வது மதக்கடமை யாகவேண்டும். உலகமே கோயிலாகவும் தொழிலே தொழுகையாகவும் விளங்கவேண்டும். இனி வரும் உலகம் தொழிலுலகம்; ஆம், தொழிலுலகம்! தொழிலே திருத்தொண்டாகுக!

உஉ. நூற்று நெய்தல்

இராட்டினம் மனித சமூகத்தின் க்ஷேமத்திற்காக ஏற்பட்ட ஒரு தெய்விகக் கருவி. அது நமது மானத்தைக் காக்கும். நமது சமுதாயத்திற்கு அதன் ஓங்காரம் மங்களவாத்தியம் போன்றது. இராட்டினத்தை மதித்த இந்தியா, நாடுகளில் உயர்ந்திருந்தது. இராட்டினத்தை விடுத்த இந்தியா, வறுமையுற்று வருந்துகிறது. ஒவ்வொரு வீட்டையும் அலங்கரிக்க வேண்டிய கருவிகளுள் இராட்டினம் முதன்மையானது. தினந்தோறும் அரைமணி நேரமாவது நூற்றல், நம் நாட்கடன்களில் முதன்மையான ஒன்றாக வேண்டும். தன் ஆடையைத் தானே நூற்றுடுத்தும் பெருமையிற் "பீடுடையதில்." மனம் வைத்து மதக்கடமையென்றெண்ணினால், ஒவ்வொருவனும் தனக்குவேண்டிய ஆடையைத் தானே நூற்றுக்கொள்ளலாம். சக்கரம் பெரிதாய், உறுதியாயுள்ள இராட்டினம் ஒன்று தேவை. அதில் கோட்டமொன்றும் இருக்கக்கூடாது. பஞ்சை வெயிலில் நன்கு உலர்த்தி மணையில் அரைத்துக் கொட்டையெடுத்துப் பிறகு வில்லினால் அடித்து மெல்லிய பட்டையாய்ப் போட்டு, இராட்டினக் கதிரில் நூற்கவேண்டும். நூற்க நூற்க மனத்திற்கு இன்பமாகும்.

பத்து இராட்டினங்கள் சரியாக நூற்றால் ஒரு தறிக்கு வேண்டிய நூலைத் தயாரிக்கலாம். ஒரு தெருவிற்கு ஒரு தறியாவது இருக்கவேண்டும். அதில் அத்தெருவுக்கு வேண்

டிய ஆடைகளை நெய்யலாம்; தறித்தொழில் மனிதருள் ஒற்றுமையை யுண்டாக்கும்; புலன்களுக்கு நல்ல வேலையைத் தரும்; தன்னுதவியும், மானமான பிழைப்பும் தரும். நூற்றநூலைக் கழிகளாக வீசனத்தில் போட்டு, சக்கரத்தில் கழிகளை மாலையாக மாட்டிப் பின்பு ஆஸ்பலகையின் முளைகளில் வீசிப் பாவு தயார்செய்யவேண்டும். பாவை விரித்துக் கஞ்சி வைப்பதுதான் சிரமமானவேலை. இழை முடித்தலும், இழைகளைச் சீர்பெற ஒழுங்கு படுத்தலும், கஞ்சியைப் பதம்பெறப் போடலும் நமக்கு நல்ல பயிற்சியைக் கொடுக்கும். பசை வைக்கும்போது மற்ருேர் துணையும் வேண்டியிருப்பதால், நம்மிடையே கூட்டுறவு அதிகமாகும். பாவைச் சுண்ணும்புநீரில் நனைத்தும், பிறகு பசை வைப்பதுண்டு. பசைவைத்த பாவை நன்ருய் உலர்த்தித் தறியிற் கோத்துப் பிறகு ஊடு நெய்யவேண்டும். திருவடத்தில் சுற்றிய கதர்நூலை இராட்டினத்தின் உதவியால் சிறுசிறு கண்டுகளிற் சுற்றி, அக்கண்டுகளைக் குழலிற் புகுத்தி, தறியின் மிதியை மாற்றி மாற்றி யழுத்தி நன்கு நெய்யவேண்டும். நூற்றலைப்போலவே நெய்தலும் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாதது. நான் தறியை மிதித்து நெய்தேன்; குழலோட்டிச் சீப்பை யிழுத்தேன்; ஆ! 'டக் டக்' என்று ஏகதாளம் போட்டுக்கொண்டு மக்கம் மங்களகானம் செய்தது. இழை அறும்போது முடிப்பதுதான் சங்கடம்; ஆனுல், அதுவும் ஒரு குழந்தையின் விஷமம்போன் றிருந்தது! தறி வேலையால் என் பொறுமையும் நிதானமும் அதிகரித்தன. கொல்லையிற் சிறிது பருத்தி விளைத்தால் குடும்பமெல்லாம் ஆடை யுடுத்தலாம். ஒரு தறிக்குச் சுமார் $4\frac{1}{2}$ மனு நூல் இருந்தால் போதுமானது. சுயேச்சையின் முதற்படி நூற்று நெய்தல். அதோடு தொடர்ந்தது உழுதுண்ணல். இவ்விரு தொழிலும் என்று மனிதருக்கெல்லாம் வீதிதோறும் பெருகுமோ, அன்றே மனிதசமூகம் வறுமைப் படுகுழியினின்று தப்பும். வறுமையைத் தப்பிப் பிழைத்தால்தான் வாழ்வு சிறக்கும்.

கையினுல் நூற்று நெய்த ஆடை கதராடை. இதன் சக்தி அபாரமானது: இது நம் நாட்டிற்கு 60 கோடி ரூபா ஆதாயமாக்கும்; ஏழைகளுக்குக் கஞ்சியூற்றும்.

சாதாரணமாக இந்தியனுடைய மாத வரும்படி 2 ரூபா தான். நூற்பதால் $2\frac{1}{2}$ ரூபா வரும். நெசவால் ஒவ்வொருவனும் 15 ரூபாயாவது சம்பாதிக்கலாம். நெசவால் பெண்களுக்குத் தகுந்த வேலை ஏற்படுகிறது. குடும்பம் தேனீயைப்போல உழைக்கிறது; மனத்திற்கு நல்ல வேலை ஏற்பட்டுத் தீயமுயற்சிகள் கெடுகின்றன; அமைதியும் பொறுமையும் வளர்கின்றன. கைநூல் நமது விலங்கை அறுக்கும். கதர் நமது தேசீய உடை. அது, நம் ஒற்றுமைக்கும், சமரசத்திற்கும் நாட்டன்பிற்கும் அடையாளமாகும். எளிமையும், தூய்மையும், சுதந்தர உணர்ச்சியும் அன்பும் பக்தியும் ஒழுக்கமும் கதரணியால் எய்தும். தானே நூற்று நெய்வது, சுத்தக்கதர்; வாங்கி யுடுத்துவது, விலைக்கதர்; மில் நூல் கலந்தது, போலிக்கதர். சுத்தக் கதர் உத்தமமான குணத்தைப் பெருக்கும். அன்பர்காள், சுயமான கதரை நூற்று நெய்து அணிமின்; கைந் நூலாடை மெய்ந்நூலாடை என்றறிமின்!

உ௩. சாவும், சடங்கும்

வினையிருக்குமட்டும் போக்குவரத்துண்டு; ஆட்டமிருக்குமட்டும் திரை விழும், எழும். பிறப்பும் இருப்பும் இறப்பும், உலகிற்கு இயல்புதானே! சாவென்பது சட்டை மாற்றம். முன்னே விட்ட வினைக்குறை தீர ஆன்மா இவ்வுடற் சட்டையை மாட்டிக்கொண்டு, உலகரங்கில் வாழ்வென்னும் நாடகத்தை நடிக்கிறது; இந்த வுடலின் நாடகம் முடிந்ததும், அதைக் களைந்து, தனது இயற்கைக் குத் தக்க வேறுடல் பூணுகிறது. ஆயுளென்பது வினையைத் தீர்க்க நமக்குக் கொடுக்கப்பட்ட காலமாகும். அக் காலத்திற்குள் நாம் வந்த வினையைச் செய்யாவிடின், காலமணியடித்ததும் எழுந்து சென்று, மறு பிறப்பெய்தி விட்டகுறையைத் தொடங்க வேண்டும். இந்த ஊனுடல் ஒருநாள் வீழும்; இது உறுதி! எத்தனையோ காயசித்தரை எமன் விழுங்கிவிட்டான். உயிருள்ளபோதே ஆன்ம லாபம் பெறவேண்டும்; ஆருயிர்ப்பணி செய்யவேண்டும்.

உண்மையில் நாம் அழிவதில்லை; நாம் சுத்தான்மா: அதை வாள் சிதைக்காது; தீ எரிக்காது. எமது உடல் பஞ்ச பூதங்களாலாகியது. உயிர் பிரிந்ததும் பூதங்கள்

பிரிந்து பூதலயமாகின்றன; அல்லது, மறுபடி வேறுவித மாகச் சேர்ந்து மற்றோர் உருவாகின்றன. பனிக்கட்டி நீராகவும், நீர் ஆவியாகவும் மாறுகிறதேயொழிய, அழி வதில்லை. பக்திபரோபகாரத்திற்கே வாழ்ந்தவர், உலகில் என்றும் புகழுடலில் அமரராக வாழலாம். பிறர்க்காக வாழ்வதே இறவாமை; தன்னலச் செருக்கில் வாழ்வதே சாவு. உலகத்தால் மறக்கப்பட்டவரே, இறந்தவர்; உலகால் வாழ்த்தப்பட்டவரே, அமரர். தன் வினையை மறந்து உலகில் துஞ்சினர் செத்தாரே. தன்பணியை யறிந்து ஆற்றினர் வையத்தும் வானத்தும் தெய்வத்தை யொப்ப வாழ்பவர். அறிவறிந்த அருட்பணியே சாகா மருந்து. அம்மருந்தை உண்டால்தான் பிறவிப்பிணி தீரும். பரோபகாரம் இதம் சரீரம்.

மனிதா, நீ சாவிற்கு அஞ்சவேண்டா; உன் மட மைக்கும் சோம்பலுக்குமே இரங்கு! சாவின் இயல்பை யறியாது மாந்தர் பிரமாதஞ் செய்கின்றனர். மண்ணைப் பிடித்து ஓர் உருவம் செய்கிறோம்; அதன் காரியம் தீர்ந்த பிறகு, மண்ணைப் பிசைந்து மற்றோர் உருவாகச் செய் கிறோம். இதுதான் சிருஷ்டி. உன் மைந்தன் இறந் தானென்று வருந்துகிறாய்; அவன் மறுபடி பிறந்து, வேறிடத்தில் வாழ்கின்றானேயொழிய இறக்கவில்லை. உன் மைந்தன் வேறிடத்தில் வெகு தூரத்தில் வேலைக்குப் போயிருக்கிறா னென்று எண்ணிக்கொள்! இறப்பதும் பிறப்பதும் உன் இஷ்டமல்ல. அவை அவனவன் வினையைப் பொறுத்தன; வினைமுதல்வன் விருப்பைப் பொறுத்தன. மனிதா, வந்த வினையைச் செய்; உலகப் போர்க்களத்தில் வீரனாயிரு! உனக்கு அடுத்தவன் போரில் விழுந்தால், நீ அவனுக்காக அழுது பொழுதுபோக்கிப் பகைவன் வாளிற் கிரையாகாதே!

அந்தோ! செத்த வீட்டில் என்ன ரகளை! கட்டி அழுவதும், முட்டி யழுவதும், கொட்டி யழுவதும், அடித்து அலறுவதும்! எல்லாம் மடமை, மடமை! வினை வலிக்கும், மனவலிக்கும், வீரிய சக்திக்கும், ஒழுக்கத்திற் கும் ஏற்றபடியே உயிரைத் தாங்கும் ஜீவசக்தி உண்டா கும். ஒழுங்கீனமாக நடந்தால் ஜீவசக்தி மெலிந்து உடல் பிணியுறும்; ஆவி பிரியும். ஜீவசக்தியை யோகத்தால்

வளர்த்தால் நூறாண்டுகளுக்குமேல் இளம்பொலிவுட னிருக்கலாம். ஆனால், இருப்பது பலருக்கும் நன்மை செய்யவே என்பதைக் கருதவேண்டும். “பாவி தெய்வத் திற்குக் கண்ணில்லையே!” என்று அழுவது அபசார மாகும். இறந்தவனுக்குப் பெரும்பணம் செலவழித்துச் சடங்குகள் செய்வது மடமையாகும். ‘அவன் வினைக்கு அவன் பிறந்தான்; அவன் வினைக்கு ஆன ஆயுள் முடிந் தது; இறந்தான்; வினை பாக்கி யிருந்தால் மறுபடி பிறப் பான்’ என்ற உண்மையை யறிந்தோர் வீணான சடங்கு களை விரும்பார்கள். பாழும் பணமிருந்து மனிதனை ஆட்டி வைக்கிறது. பணமில்லாத ஏழைகள் என் செய்வர்?

முன்பே மனிதன் உண்மையாகத் தன் பாபங்களை நினைத்து வருந்தவேண்டும்; கடவுளிடம் தன் பாபங் களுக்கு மன்னிப்புக் கேட்டுத் தன்னை அவனடியிற் சேர்த்துக்கொள்ளும்படி பிரார்த்தனை செய்ய வேண்டும். வாழ்வெல்லாம் ஒருமாதிரி கழிந்தாலும், சாகுந் தருவாயில் தன்னலமற்ற ஒரு பணியைச் செய்யலாம். செல்வமிருப் பவன் தனது செல்வத்தில் ஒரு பங்கை நாட்டின் கல்விக் காவது, தொழில் அபிவிருத்திக்காவது, பொதுஜன ஊழியத்திற்காவது தரலாம். அஃதற்றவன் தன் மைந்தரை யாவது அருட்பணிக்கென அர்ப்பணஞ் செய்யலாம். ஒன்றுமற்றவன் “கடவுளே, இன்னொரு பிறப்பிலேனும் நான் பிறர்க்காக வாழ அருள்புரி!” என்று வணங்கலாம். இதுதான் பிராயச்சித்தம். இது சாகப்போகிறவன் மனத்தில் நிகழ வேண்டும். பக்கத்திலுள்ளவர் அப்படி நினைக்குமபடி அவனைத் தூண்ட வேண்டும். அம்மனிதன் தருமவானாயிருப்பின், அவன் தருமத்தை விடாது செய்து வருவதே, அவனுக்குச் செய்யவேண்டிய சடங்கு. அவன் பாபியாயின் அவன் தீயகுணங்களைத் தவிர்ப்பதே, மக்கள் செய்யும் சிராத்தமாகும். பிணச்சாம்பலை உரம்போட்டு மரம் வளர்க்கலாம். அதைக் காணும்போதெல்லாம், நமது உடல் இப்படிப் பிடிசாம்பலாகுமுன் நாம் நல்வினை யைச் செய்து வாழ்வைப் புனிதப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எண்ணி, இறந்தவன் குற்றங்களைத் தள்ளி, அவன் குணங்களைக்கொண்டு ஒழுகவேண்டும். நாயகனிறந்த பெண்கள் தலைமயிருக்காக மாரடிக்கவேண்

டிய தில்லை. வயதானவர்களா யிருந்தால் நாயகனிடம் வைத்த அன்பைக் கடவுளிடம் வைத்து, தூய பிரமசரியம் பூண்டு ஆருயிர்ப்பணி செய்வதே சிறந்ததாம். இளங் கைம்பெண்கள் மறு விவாகஞ் செய்து கொள்ளலாம். நாயகனை இழந்த பத்தினியர் கல்வித்துறையில் தேர்ச்சி பெற்று, பிரமசரியம் பூண்டு, அருட்பணி புரிவதே மேல். கைம்மைக்கும் துறவுக்கும் நெருங்கிய உறவுண்டு. கைம் பெண்கள் மூலையில் அழுவதை விடுத்து, சித்தசுத்தியுடன் தேச சேவை செய்ய முன்வருவது மேல். திவச நாளில் பட்டினியிருந்து ஆன்ம சுத்திக்காக தியானமும், ஜபமும், அன்னதானமும், பொது நலத்திற்காகும் ஈகையும் செய்ய லாம். ஆன்மசுத்தி, பரோபகாரம்—இரண்டே நாம் காக் கும் கடமைகளின் நோக்கமாயிருக்க வேண்டும்.

உச. கல்வி

சூற்றம், செயல், பழக்க வழக்கம்—இவற்றால் மனம் விகாரப்படுகிறது. மனம் புலன்கள் வழியே தாவி எங்கெங்கோ தடுமாறித் திரிகிறது. பண்படாத மனம் ஒரு காடு போன்றது: அதில் சினம், பொறாமை ஆசை யாணவ விலங்குகள் திரிகின்றன. இவற்றால் நல்வழி காணாது மனிதன் மடமையிருளில் இடர்ப்படுகிறான். அறி வொளியால் இவ்விருளை விலக்கவேண்டும். நம்முள்ளிருக் கும் கடவுளை அறிவித்து அவனை அடையப் புத்திக்குச் சாரதியாய் விளங்குவதே நல்லறிவு. இந்த அறிவைத் தூண்டுவதே உண்மைக் கல்வியாம். கல்வி, மனித வாழ் வைப் பரிசுத்தப்படுத்தும், மனத்தில் அன்பு, அருள், தூய் மை இவற்றைத் தூண்டும்; வாய்மையும் இனிமையுமான சொல்வளமளிக்கும்; வீரமும் திறனும் நேர்மையும் நிறைவும் வெற்றியும் நிலையான பயனுமுள்ள செயல் வள மளிக்கும். கற்றவன், பிறர் உணர்வை மதித்து நடப்பான்; பிறர் நாணத்தக்கதைத் தான் நாணுவான். சிறுமை, பொறாமை வஞ்சகம் கோள் பொய் என்ற இவை அவனை அணுகா. உண்மைக்கல்வி கற்றவன் தனது அறிவாற் றலைக்கொண்டு சுயேச்சையாகப் பிழைப்பான். அடிமைத் தளையை அவன் வெறுப்பான்; பேராசை கொண்டு பிறர் பொருளை வெளவான்; உணவிலும் உறக்கத்திலும் சிற்

றின்பத்திலும் மிதமாய் இயற்கை நெறியை யறிந்து நடப்பான்; தன்னுள் இருக்கும் அழிவற்று விளங்கும் சுத்தான்மாவை அறிவான்; அதன் மயமாகவே அனைத்தையும் அருளுறக் காண்பான்.

எண்ணெழுத்து மட்டுமே கல்வியாகா. முகமது நபி, ஏசுநாதர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலியோர் கல்லாப்புலவர்; உலகம் முழுதையும் அவர்கள் மனத்திலடக்கினர். மனதே அவர் கல்லூரி. நமது வாழ்க்கை முழுதும் ஒரு பள்ளிக்கூடமே: புத்தியே ஆசான்; மனமே புத்தகம். உள்ளத்தில் ஊறும் இன்பவூற்றைப் பாய்ச்சி வாழ்வைப் புண்ணியச் சோலையாக்குவதே கல்விப் பயனாகும்.

உண்ணல் உறங்கல், ஈனல் பேணல் முதலிய பொது வினைகளுக்குமேல், அவரவர் இயல்பிற்கேற்ற சிறப்பு வினை உண்டு. அதை அறிந்து நிறைவேற்ற வல்லமை அளிப்பதே உண்மைக் கல்வியாகும். அவ்வினையைச் செய்ய உடலுறுதி மனவுறுதி குணநலம்—இவை வேண்டும். உடலுறுதிக்கு வேண்டிய உடையுணவை மானமுடன் ஈட்டத் தொழிலறிவு வேண்டும். மனிதன் அன்ன விசாரத்தைத் தீர்க்க ஒரு தூய தொழிலைப் பயிலவேண்டும். மூளையை உபயோகிக்கத் தெரிவதன் முன்னே மனிதன் கைகால்களையும் புலன்களையும் உபயோகிக்கப் பயில வேண்டும். தொழிலே கல்வியின் தொடக்கமாகும். நூற்றல் நெசவு விவசாயம் இரும்புவேலை மரவேலை மனையமைத்தல் முதலிய தொழில்களால் விடாமுயற்சி பொறுமை புலனடக்கம் மனத்திட்பம் முதலிய நல்ல பயிற்சிகள் ஏற்படுகின்றன. கல்விக்கு இரு கண்கள் தொழிலும் அறிவொழுக்கமுமாம்; இவ்விரண்டும் அற்றது கல்வியாகாது.

புத்தகப் படிப்பே கல்வியாகாது. இயற்கையின் புத்தகமே இன்பமான நூல். கடவுளின் புத்தகம் உலகமெங்கும் விரிந்துள்ளது. மனிதன் எழுதிய நூல்களினின்று நாம் தெரிந்துகொள்வதைவிட நம்முடைய புலன்களைப் பயன்படுத்தி உலகப் புத்தகத்தினின்று அதிகமாகத் தெரிந்துகொள்ளலாம். அறிவதே அறிவு. முயன்று புகட்டப்படுவது முற்றும் அறிவாகாது. நமக்கு முன்னே தோன்றிய பல பெரியார் எப்படி வாழ்ந்தனர் என்பதை

நூல்களால் அறியலாம். கல்வி, சங்கீதம் போன்றது. சங்கீத நூல்களைமட்டும் படித்தால் பாடகனாக முடியாது. தனது தொண்டையைப் பல இராகங்களில் அப்பியாசப் படுத்தவேண்டும். அதுபோல, புத்தகம் படித்துவிட்டால் மட்டும் போதாது. அதன் வழியில் வாழ்வை அமைத்துப் பயிலவேண்டும். எண்ணும் எழுத்தும் வேண்டியவை தான். ஆனால், இவையே தனியாகக் கல்வியாகா. மூளைப் பயிற்சி, தேகபலம், தொழிலாற்றல், நல்லொழுக்கம், நுண்கலை ஆகிய இவ்வைந்தும் கல்வியின் பஞ்சப் பிராண னாகும். இவ்வைந்தில் ஒன்று குறைந்தாலும் கல்வி பூரண மாகாது.

நல்ல புத்தகங்கள் மனிதனுக்கு நல்வழியைக் காட் டும். தீய புத்தகங்களும் எண்ணிறந்தன உள. புனிதமான நூல்களையே மனிதன் கற்கவேண்டும்; அனுபூதிபெற்ற பெரியார் உள்ளத்திற் பழுத்த உரைகளை வேதமெனப் போற்ற வேண்டும். மகான்கள் செல்லும் வழியை மாந்தர் பின்பற்ற வேண்டும்.

ஆண் பெண் இருவருக்கும் கல்வி வேண்டும். குருடா யிருக்க யாரேனும் சம்மதிப்பாரா? இருவருக்கும் ஏற்ற (அவரவர் இயற்கைக்குத் தக்க) கல்வியைப் புகட்ட வேண்டும். எண் எழுத்து அறநெறிப் பயிற்சி—இவை இருபாலாருக்கும் பொது. தேகப்பயிற்சி இருவருக்கும் அவசியம். தொழிற் கல்வியை இருவருக்கும் ஏற்றபடி கற்பிக்க வேண்டும். நூற்றல், நெய்தல், பயிர்த்தொழில்— இம்மூன்றும் இருபாலாருக்கும் பொது. மரவேலை, இரும்புவேலை, வீடு கட்டுதல் முதலியன ஆண்களின் வேலை. பாட்டு, சித்திரம், கூடை முடைதல், அலங்கரித் தல், பிள்ளை வளர்த்தல், வீட்டு நிர்வாகம் முதலியன பெண்களுக்கு அவசியம் தெரியவேண்டியவை.

கிராமமே ஒரு நாட்டின் உயிர்நாடி; கிராமமெப் படியோ, தேசமப்படியாகும். கிராமம் செழித்தால் நாடும் செழிக்கும். அறிவொளியும் தொழில்வளமும் கிராமக் குடில்தோறும் புகுந்து பொலியவேண்டும். வறுமை மடமைப் பிணிகளை நீக்கவேண்டும். கிராம

சேவையே முதல் தேசப்பணியாகும். அதற்கு வீர வாலிபர் கூட்டம் முன்வர வேண்டும்.

உரு. இளந்தமிழ் வீரர்

ஆற்றல் வீரம் அழகு துணிவு சுறுசுறுப்பு வினையுறுதி தைரியம் ஆகிய குணங்கள் இளமைக்கு இயல்பாகும். இக்குணங்களே உருவாய்த் திரண்ட வாலிபரிடமே, நம் நாட்டின் முன்னேற்றம் உள்ளது. வீட்டிற்கு உயிர், இனிய மக்கள்; நாட்டிற்கு உயிர், வீரவாலிபர்; வீரவாலிபரே ஒவ்வொரு நாட்டின் முன்னேற்றத்தையும் ஊக்கினர். வாலிப இரத்தம் நாடுகளுக்கு விடுதலை யீந்தது; ருஷ்யா, ஃபிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான், சீனம், துருக்கி முதலிய நாடுகளில் வீரப் பொறுமையுடன் பல தியாகங்களைச் செய்து உயிரைக் கொடுத்து, சுதந்தரக் கொடியை உயர்த்திய தீரர், இளைஞரேயாவர்.

1858-முதல் இந்தியசுதந்தரப் போரை நடத்திவரும் தலைவருக்குத் துணைவராயிருப்பவர் வீர இளைஞரே. திலகர் சுயராஜ்ய இயக்கத்திற்கும், மகாத்மாவின் சத்யாக்கிரக வெற்றிக்கும் உயிர்நாடியாயிருந்தவர் வீர வாலிபரேயாவர். உலகம் புத்துயிர் பெற்றுவருகிறது. எண்ணங்கள் விசாலமடைந்து வருகின்றன. குறுகிய தடைகளைத் தகர்த்தெறிந்து, மனித சமுதாயம் புதியமாறுதல் பெற்று வருகிறது; சமரசமும், சுதந்தர சக்தியும் பெருகி வருகின்றன. ஜனநாயக முழக்கம் திசைபிளந் தொலிக்கிறது. தொழிலுக்கு வந்தனஞ்செய்யுங் காலம் நெருங்கி விட்டது. மக்கள் ஒரு குலமாய் வாழும் நாள் வந்து விட்டது. அத்தகைய புதுயுக மலர்ச்சி இளைஞர் வீரவுணர்ச்சியால் வரும். நம் தமிழணங்கு மொழியரசியாக விளங்கவும், தமிழிலக்கியம் புதிய துறைகளிற் பொலியவும், தமிழர்வீரமும் செல்வமும் அறிவும் ஒழுக்கமும் ஆற்றலும் செழித்தோங்கவும் பணிசெய்ய இளந்தமிழ்வீரரே வருக!

நமது கன்னித் தமிழ்நாடு, இளந்தமிழரின் ஊழியங்களையே எதிர்பார்க்கிறது. தமிழ்நாட்டின் புகழ்க் கோட்டையைச் சல்லி சல்லியாகக் கெல்லும் சாதி வேற்றுமையும், வகுப்புப் பொறாமையும், கட்சிச் சச்சர

வும், இளந்தமிழரின் சமரச முயற்சிகளாலேயே நீங்க வேண்டும்.

மக்களுக் கோர் சமயம்—புவி-மன் னுயிர்க்கோர் இறைவன் ;
மக்களும் ஓர் வகுப்பே—எனின்-மற்றுமுண்டோ பகுப்பே ?

சுத்த சமரச சன்மார்க்கக் கொடிபிடித்து இளைஞர் கிளர்ந்தெழுக ! வீண் வேற்றுமைகளும், காலத்திற் குதவாத பழக்கங்களும், முன்னேற்றத்திற்கு முரணான மூடக்கொள்கைகளும் இளைஞரின் தைரியமான அறப் போரினாலேதான் ஒழிய வேண்டும். பிராமணர்—பிராமண ரல்லாதார் வாதமும், இந்து-முஸ்லிம் பிணக்குகளும், பால்ய விவாகக் கொடுமையும், இளங்கைம்பெண்களின் பரிதாபமும், நாட்டின் வறுமையும், அடிமைத் தனமும், மடமையும் இளைஞராலேதான் தீரவேண்டும். ஆசாரச் சீர்திருத்தம், சமூகச் சீர்திருத்தம், தொழில் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, சுகாதார மேன்மை, வியாபார விரிவு, செல்வப்பெருக்கு ஆகிய எல்லாம் இளைஞரின் முயற்சியாலேயே இயலும். பாரத நாட்டைச் சுதந்தரத் திற்கு நடத்திச் செல்பவரும் இளைஞர் ; அச் சுதந்தரத்தை அனுபவிப்பவரும் இளைஞர் : ஆதலின், இளைஞர் ஒன்று சேர்ந்தால் எல்லாம் கைகூடும். அவர்கள் ஒற்றுமையே நாட்டின் வெற்றி ; அவர்களை மதிப்பதே நாட்டின் மதிப்பு ; அவர்கள் ஒழுக்கமே நாட்டின் ஒழுக்கம். அவர்களை மதித்துப் போற்றி ஊக்கப்படுத்தும் நாடு, சுதந்தர நாடுகளின் முன்னணியில் நிற்கும். இளைய பாரதம் வாழ்க ! இளந்தமிழர் வாழ்க !

நம்நாட்டின் முன்னேற்றத்திற்குக் கிராம நிர்மாண வேலையே வழியென்பது நம் சுருதிவாக்கியம். அதற்கு இளந்தமிழ்த் தொண்டர்களே உயிர் போன்றவர்கள். அவர்கள் ஊக்கமுள்ள உழைப்பைக் கிராமங்களிற் பயன் படுத்தினல், நம் கிராமங்களின் வறுமை நீங்கும் ; வளமை பொங்கும் ; தூக்கம் நீங்கும் ; தொழில் ஓங்கும்; அடிமைத்தனம் ஒழியும் ; ஆண்மை பெருகும். தொண்டர் பணியே சுதந்தரம் நல்கும். நம்நாட்டு விடுதலைப் பணிக்கு ஏராளமான தொண்டர்கள் வேண்டும். கிராமத் திற்கு ஐந்தைந்து தொண்டர்களாகச் சென்று பாதிரிகள் மாதிரி வேலை செய்யவேண்டும். பாதிரிமார்கள் தங்கள்

வைராக்கியமான உழைப்பால் எவ்வளவு அற்புதமான வேலைகளைச் செய்கின்றனர்; தங்கள் சமய நூல்களைப் பரப்புகின்றனர்; கோயில் கட்டுகின்றனர்; பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்துகின்றனர்; மாணவர்களுக்கு 'மிஷன்' செலவில் சாப்பாடு போட்டு, அவர்களைக் கொண்டு தொழில்கள் பலவற்றை நடத்துகின்றனர்! வைத்தியசாலை தோட்டவேலை மாடுவளர்த்தல் அச்சுவேலை நெசவு தச்சு இரும்பு வேலைகள் முதலியவற்றை ஏற்படுத்தி, ஏராளமான தொழிலாளருக்கு வேலை தருகின்றனர்; அதனின்று இலாபமும் சம்பாதித்துத் தமது செல்வாக்கைப் பெருக்குகின்றனர். அந்தப் பாதிரிகளோ, தங்கள் சிறு தேவையளவே அநுபவிக்கின்றனர்; தங்கள் முழு ஆயுளையும் அருட்பணிக்கே அர்ப்பணஞ் செய்கின்றனர். அவர்கள் செய்யும் வேலைகள் நமது சமுதாயத்திற்கு நலமோ தீதோ என்பது கேள்வியன்று. நமது சமுதாயத்தின் நலத்திற்குரிய வேலைகள் இன்னின்னவென்று நமக்குத் தெரியும். அவ்வேலைகளை ஏன் நாம் அவர்கள்மாதிரி ஊக்கமுடன் செய்யக்கூடாது? நம் வாலிபர்கள் கிராமங்களிற் குடியேறி ஏன் அத்தகைய நிலையான பணிகளைச் செய்யக்கூடாது? அன்னிய நாட்டினர், அன்னிய மதத்தினர் அத்தகைய வேலைகள் செய்யமுடியுமானல் சொந்த நாட்டினர் ஏன் செய்யலாகாது? அவர்களைவிட நூறு மடங்கு நாம் அதிகமாகச் செய்யவேண்டுமன்றோ?

உண்மையே கடவுளாகவும், அறமே மதமாகவும், தேச சுதந்தரமே நோக்கமாகவும் கொண்டு வீர இளைஞர் முன்வரல் வேண்டும்; அவர்கள் மதபோதகராயும், உபாத்தியாயராயும், தொழிலாளராயும் கிராமங்களுக்குச் செல்லல் வேண்டும், பஜனைகள், கடவுள் வழிபாடு, பக்திரச கானங்கள்மூலம் கிராமத்து மக்களை விழிப்பிக்க வேண்டும்; அவர்களுக்கு வைத்தியத்தாலும், அவசர உதவிகளாலும் ஊழியஞ் செய்து அவர்கள் அன்பைப் பெறவேண்டும்; பிறகு சுகாதார விஷயங்களை அவர்களுக்குப் போதிக்கவேண்டும். அதன்பின்னர் பள்ளிக் கூடம், வைத்தியசாலை, தொழிற்சாலை, நூற்றற்கூடம், நெசவுசாலை முதலியன ஏற்படுத்தலாம். பிறகு ஜனோபகார சங்கங்கள் ஏற்படுத்தி அதன் சார்பாக விவசாயச் சீர்திருத்-

தங்களும், ஐக்கிய நாணயச் சங்கமும், பஞ்சாயத்தும், மதுவிலக்கும், சமூக ஒற்றுமையும் ஏற்படுத்தலாம். இத் தகைய நிலையான பணிகளுக்கே தொண்டர்கள் தேவை. மேடைப் பிரசங்கங்கள் இனிப் போதும்!

நம்நாட்டில் எத்தனையோ கனவான்கள் உள்ளார்கள். அவர்கள் தங்கள் பணத்தை அணி மணிகளுக்கும், ஆடம் பரமான விருந்திற்கும், வீண் சடங்குகளுக்கும், சுகபோக லீலைகளுக்கும் செலவிடுகிறார்கள். மேற்சொன்ன கிராம வேலைகளுக்காகச் சிறிது செலவுசெய்ய அவர்கள் மனம் வளையுமாயின், அந்நாளே நன்னாளாகும். தேர்தலுக்குச் செலவு செய்யும் ஆயிரக்கணக்கான தொகையைக் கொண்டு எத்தனை கிராமங்களைத் திருத்தலாம்! வீண் கட்சிச் சண்டைகளிலும் அகங்காரத்திலும் நாடு தற் கொலை புரிந்து கொள்ளுகிறது. நிலையான வேலையே வேண்டும்; அதற்குத் தொண்டர்கள் வேண்டும். அவர் களுக்கு நாட்டின் ஆதரவு வேண்டும். ஆதரவு பெருக அன்பு பெருகும்; அன்பு பெருக அருட்பணி பெருகும்; அருட்பணி பெருக அருள் தொண்டர் பெருகுவர். தொண் டர்தம் பெருமை சொல்லவும் படுமோ? தமிழ் நாட்டு இளஞ்சிங்கங்காள், இளந்தமிழர்காள், உங்கள் வீரநாட் டின் விடுதலை உங்களிடமே யிருக்கிறது. உங்கள் தொண்டே நாட்டின் சுதந்தரம். எழுமின், உழைமின்!

உ௬. புத்துயிர்

ஆவேசம் என்பதையே காணோம், எல்லாம் மந்தமா யிருக்கிறது. வீரமெல்லாம் சோம்பலாக மாறியது; பொதுநல வித்து வாடுகிறது. சத்தம் போட்டால் செடி முளைக்குமா? தியாகத்தை ஊற்றினால்தான் வளரும். முதலில் நம்நாட்டின் வறுமையும் மடமைப் பிணியும் நீங்கவேண்டும். நமது கீழ்மையை நினைத்தால் சவுக்கினால் அடித்தாற்போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. சாதி சமயச் சச்சரவுகள் நமது மானத்தைக் கந்தலாக்குகின்றன. ஊக்கமும், உழைப்பும், செழிப்பும், ஒளியும், ஒற்றுமை யுமே சுதந்தரதேவியின் உயிர்த்துடிப்பு. அவை பெருகி இருளும் மிடியுந் தீரும் செவ்வியவழி ஒன்று தான்—அதுவே கிராம நிர்மாணவேலை.

கிராம நிர்மாண வேலை ஒரு கட்சிக்கும் விரோத மில்லை; அது நன்மை தரக் கூடியதென்று அனைவரும் அறிவர்; அரசாங்கத்தாரும் அதைப் போற்றுவர். மகாத்மா காந்தி, தாகூர், லாலாஜி முதலிய பெரியோரின் உபதேசமும் அதுவே. ஸி-ஆர். தாஸின் இறுதி முயற்சியும் அதுவே. கிராம நிர்மாணத்தைப்பற்றி ஓயாது பேசுவதிலும் எழுதுவதிலும் பயனில்லை. ஆதலின், அதைச் செய்து காட்ட முன்வரவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் சங்கங்கள் ஏற்படுத்தித் தீவிரமான தொண்டு புரிவோமாக!

க. கிராம சேவையில் ஈடுபடும் இச்சங்கத்திற்குக் "கிராம சேவைச் சங்கம்" என்று பெயரிடுக.

உ. நோக்கம்:—கிராமங்களில், கல்வியும், தொழிலும், அறவுணர்ச்சியும், நாட்டன்பும் பரப்புவது: வறுமை, மடமைப்பிணி நீங்கி, நம் நாடு வளமைபெறச் செய்வது; நமது சமூகத்தைச் சுத்தப்படுத்தி, சுதந்தர வுணர்ச்சியிந்து சமத்துவ நெறியில் வாழ்விப்பது.

ந. வழிகள்:—மேற்கண்ட நோக்கங்களை அனுபோகத்தில் கொண்டுவரவேண்டிய வழிகளாவன:—(1) திறமையுள்ள தொண்டர் படை ஏற்படுத்தல், (2) பஜனைகள் நாடகம் கதைகள்மூலம் உணர்ச்சியுண்டாக்கல், (3) பெரியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடுதல், (4) விளக்குப்படங்கள்மூலம் நாட்டின் நிலைமை, மனித தருமம், நன்னெறி, மதுவிலக்கு, கைத்தொழில், வழக்காடுவதின் தீமை முதலியவற்றைக் காட்டல், (5) நல்ல பள்ளிக்கூடங்கள் அமைத்துத் தொழிலும் கல்வியும் சேர்ந்தாற்போல் புகட்டல், (6) நூற்றல், நெய்தல், பாய்பின்னல், கூடை முடைதல், தென்னை வெல்லஞ்செய்தல், சாயம் போடல், காகிதம் செய்தல் முதலிய குடிசைக் கைத்தொழில்களை விருத்தியாக்கல், (7) குடிசைத் தொழில்களால் உண்டான செய்பொருள்களை விற்பதற்கு ஐக்கிய பண்டசாலை யொன்று ஏற்படுத்தல், (8) தொழிலாளருக்கு அவ்வப்போது, பஞ்சு பணம் இராட்டை தறி கலப்பை முதலிய கொடுத்துதவக் கூட்டுறவுத் தொழிற் சங்கம் போதிய முதலுடன் தொடங்கல், (9) கிராம சபை ஒன்று ஏற்

படுத்தி, அதன் வழியாகச் சமுதாய வுணர்வைப் பெருக்கி, ஒற்றுமை யேற்படுத்தல், (10) கிராமப் பஞ்சாயத்து, தொழிலாளர் கூட்டம், தொண்டர் படை—இவற்றை ஏற்படுத்தல்; இவற்றின்மூலம் கிராம சுகாதாரத்திற் காகவும், அமைதிக்காகவும், நீதிக்காகவும் பாடுபடல், (11) இயற்கை வைத்தியசாலை நிறுவல்; சுகாதாரத்தைப் புகட்டல்; உடலுறுதி மன்றங்கள் ஏற்படுத்தல், (12) கள் புகையிலை தேயிலை காப்பி முதலிய . தீயபொருள்களை விலக் கச் செய்தல், (13) பருத்தியை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாது தடுத்தல்; சுதேச விரதங் காத்தல்; விவசாய சீர்திருத்தஞ் செய்தல்; உணவுப்பயிர்களை மிகுதியாக்கி, போதுமான பருத்தி விளைவித்து அதைக் கிராமத்திற்கு வேண்டுமட்டும் உபயோகப்படுத்தியதுபோக மீதியையே வெளியேற்றல், (14) சமரச சன்மார்க்க சங்கம் ஏற்படுத்தி உலகிலுண்டான எல்லா மதாசாரியர்களின் திருவர லாறுகளையும் உபதேசங்களையும் புகட்டல்; அன்பும், அறமும், வாய்மையும், தூய்மையும், பொதுநலமும் கொண்ட ஒரு சமரச சன்மார்க்க வுணர்ச்சியை எழுப்பு தல், (15) கிராமத்தின் தேவைகளை யெல்லாம் அதிலேயே அடையும்படி உழைத்தல்; கிராமத்தைச் சிறு தேசமாக் கல்; கல்வி, விவசாயம், தொழில், சன்மார்க்கம், சுகா தாரம் முதலியன வளரப் பணி முறைகளை வகுத்தல்; கிராம சுயாட்சியை உறுதி செய்தல்; அதன்பால் வரும் எல்லா இடையூறுகளையும் வீரமுடன் வெல்லும் தொண் டர்களைத் தயாரித்தல்.

இப்பதினைந்துவகைப் பணிகள் மூலம் அடக்கமாகக் கிராம வேலை நடைபெறுதலே தேசம் உய்வதற்குப் பொருத்தமான வழியாகும்.

௬. *வருவாய்* :—(1) தொண்டர்களின் உண்மையான உழைப்பும், சமூகத்தின் அன்புமே கிராம வேலையின் மூல தனம், (2) நிலபுலமுள்ள தேசாபிமானிகள் முதலில் தங்கள் கிராமங்களிலேயே தொண்டரைச் சேர்த்து வேலை தொடங்கலாம், (3) கைத்தொழில் வளர்ச்சி, ஐக்கிய பண்டசாலை, பஜனை வசூல், நல்ல மனதுடன் தருமவான் கள் தரும் நன் கொடைகள், தரும சொத்துக்கள்—இவை களே முக்கியமான வருவாய். மனமார்ந்து உதவப்படும்

நன்கொடைகளையும் வரவேற்கலாம். வற்புறுத்தி வசூலிக்கக்கூடாது.

ரு. அங்கத்தினர் :—இச்சங்கத்திற்கு இறைவனே அக்கிராசனர் ; மனச்சாட்சியே காரியதரிசி ; உழைப்பே நிர்வாக சபை ; கைகால் அவயவங்களே காரிய சபையோர். இஃது ஒரு பொதுநலச் சங்கம். சாதிமத நிறபேதமின்றி எல்லாரும் இதிற்சேர உரிமையுண்டு. தன்னலமற்ற அருட்பணியே இதன் கொள்கை.

நம் நாட்டில் ஒரு புத்துயிர் பிறக்க இத்தகைய சங்கமே தேவையென்பது எமது விருப்பு. இம்முறையில் ஒழுங்காக வேலைசெய்தால் நம் நாடு, மடமை, வறுமை, அடிமைப்பிணிகள் ஒழிந்து நலம்பெறும் என்பது நமது அனுபோக வுறுதி. சில கிராமங்களில் இவ்வாறு பணி செய்து பெரும்பயன் கண்டோம். அன்பர்காள், நம்புங்கள் ; நினையுங்கள் ; முயலுங்கள் ; உதவுங்கள் !

உஎ. ஜனோபகார சங்கம்

உலகமெங்கும் நலமுற வாழலாம். எல்லாரும் உண்மையான சகோதரர்போலிருக்கலாம். எல்லாரும் சுத்த சமரச வாழ்க்கை வாழலாம். உலகினின்று பாவத்தைத் துரத்திவிடலாம். உலகெங்கும் பஞ்சமா பாதகமும், அகங்காரமும் நிறைந்திருப்பதற்கு, வறுமையும், மடமையுமே காரணம். நாமெல்லாரும் ஈசனுடைய புதல்வர் ; சகோதரர். இவ்வுலகில் நமக்கும் சமமான பங்குண்டு என்பதை மறப்பதனாலும், ஒருவன்மட்டும் பலர் அனுபவிக்க வேண்டிய பொருளைக் குவிப்பதனாலும், பலர் இருக்க வேண்டிய இடத்தை வளைத்துக்கொண்டு ஒருவன் பெரிய மாளிகை கட்டுவதனாலும், தன் தேவைக்கு மேற்பட்ட பொருளைச் சேர்த்துக் குவிப்பதனாலும், இடம்பத்தினாலும், குடி கூத்தியாலும், தொழிலறிவின்மையாலும் வறுமை பிறக்கிறது. ஒரு கிராமத்தில் 1000 செய்கையிருப்பதாக வைத்துக்கொள்வோம். அதில் 500 மக்களிருக்கிறார்களெனக் கொள்வோம். பூமி எல்லாருக்கும் பொது. நாம் பிறக்கும்போது நிலங்காணி பட்டங்களைக் கொண்டு வந்ததில்லை. நாம் போகும்போதும் கொண்டு

போகப் போவதில்லை, ஒருவன் அகம்பாவத்துடன் "நானே இந்த ஆயிரம் செய்களுக்கும் தலைவன்" என்கிறான். ஒருவன் தனக்கு மட்டும் 500 செய்களின் மகசூலைப் பிடுங்கிக் கொள்ளுகிறான். மீதியிருக்கும் 449 பேருக்கும், மீதி 500 செய் ஊதியஞ் செல்லுகிறது. அதிலும் 15 பணக்காரர்கள் ஒவ்வொருவரும் 20 செய் எடுத்துக்கொள்வர். தலைவன் பணக்காரருக்குக் கொஞ்சம் ஈந்து, அவர் உதவியால் ஏழைகளை அடக்குகிறான். 434 பேருக்கு மீதியிருக்கும் 200 செய்களைப் பங்கிட்டால், ஒவ்வொருவருக்கும் $\frac{1}{4}$ செய் நிலங்கூடக் கிடைப்பது அரிதாயிருக்கிறது. அதனாலே தான் 500 பேரில் 434 பேர் ஏழைகளா யிருக்கிறார்கள். இவ்வேழைகள் கதியற்றுப் பணக்காரனுக்கே அடிமையாகின்றனர்; அவன் சொல்லும் பாபச் செயல்களை யெல்லாம் செய்கின்றனர். அவன் பாபத்திற்கெல்லாம் இவர்களே கருவிகள். ஏழைகள் பாபமும் செய்து, வயிற்றிற்கும் கஞ்சியில்லாது தவிப்பதற்கு உண்மை அறியாமையே காரணம். சிறிது சுயேச்சை யுள்ளவர்கள் அகங்காரிகளால் அடக்குமுறைக் குள்ளாகி வருந்துகின்றனர். உலகில் அவரவர் உணவும் உடையும் பாபமற்ற வழியில் அடைந்தால், வறுமை இருக்குமா? வறுமை யில்லாவிடில், திருட்டும் அடிமைத் தனமும் ஏது?

ஏழைகள் ஆடையுணவைப் பாபமற்ற வழியில் அடையவும், பணக்காரருக்குத் தியாகபுத்தி வரவும் ஒரு வழி செய்ய வேண்டியிருக்கிறது. இதற்காகக் கிராமந் தோறும் "ஜனோபகார சங்கம்" ஒன்று ஏற்பட வேண்டும். அதன் நோக்கங்களாவன!

(1) 'எல்லாரும் ஒரு கடவுளின் மைந்தர்கள், நாமெல்லோரும் சகோதரர்கள்' என்ற சமரச வுணர்ச்சியை எல்லாருடைய மனத்திலும் செய்கைகளிலும் விளக்கல்.

(2) பாபமற்ற வழிகளால் எல்லாரும் ஆடையுணவுகளை அடையச் செய்வது.

(3) அடிமை யுணர்வை யொழித்தல்; ஆண்மை வளர்த்தல்.

(4) வேலையில்லாத ஏழைகளுக்கு வேறு வயல்களிலாயினும், தறிச்சாலையிலாயினும், வேலைக் கூடத்திலாயினும் (Work House) உழைப்பீதல்.

(5) ஏழைகளுக்குச் சாப்பாட்டிற்குக் கட்டும்படியாக மக சூல்களையும், கூலியையும் பங்கு வைத்தல்.

(6) உழைப்பாளிகளை ஒற்றுமைப்படுத்தல், சீர்திருத்தல.

(7) கள், காப்பி, தேயிலை, புகையிலை, சுருட்டு, புலால் முத லியவற்றை உபயோகிக்கும் தீய பழக்கத்தை நீக்கல்; சூதாட் டத்தை ஒழித்தல்.

(8) வீட்டுக்கு வீடு இராட்டை சுழலச் செய்தல்.

(9) ஒவ்வொரு கிராமத்திற்கும் போதுமான வேட்டி புடவை நெய்யக் கைத்தறிகளை நடத்தல்.

(10) பயிர்நூலைக் கற்பித்தல், விளைவைப் பெருக்கல், உண வுடைப் பயிர்களை மிகுதியாக விளைவித்தல், புகையிலைபோன்ற பொல்லாப் பயிர்களைத் தவிர்த்தல்.

(11) கிராமப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி மக்களுக்கு உண்மையான கல்வியை இனமாகப் புகட்டல்.

(12) பஞ்சாயத்தும் பொதுக் கூட்டமும் கூடி, ஏழைகளுடைய விவகாரங்களைத் தீர்த்து நியாயமளித்தல்.

(13) மாதந்தோறும் சிறு சிறு துண்டுப்பிரசுரங்களின்மூலம் மனித தருமத்தைப் புகட்டல்.

(14) வீரமுள்ள திருத்தொண்டரைக் கொண்டு சுத்த சன் மார்க்கப் பிரசாரம் செய்தல்.

(15) சுற்றுப் புறங்களிற் சென்று ஏழைகளுக்கு உதவி செய்தல்; 'எல்லா உலகிற்கும் இறைவனொருவனே' என்னும் உண்மையை நிலைநாட்டிச் சகல மதங்களுக்கும் பொதுவான தருமத்தை உபதேசித்தல்; உபதேசம் செய்பவரையும் தயார் செய்தல்.

(16) கிராம ஒழுங்கு வேலை;

18 NOV 1941 MADRAS

செலவு:

(1) பிரசாரகர் சம்பளம், படிச்செலவு.

(2) பள்ளிக்கூடம்.

(3) தொழிற்சாலை: இராட்டினம்—கலப்பை—தறி—கரும் பாலை—மாடு கன்றுகள் வாங்கல்.

(4) தொழிலாளிகளுக்கு முன்பணங் கொடுத்தல்.

(5) பிரசுரச் செலவுகள்.

(6) இயற்கை வைத்தியம்.

(7) கூட்டுறவுச் சங்கம், கடை, பண்ட சாலே.

(8) உபரிச் செலவுகள்.

வருவாய்

(1) கிராமக் கட்டுப்பாட்டின்படி மகசூல்களில் 20 கலத்திற்குக் குறைந்தவர் 1/40-ம், 100 கலத்திற்குமேல் 1/50-ம், 500 கலத்திற்கு மேற்பட்டவர் 1/20 பங்கும் இச்சங்கத்திற்கு உதவியாகக் கொடுத்தல் வேண்டும்.

(2) கலியாணம் திருவிழாச் சமயங்களில் ரூபா ஒன்றுவது சம்பாவனே செய்தல் வேண்டும்.

(3) தீபாவளி பொங்கல் திருவிழா முதலிய சுபதினங்களில் பஜனே செய்துகொண்டே உண்டி வசூல் செய்தல்.

(4) வருஷம் 4 அணு முதல் 2 ரூபா வரை தரம்வாரியாய் வசூல் செய்தல்.

(5) குற்றவாளிகளுக்கு அபராதம் விதிக்கும் தொகையைச் சங்கப் பொதுநலத்திற்கு உபயோகித்தல். அபராதத்திற்குப் பதிலாகத் தொழிற்சாலேயில் வேலேசெய்யச்சொல்வது; மண் வெட்டி கோடரி முதலியவற்றை வாங்கிப்போடச் சொல்வது. (பணமும் பண்டமும் ஒன்றே.)

(6) அபிமானிகள் யாவரும் தொழிலாளருக்குப் பிழைப்பு கொடுத்துத் தங்கள் நிலங்களில் அமர்த்திக்கொள்வது; நிலம், பொருள் ஆயுதங்கள் முதலியவற்ருல் உதவுவது; வசூலான பணத்தை ஜனுேபகார பாங்கிகளிலும், நிலத்தின் மேலும் போடலாம். உழைப்பும் பிழைப்பும் உண்டாக்குவதே பணத்தின் நோக்கமாகும்.

(7) விரும்பி வரும் நன்கொடை வசூல்.

காரியஸ்தர்

(1) இச்சங்கத்தில் சாதி, நிறம் ஏழை, செல்வன் என்ற வித்தியாசமின்றி யாரும் அங்கத்தினர்களாகச் சேரலாம். கட்டணம் ¼ ரூபா முதல் 2 ரூபா வரை.

(2) அங்கத்தவர்களெல்லாரும் குறித்தவிடத்திற்கூடி, சீட்டுகளின் மூலம் பஞ்சாயத்தாரையும், பொதுக்கூட்டத்தாரையும்,

பிரசாரகர்களையும், தலைவர்களையும் தேர்ந்தெடுத்தல் ; தகுந்த யோக்கியதையுள்ளவர்களை நிர்வாகஸ்தராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(3) பொதுஜன நம்பிக்கையுள்ள ஒரு நல்லாரே பாங்கிக் காரியதரிசி ; இவர் காரியசபைத் தலைவர்களுக்கு உட்பட்டவர்.

(4) உபாத்தியாயர், பாங்கி குமாஸ்தா, பிரசாரகர் ஆகிய இவர்களின் சொந்தச் செலவுக்கு வழிசெய்தல். பணமாகவும் பண்டமாகவும் சன்மானம் தரலாம்.

வகை

(1) பிரசாரகரைக் கொண்டு ஒவ்வோரிடத்திலும் அடிக்கடி பொதுக்கூட்டம் கூட்டச் செய்யவேண்டியது. பள்ளிப்பிள்ளை களுக்குத் தக்க நூல்களின் மூலமும், தூயவாழ்க்கையின் மூலமும் சிறந்த கொள்கைகளைப் பிரசாரம் செய்யவேண்டும். நூற்றல், நெய்தல், உழுதல், வீடுகட்டல், பானை செய்தல் முதலிய மாசற்ற தொழில்களால் ஏழைகளுக்குப் பிழைப்புண்டாக்க வேண்டும். பிரசாரகர் தினக் குறிப்பு எழுதிக் காரியதரிசிக்கு அடிக்கடி அனுப்பவேண்டியது.

வருஷம் ஒருதரம் ஜனோபகாரக் கூட்டம் குறித்த விடத்தில் சிறந்த தலைவரின் கீழ்க் கூடும். அப்போது காரியதரிசி செய்த வேலைகளைப் பற்றி அறிக்கை வாசிப் பார் ; பிரசாரகர்களும் மற்றோரும் தங்கள் தங்கள் அனுபவங்களைச் சொல்லுவர் ; சங்கத்தில் செய்யவேண் டிய திருத்தங்களையும் அபிவிருத்தியையும்பற்றிப் பொது ஜனங்கள் பேசுவார்கள் ; தொண்டர் படையும் அப்போது சேர்க்கப்படும்.

இந்த மாதிரி கிராமந்தோறும் ஜனோபகாரசங்கம் கூட்டுக!

உஅ. கிராமப் பள்ளிக்கூடம்

ஐந்து தொண்டர் ஒரு கிராமத்திற் குடியேறவும். முத லில் கடவுள் வழிபாடும், பஜனையும் நல்ல தோப்பொன் றில் தொடங்கவும். இரண்டாவதாக சமூக ஊழியத்தால் (முக்கியமாக வைத்தியம்) பொதுமக்களின் மனதை வசப் படுத்தவும். பின்பு நல்ல புராணங்களைப் படித்துப் பெற்

ரோர்களை வசப்படுத்தவும். பிறகு அந்தக் கிராமத்தில் ஒரு தெருத் திண்ணையில் பள்ளிக்கூடந் தொடங்கவும். தொடங்குமுன் நம்பத்தக்க தருமவான்களின் ஆதரவைப் பெறவேண்டும். ஒரு தருமவானிடம் கட்டிடவுதவி கேட்கவும். உபாத்தியாயருக்கு வேண்டியதைக் கிராம சமுதாயத்தார் பண்டமாகத் தருதல் எளிது. போதன சக்தியினுல் ஆசிரியர், தம்மிடம் அதிகப் பிள்ளைகள் வரும் படி செய்தல்வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு முதலில் வேண்டுவது தக்க ஆசிரியனே.

ஆசிரியன் எவ்வகையாலும் தன்னைப் பிறர் உதாரணமாகப் பின்பற்றக் கூடியவனுகவும், பரிசுத்தனுகவும், பிள்ளைகள் தெய்வமென்று பக்தி செலுத்தத் தக்கவனுகவுமிருத்தல்வேண்டும். அவனுக்கு நிறைவான கடவுளன்பும் வேண்டும். குழந்தைகளைக் கண்ணன் முருகன் என்றெண்ணி அன்புடன் நடத்தவேண்டும். அவன் சுத்த சாதகனு யிருக்கவேண்டும்; தருமமே உருவாயிருக்க வேண்டும். ஆசிரியனுடன் வசிப்பதே மாணவருக்குச் சன்மார்க்க சாதனமாகவேண்டும். குடும்பவாழ்விலும் பிறருக்கு ஆசிரியன் உதாரணமாயிருக்கவேண்டும்; குரு பத்தினி குழந்தைகளைத் தாயன்புடன் பேணவேண்டும். மாணவர்களை ஆசான் தன் குழந்தைகளைப்போலக் கருதிப் பயிற்றவேண்டும். கல்வியை ஒரு புண்ணிய கைங்கரியமாகச் செய்யவேண்டும்; ஆசான் போதன சக்தி பெற்று, தாய்மொழிப் புலமையும், ஆரியம் ஹிந்தி ஆங்கிலம் இம்மூன்றில் சுமாரான அறிவும் எண்சுவடிக் கணக்குகளைத் திறமையாகக் கற்பிக்கத்தக்க திறமையும், பூகோளம் அறிவு நூல் பயிர்நூல் வைத்தியம் சங்கீதம், ஏதாவது ஒரு கைத்தொழில் ஆகிய இவற்றில் நல்ல தேர்ச்சியும் உடையவனுக இருத்தல்வேண்டும். அவன் நல்ல உடலுறுதி பெற்றிருக்கவேண்டும்; சன்மார்க்க சீலனு யிருக்க வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல், சோம்பல், நாணமை, சரியான கல்விப் பயிற்சியின்மை, ஒழுக்கக் குறைவு, தொழிற்சோம்பல், அன்பின்மை, பேராசையுள்ளவர் ஆசிரியராகார்.

நல்ல ஆசிரியன் தெருவுக்கொருவன் இருத்தல் நலம். ஆசிரியர்பதவி பரம்பரையாக வரலாம். அவ்வாசிரியன்

தன்னைப்போல இன்னும் ஆசிரியர் சிலரைப் பழக்கி, வேறு கிராமங்களுக்கு அனுப்பவேண்டும்; மாணவரை வீரராகப் பயிற்றவேண்டும். தாய்மொழி நன்றாக எழுதப் படிக்கவும், எண்சுவடிக் கணக்கும், தேச சரித்திரமும், ஜில்லா பூகோளமும், இயற்கைச் சுகாதார நெறியும், அறவழியும், வாழ்வை உயர்த்தக்கூடிய பாடலும், பத்திரிகை பார்த்துத் தன் தேச நிலையை அறியுந்திறனும், தோட்டப் பயிற்சியும், சாரணப் பயிற்சியும், ஒரு கைத்தொழிலும் மாணவனுக்குத் தெரியவேண்டும்.

௨௯. இடம்

நல்ல இயற்கையழகு வாய்ந்த சோலையே பள்ளிக்கூடத்திற்கு ஏற்ற இடம். மழைக்காலந் தவிர வேறு காலங்களில் மரத்தடிகளே (வேம்பு, ஆல்) வகுப்பிற்கு நல்ல இடம். பள்ளிக்கூடத்தினருகே நதி, மலை, ஏரி முதலியவை யிருப்பது அவசியம். மாணவரை அடிக்கடி இயற்கையழகு நிரம்பிய இடங்களுக்கு அழைத்துச் சென்று, தன்னுதவியைப் புகட்டவேண்டும். வாழ்வில் வரும் சோதனைகளைத் திறமுடன் தாங்கும் பயிற்சி பள்ளிக்கூடத்தில் மாணவருக்கு அமையவேண்டும். ஒரு தோட்டம் போடவேண்டும்; ஒவ்வொரு மாணவன்பெயராலும் அத்தோட்டத்தில் ஒவ்வொரு செடி வளரவேண்டும். மாணவருக்குச் சுவரெடுக்கவும், செங்கற் காளவாய் போடவும், கீற்று முடையவும், குடிலமைக்கவும் கற்பித்துக் குடிசை கட்டச் சொல்லி அதில் அவர்கள் வசிக்கும்படி செய்வது பெருமையானது. பள்ளிக்கூடத்தில் ஒரு கிணறு வெட்டலாம். அதில் தண்ணீர் இறைப்பதும், தோட்ட வேலை செய்வதும் மாணவருக்குச் சிறந்த தேகப் பயிற்சியாகும்.

௩௦. பயிற்சி முறை

இயன்றவரை மாணவர் நல்லாசிரியனுடன் உறைவது நலம். அம்மாணவர் தோட்ட வேலையாலும், நூற்றல், நெசவு முதலிய தொழில்களாலும் தங்கள் ஜீவனத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

நான்கு மணிக்கு மாணவர் எழுந்து கடவுள் வணக்கம் பாடிப் பிறகு வெளிக்குச் சென்று வந்து பல் விளக்க வேண்டும். 4-மணிக்கு வெளிக்குச் செல்லும் வழக்கம் இளமை முதலே பழக்கமாக வேண்டும். அப்பழக்கம் ஏற்பட்டால் நோய் அணுகாது. மலச் சிக்கலினால்தான் நோய்கள் பெரும்பாலும் வருகின்றன. வெளிக்குச் சரியாக வராவிடின் தண்ணீர் அருந்தி உபவாசமிருக்க வேண்டும். வெளிக்குச் சென்று வந்ததும், தோட்டத்தில் வேலை செய்தல், தண்ணீர் இறைத்தல், தென்னைக்கு மண்சுமத்தல், உரமிடல், மாட்டுச் சாணத்தைச் சேமித்தல், அறையை மெழுகுதல் முதலியவற்றைச் செய்ய வேண்டும்; அதன்பிறகு குளிக்கச் செல்ல வேண்டும் குளிர்காலங்களில் வெந்நீர் போட்டு முழுகலாம். ஆடைகளை நன்றாகத் துவைத்துக் குளித்தல் வேண்டும். முழுகும் போது நன்றாக அழுக்குத் தேய்த்துக் களிமண்ணைப் பூசி முழுகவேண்டும். அதன்பிறகு உலர்ந்த ஆடை யுடுத்தி அனைவரும் அகண்ட வுலகாலயத்தில் அரை வட்டமாக உட்கார்ந்து பிராணயாமம் செய்யவேண்டும். அஃது ஆனதும் அனைவரும் எழுந்து நின்று கீதை திருமுறை நூல்கள் பைபிள், குரான் முதலியவற்றினின்று அறமொழிகளைச் சொல்லி, அவற்றிற்குச் சுருக்கமாக வியாக்யானம் அறிய வேண்டும். வழிபாடுகள் ஆனபின் மாணவர் முதலில் பாடங்களுக்குச் செல்வார்கள். காலைப் பாடங்கள் 7-முதல் 11-மணி வரை நடக்கும். தமிழ், ஆரியம், கணக்கு ஆங்கிலம் இந்நான்கும் காலை நடக்கும். 11-மணிக்குப் பிறகு மறுபடியும் முகங்கழுவி, தோத்திரஞ்செய்து, சாப்பாட்டிற்கு உட்காரவேண்டும். சமையல் செய்வோருக்கு மற்ற மாணவர் உதவி செய்யலாம்; அல்லது மாணவரும் சமைக்கலாம். மாணவருக்குக் கரியடுப்பும் சட்டிகளும் வாங்கிக் கொடுத்துத் தனித்தனியாகச் சமையல் செய்து கொள்ளும்படியும் விடலாம். தினம் ஒரு மாணவனைச் சோறு பரிமாறலாம். சாப்பிடும்போது மௌனமாக நன்றாக மென்று சாப்பிடவேண்டும். தாமத வுணவுகளை விலக்கவேண்டும். சாப்பிட்டெழுந்ததும் 12 முதல் 1½ மணி வரை நூற்றல்; பிறகு, சங்கீதம், நெசவு, பூகோளம் அறிவுநூல், சரித்திரம் முதலியவை கற்பிக்கப்படும்; 4 மணிக்கெல்லாம் தோட்ட வேலைக்குச் செல்லவேண்டும்.

$5\frac{1}{2}$ முதல் $6\frac{1}{2}$ வரையில் சாரணப் பயிற்சியும் ஆடலும் கற்பிக்கவேண்டும். $6\frac{1}{2}$ முதல் 7 வரை மாலை வழிபாடுகளை முடித்து $\frac{1}{2}$ மணி நேரம் பஜனை செய்து, பிறகு இராச்சாப்பாடு கொள்ளவேண்டும். இரவு 8 முதல் வீரர் சரித்திரம், வான சாஸ்திரம், நாடகங்கள் நடித்தல் முதலியவற்றைக் கற்கலாம். 10 மணிக்குத் தியானஞ்செய்து படுத்து, மறுபடியும் 4 மணிக்கு எழுந்திருக்கவேண்டும். இதுதான் குருகுலப் பயிற்சி முறை. இம்முறையில் பயிலும் மாணவர் வீரமணிகளாவர்.

௩௧. நன்னெறி

பரிசுத்தமடைந்த வாழ்வு பேரின்பம் பயக்கும். சுத்தமே கடவுள். தூய வாழ்வு கடவுளைத் துலக்கும்; பரிசுத்த மனம் பளிங்கு போன்று தெளிவாகும். தூயோனுடைய மொழிகள் திட்ப நுட்பமான சூத்திரங்கள் போலும். அவை உலகிற்கு வழிகாட்டும் இன்சொற்கள். அவன் செயல்கள் சுயநலமற்றவை; பிறருக்கு நன்மையானவை. மனோவாக்குக்காய சுத்தமே திவ்விய ஜீவனத்தை நல்கும். மனமாசு படிந்த சுயநல வாழ்க்கை கட்டும் கவலையுமாகும்.

வஞ்சமனத்தான் தன்னையே வஞ்சிக்கிறான். பிறர்க்கின்னா செய்பவன் தனக்கே கெடுதல் செய்கிறான். நாத்திகச் செருக்கன் தன் இதயத்தானையே வஞ்சிக்கிறான். கள்ளன் தன் இன்பப்பொருளையே பறிகொடுக்கிறான். வினைப்பயன் விளைவதுறுதி. நமது மனப்பகையே பிறர் பகையாகிறது. அகத்தின் விளக்கமே புறம்; செயலின் விளக்கமே பயன். தானே தனக்கு நன்மை, தானே தனக்குத் தீமை, தானே தனக்கு நண்பன்; தானே தனக்குப் பகைவன். மனமே மனிதன்; செயலே அவன் விளக்கம். அழகுபோலும், சுகம்போலும் தோன்றி அடிமைகொள்ளும் மாயவலைகளை மனிதன் விலக்குக; அன்பும், அருளும், இன்சொல்லும், தீரமும், பரோபகாரமும் மனித வாழ்வுடன் ஒன்றியிலங்குக; ஆசாபாசப்பேய்கள் அறிவுத் தீயால் அழிக!

பொய் கொலை களவு தீமை பொருளாசை அடிமைத்தனம்—இவற்றை விலக்கவேண்டும்; செம்மையும் சால்பும்

கடைப்பிடிக்க வேண்டும். இதுவே நன்னெறி. நன்னெறியாளன் பரிசுத்தமடைவான்; சுதந்தரமடைவான்; அனைத்தையும் நிகரெனக் காண்பான். அவனிடம் சிறுமையும், அடிமை நினைப்பும், சுயநலமும், இடம்பமும் இரா.

தூய செயல்களும், அகமகிழ்வும், கடவுள் வழிபாடும், ஆருயிர்க்கு அன்பும், தெளிந்த அறிவும், நற்செய்கையும், தூய நினைப்பும், அன்பர் பணியும் சுத்தநிலை தரும்; வாழ்வை உயர்த்தும். தூய செயலுக்குச் சுத்த மனம் வேண்டும். மனம் சுத்தமடையக் கவலைப் பிணி ஒழிய வேண்டும். பேராசையால்தான் கவலையுண்டாகிறது. போன துயரையும், வந்த பிணியையும், இனிவரப்போகும் இன்னல்களையும் எண்ணாது, என்றுங் களிப்பெய்தி, என்ன வந்தாலும் சோர்வின்றி யிருக்கும் சாந்த மனமே இன்ப மளிக்கும்.

எவ்வுயிரும் பராபரனுடைய சந்நிதியென்று வழிபடுவதே சிறந்த கடவுள் வழிபாடாகும். உலகையே கோயிலெனக்கொண்டு, ஆருயிர்களையே நடமாடும் கடவுளெனக் கண்டு அருட்பணியாற்றுவதே சிறந்த கடவுள் வழிபாடாகும். பூமிதேவியைத் தாய் என்று வணங்குக; சூரியனை உலகின் சக்தியென்று வணங்குக; கடலை வேதமுழக்கமெனக் காண்க; காற்றை உயிர்த்தந்தையென்று போற்றுக; இவற்றையெல்லாம் படைத்து நடத்தும் இறைவனை உட்கண்ணாற் காண முயற்சி செய்க; உலகின் மூலம் கடவுளைக் காண்க; படைப்பின் மூலம் பரமனையறிக; உள்ளத்தால் கடவுளை உணர்க; அன்பால் கூடுக! கடவுள் நம்மைக் காண்கிறார்; அவர் விழிகளை ஏமாற்ற முடியாது. இரகசியமாகச் செய்வதும் வெளிப்படையாகச் செய்வதும் அவருக்குத் தெரியும்; கவனம்! இறைவனுக்கே நினைப்பையும் செயலையும் நிவேதனமாக்குக! அவனன்பரே நண்பர். நல்லவர் கூட்டமே அறிவிற்குச் சாணைக்கல். தெய்வம் போற்றித் தேவரைச் சார்ந்து தெய்வத்தன்மை பெறுக! அதனால் வாழ்க்கை தனக்கும் பயன்படும்; உலகிற்கும் பயன்படும். திண்ணை விளக்குத் தெருவிற்கும் ஒளியைப் பரப்பும்; தன் தூய்மையும் வாய்மையும் உலகிற்கும் நலமாகும்; தனது தவக்கனல் உலகிற்கும் சக்தியளிக்கும்; வானக் கதி

ரொளி உலகிற்கும் ஒளியாகும். தான் திருந்தினல் உலகும் திருந்தும். அவரவர் சுத்தநிலை பெற்றல் அவனியும் சுத்தநிலை பெறும். தன்னைத் திருத்துவதே பிறரைத் திருத்துவதாகும்.

௩௨. தேக சுத்தம்

உடலுக்கும் மனத்திற்கும் நெருங்கிய பொருத்தமுண்டு. உடலழுக்குற்றல் மனமும் அழுக்குறு மென்பதற்கு ஐயமில்லை. குளிக்காம லிருப்பதுமட்டும் உடலழுக்கையுண்டுபண்ணு மென்பதில்லை; சோம்பல், இடம்பம், செருக்கு என்றவையும் அழுக்கேயாகும். நமது தோலைக் காலையும் மாலையும் தண்ணீரால் தேய்த்துக் கழுவவேண்டும்; அடிவயிற்றையும் முதுகையும் மண்டையையும் முதன்மையாகத் தேய்த்துத் தேய்த்துக் கழுவவேண்டும். குளிப்பதனல் பல நோய்கள் அணுகாதொழிகின்றன. முரட்டுத் துண்டொன்றை நன்றகத் தண்ணீரில் நனைத்து முதுகைப் பத்து நிமிஷம் தேய்த்தால் தொட்டி முழுக்கிற்கு இணையாகும். வயிற்றின் மேல் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டிருத்தல் பல வயிற்று நோய்களுக்கு மருந்தாகும். தண்ணீரே மனிதனுக்கு உள்ளும் புறமும் உபயோகிக்கக்கூடிய உயர்ந்த மருந்து. காலை மாலை 6 மணிக்குக் குளிப்பது சிறந்த பழக்கம்.

வெளித்தோலை மட்டும் சுத்தம் செய்வது போதாது. உள்ளே குடலைச் சுத்தஞ் செய்யவேண்டும். அடிவயிறே நோயின் பிறப்பிடம். குடலடைப்பே உடலிடும்பையை உண்டாக்கும். அளவோடு தினம் இருமுறை சுசிருசியாக உண்டு பட்சமொருமுறை உபவாசமிருந்தால் உடல் சுத்தியாகும். மக்கள் மலம் வைத்து உண்ணமல் வாழவேண்டும். இந்த மர்மத்தை எப்போதும் எண்ணவேண்டும். மலக்கட்டு மலச்சிக்கல் உள்ளவர்கள் காலை 4-மணிக்கு 10 மிடறு தண்ணீரருந்திப் பிறகு நல்ல காற்றில் 3 மைல் தூரம் நடந்தால் மலச்சிக்கல் நீங்கும்; மலசுத்தியானதும் மறுபடியும் 10 மிடறு தண்ணீர் சாப்பிடவும். இம் மாதிரி குடல்சுத்தி செய்வது மிகவும் இன்றியமையாதது. மூக்கு காது இவற்றையும் சுத்திசெய்து கொள்ளவேண்டும். சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் பல் விளக்கு

தல் இன்றியமையாதது. 5 நிமிஷங்களுக்கு மேல் பல் விளக்குவதில் செலவழிக்க வேண்டா. எச்சிலை வீணுக் கக்கூடாது.

மற்ருெரு முக்கியமான தேகசுத்தி சூரியஸ்நானம். இதைத் தினம் செய்வது மிக நலம். காலை $9\frac{1}{2}$ மணி முதல் 10 மணி வரை முழு உடலையும் வெயிலில் நீட்டியிருக்க லாம். உடல் நன்ருக வேர்த்தவுடன் மறுமுறை குளிர்ந்த நீரில் குளித்து விட்டால் மிகவும் சுகமாகும். இது எல்லா நோய்களையும் போக்கும்; நல்ல தேஜஸைக் கொடுக்கும். இதையொட்டியே முற்காலத்தில் சூரிய நமஸ்காரம் செய் தனர்.

மற்ருெரு தேகசுத்தம் பிராணுயாமம். பத்மாசனத்தி லிருந்துகொண்டு, இட மூக்கின்வழியாக மூச்சை 4 மாத் திரைகள் உறிஞ்சி, 16 மாத்திரைகள் அடக்கி, 8 மாத்திரை கள் வெளிவிடவும். மறுபடியும் மூக்கு வழியாக 4 உறிஞ்சி 16 அடக்கி, 8 வெளிவிடவும். இப்படி 5 தடவை ஒருமனத் துடன் செய்தால் போதுமானது. இது மனிதனுய்ப் பிறந்த ஒவ்வொருவனும் செய்யத்தக்கது. காலை 4 மணி, 12 மணி, மாலை 6 மணி, இரவு 10 மணி, 12-மணிக்கு இதைச் செய்யவேண்டும். இவ்விதமான சுத்தவழிகளால் உடலும் மனமும் சுத்தமாகும். உபவாசம், குடல்சுத்தி, சூரிய ஸ்நானம், பிராணுயாமம், ஜல ஸ்நானம், காற்ருட வசித்தல் ஆகிய இவையே தேகசுத்தத்தையும் மனக்களிப் பையும் தரும். இவற்றை ஒவ்வொரு மனிதனும் கரு துக. கண்டபடி கண்ட உணவை வைத்துத் திணிப்பதும், அதிக நேரம் தூங்குவதும், நெருக்கமாகச் சட்டைகளை யணிவதும், மலம்வைத்து உண்ணுவதும் கொடியநோயாக வளரும்.

மிதமிஞ்சிய தூக்கத்தினுல் பல பிணிகளும் சோம்ப லும் தளர்வும் உண்டாகின்றன. அதிலும் பகல் தூக்கம் கொடிது கொடிது! கண்ட ஆகாரத்தை உண்பதனுல் உண்டாகும் கேடே இத்தூக்கம். பகல் தூக்கத்தை முற் றிலும் வெறுத்தல்வேண்டும். மலபந்தம் தூக்கமெனும் படுகுழியில் அயர்த்தும். பகல்போலவே, இரவிலும் வண்டுபோல் சுறுசுறுப்பாயிருப்பது எவ்வளவு ஆனந்தம்! அதை அனுபவிகளே அறிவர்! இரவு 10 மணிக்குப்

படுத்து 4-மணிக்கு எழுந்திருக்கும் பழக்கத்தைக் கொள்ள வேண்டும். இரவில் மிகவும் மிதமாகவே உண்ணல் வேண்டும். படுக்கைக்குப் போவதற்கு 3-மணி நேரத்திற்கு முன்னே உண்ணவேண்டும். படுக்கும்போது வெறும் வயிற்ருேடு தண்ணீர்குடித்துப் படுக்கவேண்டும். இப்படிச் செய்தல், இந்திரியத்தை வசப்படுத்தும்; அதை யொட்டிய பலநோய்களைத் தீர்க்கும். இயற்கை முறையை அனைவரும் பின்பற்றி மறுபடியும், பாரத நாட்டை வீர முனிவர் நாடாக்க முயலுங்கள்!

௩௩. பெண்ணுக்கிரங்கு!

சற்று விழி திறந்து நோக்குக! வாலிபர் உடலில் எலும்புக் கூடுதான் இருக்கிறது. காளைபோன்ற தோற்றம் யாருக்குள்ளது? எங்கும் கூட்டு நெஞ்சு; எங்கும் கண்ணுடிக்கண்; குட்டி நரை; நூற்றுக்குத் 99 இந்திரிய நோய்கள்; நடைப் பிணமாகிவிட்டனர் ஆண்மக்கள்! இதில் வறுமைக் கவலை, வயிற்றுக்கவலை, பரீட்சைக் கவலை! என் செய்வர்? இவ்வெலும்புக் கூடுகள் சிறு பெண்களை மணப்பது, மணமாகவா, அல்லது சீக்கிரம் பிணமாகவா? இவ்வலிவற்ற ஆண்கள் பெண்களின் வீரியத்தையும் கெடுக்கின்றனர். இத்தற்கொலையை எத்தனை நாள் நாடு பார்த்துக்கொண்டிருப்பது? பெண்மணிகள், நம் நாட்டுச் சீதேவிகள், கண்ணீர் விடுத்துக் கலங்குகின்றனர்! கல்வி மணம் இல்லை; சிறு வயதிலேயே திருமணம். அந்த பொம்மைக் கலியாணத்தை இன்னும் பாரத நாடு பார்த்திருக்கவேண்டுமா? இன்னும் நமது நாடு நடைப் பிணக் காட்சியாக வேண்டுமா? இப்போது இல்லறத்தில் இருப்போர் மீண்டும் தேவாங்குகள் போன்ற குட்டிகளைப் பெருது இருப்பதே நலம். பெண்கள் கன்னிப்பருவத்தில் கல்வி பயிலுதல் வேண்டும். அவர்களைச் சிற்றின்பப் பொம்மையாகவும், சமையல் செய்யும் இயந்திரமாகவும் எண்ணும் கொடுமை ஒழியவேண்டும். பெண்களை ஒரு வியாபாரச் சரக்கென்று எண்ணி விலைபேசுந் தீமை ஒழிய வேண்டும்.

கைம்பெண்ணின் கண்ணீர் கடலாய்ப் பெருகுகின்றது. ஏறக்குறைய 20 வயதிற்குமேல் பெண்களுக்குச்

சொல்லொணாப் பிணிகள் வந்துவிடுகின்றன. நீரிழிவு, சூலைக்கட்டு, மாத விடாய் நோய்கள், மலச்சிக்கல், கருப்ப நோய்கள், நெஞ்சுக் குத்தல் முதலியன சிறு பெண்களுக்கு வருவதேன்? அவர்களை நோய்வாய்ப் புகுத்தி உருக்குலைப்பது யார்? அவர்கள் மனதைச் சரியான கல்வியில் திருப்பி எண்ணத்தை நல்வழியில் மாற்றினால், சிற்றின்ப இச்சையால் இத்துணைச் சீரழிவு வருமா? ஆண் பிள்ளைகள் தீயர் நட்பால் கொடிய பழக்கங்களை வாலிபத்திலேயே அடையும் தீமை தீருவதெப்போது? மீண்டும் பிரமசரியக் கல்வி தழைக்கவேண்டும்; அப்போதே தீமையொழியும்.

ஏ பாரத நாடே, உன் எழில் குன்றிவிட்டது, பிரமசரியம் போய்விட்டது! பிரமசரியத்தின் அளவே மண வாழ்வும் சிறக்கும். அதுவே இன்பத்திற்கு அடிப்படை; அஃதின்றிச் சேரும் ஆண் பெண்கள், நோய் வாழ்வே வாழுவர். ஆதலின், ஆண்பெண்களின் திருமண வயதை முடிந்த மட்டும் உயர்த்த வேண்டும். உண்மையான காதல் உண்மையான உடல்வலிமை யுள்ளவருக்கே பிறக்கும்.

நேயர்கள் சிந்திக்கவும் :—

விவாகத்திற்குமுன் பிரமசரியம் அவசியமா, இல்லையா? ஆண் பிள்ளைகள் 25 ஆண்டு மட்டும் பிரமசாரிகளாயிருப்பது நன்மையா, தீதா? பெண்களும் பிரமசாரிகளாக 16 வயது மட்டும் தக்க கல்வி கற்பது நலமில்லையா? பார்வதி தேவி கௌரிசங்கரத்தில் குமரியாகத் தவஞ் செய்யவில்லையா? பரமசிவன் பார்வதியை உண்மையான காதலால் மணக்கும் போது அவளுக்கு வயதென்ன? கிருஷ்ணன் உண்மையான காதலால் தூக்கிச்சென்று மணந்த உருக்குமணிக்கு வயதென்ன? ஆண் பிள்ளைகளுக்கும் பெண்மணிகளுக்கும் சுமார் 5 முதல் 10 ஆண்டுகள் வரை வயது வேற்றுமையிருக்க வேண்டுமா, இல்லையா? பெண்களைக் கல்விபயிலாது இப்போதிருக்கும் கலியாணம் தடை செய்கிறதா இல்லையா? பெண்கள் கல்வி பயில வேண்டுவதில்லையா? 8 வயதில் ஒரு பெண்ணுக்கு இல்லறத்தைப்பற்றி என்ன தெரியும்? 12 வயதிலும் 16 வயதிலும் ஒரு பையனுக்கு இல்லற வாழ்வைப்பற்றி என்ன

தெரியும்? இச்சிறு வயதில் கலியாணம் நடந்தால், இருவருக்கும் காமத்தில் நினைப்புச் செல்லுகிறதா, இல்லையா? பிறகு படிப்பிற் கவனம் போகுமா? படிப்பின்றி வாழ்வால் பயனுண்டா? கலியாணம் செய்தவுடன் சம்பாதிக்கும் நினைப்பைத் தவிர அத்யான்மக் கல்விகற்கும் நினைப்பு உண்டாகுமா? சிறுவயதில் கலியாணஞ் செய்வது இருவர் மனத்தையும் சிற்றின்பத்திலேயே ஆழ்த்துவதில்லையா? பருவமாகாத போதும் புணர்ந்து எத்தனை அபாயமான சம்பவங்கள் நடந்துள்ளன? சிறு வயதில் மணமாகாவிடின், இருவர் மனமும் சிற்றின்ப ஏக்கமெடுத்து அவர்கள் வழிதப்பி விடுவார்களா? அவர்கள் மனத்தை நன்னெறியிற் புகுத்துங் கல்வியிருந்தால் அப்படி நேருமா? இக்கெட்ட எண்ணங்களுக்குச் சுற்றமும் பழக்கமுமே காரணமன்றோ? ஒரே மனதுடன் 25 வயதுமட்டும் படித்தால் நலமன்றோ? பெண்சாதி, மாமனார், மாமியார், பொங்கல் சீர், தீபாவளிச் சீர், நலங்கு, கண்ணூஞ்சல் என்பவற்றில் மனம் மூழ்கியபோது படிப்பேறுமா? சீக்கிரம் விவாகமாதல் வேண்டுமென்று பெண்ணைப் பெற்றவர்கள் எவ்வாறு தவிக்கின்றனர்! வரதட்சிணை வாங்கிக் கல்யாணப் படிப்புப் படிக்கும் வாலிபர் எத்தனை பேர்! இருவருக்கும் பிழைக்கத் தொழிலும், மக்கள் அறமும், இல்லறவொழுக்கமும் தெரிந்தபின்பு மணம் புரிவித்தல் நல்லதன்றோ? வினைத்தெரியாத சிறுவருக்குப் பெற்றோர்கள் தங்கள் இஷ்டப்படி மாப்பிள்ளை மருமகளைத் தேடுவதால் பிற்காலம் இடர்விளைவதைக் காண்கின்றோமல்லவா? வயதுவந்து காதற்கண்களால் தகுதியறிந்து சேரும் மணமக்கள் மங்கலமான இல்வாழ்வு நடத்துவாரன்றோ? நம் நாட்டில் கைம்பெண்கள் பெருகியிருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. எனினும், ஆண் பிள்ளைகள் சிறு வயதில் தங்கள் வீரியத்தைத் தங்கள் வாலிப மனைவியர்பால் இறைத்தலும் ஒன்றன்றோ? ஆண்கள் 25 வயதிலும் பெண்கள் 16 வயதிலும் உண்மையான பிரமசரியக் கல்வி கற்றபின் உண்மையான காதலுடன் மணந்தால் கெடுதல் என்ன? அப்போது 16 வயதிற்குள் விதவைகள் ஆகும் கொடுமையாவது நிற்குமன்றோ? இருவருக்கும் உடல் உறுதியும், பொறுப்பும், காதலும், இச்சையும் பெருகிய போது இல்லறம் நடத்தல் இன்பமன்றோ? முற்காலத்தில்

வாலிபர்கள் பிரமசரியமிருந்துதானே மணந்தனர்? பெண்களை எட்டுவகையாக மணந்தனர்.

இத்தகைய ஆராய்ச்சிகள் செய்துகொண்டே போனால், நம் நாட்டில் பாலிய விவாகக் கொடுமையால் வந்த சீரழிவுகள் நன்கு புலப்படுகின்றன. பழைய சாஸ்திரங்களைச் சொல்லிக் காலத்தின் ஓட்டத்தை எதிர்க்க ஒருவராலும் முடியாது. பழைய சாஸ்திரத்தில் அந்தணப் பிள்ளைகள் ஆங்கிலம் படித்து உத்தியோகஞ் செய்யலா மென்று சொல்லியிருக்கிறதா? பழைய காலத்தில் வர தட்சிணைக்காகப் படிப்பதுண்டா? பழைய காலத்தில் அருச்சுனனும் இராமனும் எவ்வளவு வீரந்ததும்பும் நிலையில் மணம்புரிந்து கொண்டனர் என்பதை அறிவீர் களா? இக்காலம் அத்தகைய வீரக்குறைவிற்கு வாலிப மணமும் காரணமே. உறுதியும், ஒழுக்கமும், விழுப்ப மும் பிரமசரியத்தால் கிடைக்கும். பாலிய விவாகத்தால் மாமனார் வீட்டுப் பணிகாரந்தான் கிடைக்கும்!

இல்லறம் நல்லறம். உலகம் உயிருடனிருப்பது இல் லறத்தாலேதான். ஆண்மையும் பெண்மையும் அழகுடன் கூடி, மாணறங்காத்து, மக்களை யீன்று, அண்டிய விருந்திற் கன்புடன் ஊட்டி, தாமும் வாழ, தருமமும் வாழ, தாரணி வாழத் தாங்கிய தில்லறம். மனைவி, வாழ்க்கைத் துணை. இல்லிற்கு அரசி இல்லாள். அழகும் அணியும் அன்பும் கருணையுங் கற்புங்கொண்ட நல்ல குணமணியாக விளங்கு வாள் இல்லாள். அவள் வீட்டுத் திருமகள். சமைத்தல், அணிசெய்தல், பாடுதல், இல்லறக் கடமை காத்தல், கல்விப் பயிற்சி, கலைவளர்ச்சி, வைத்தியம் முதலியன இல்லாள் அறியவேண்டியவையாம். காதலிருவர் கருத்தொன்றிக் கற்புடன் நடத்தும் இல்லறமே வாழ்வின்பமாம்.

இவ்வாழ்வின்பம் வேண்டுமானால் அதற்கு முதலில் உடலுறுதி, சித்தவுறுதி, தக்க கல்வியறிவு, ஒழுக்கம், தொழிலறிவு—எல்லாம் வேண்டும். இவை பிரமசரிய ஆசிர மத்தில் எய்தும்.

௩௪. இல்லற வாழ்வு

ஒரு மின்பொறி (Battery) ஓடுவதற்கு இரண்டு மின் வன்மைகள் (Electric Powers) வேண்டும். ஒன்று ஆகு மின்னல் (Positive Current); மற்றொன்று ஏகு மின்னல் (Negative Current). இரண்டும் சேர்ந்துதான், விளக்கு கள் எரிகின்றன; விசிறிகள் சுழல்கின்றன; வண்டிகள் விரைகின்றன; படங்கள் ஆடுகின்றன; பேசுகின்றன. நாம் பார்க்கும் பொருளெல்லாம் இரண்டிரண்டாகவே நிகழ்கின்றன. ஆண் பெண் என்னும் தத்துவங்களே அவ்விரண்டும்.

பெண்ணின்றி யாணில்லை; ஆணின்றிப் பெண்ணில்லை;
எண்ணிருவர் சேர்ந்தே யிகம்.

ஆண் சிவமயம்; பெண் சக்தி மயம். ஆண் கதிரவன், பெண் கதிர். ஆண் தங்கம், பெண் அணிகலன். ஆண் அறிவொளி, பெண் அன்பழகெழில். ஆண் இறை, பெண் இயற்கை. ஆண் காவியம், பெண் இசை யின்பம். ஆண் கடல், பெண் திரை. இந்த இரண்டும் சமமான சம்பந்தமுள்ள நித்திய உண்மைகள். அதனால்தான் நம் பெரியார்கள் கோயில்களிலும், பாசுரங்களிலும், உமாபதி, சக்தி சிவன், - இலக்குமிநாராயணன் என்று பெண்ணாண் வடிவிற் கடவுளைப் பாவனை செய்து போற்றுகின்றனர்.

பூவோடு பொன்போற் பொருந்தி யறிவொளிரும்
ஆணோடு பெண்சக்தி யாம்.

ஆணிலுள்ள சிவம், தான் பூரணம் பெறுவதற்குப் பெண்ணிலுள்ள சக்தியைக் கவர்வதே காதலின் உண்மை.

காந்தமூசி மாறிக் கவர்வதைப் போலுமே
மாந்தருள் ஆண்பெண் மயக்கு.

இந்தக் கவர்ச்சியின் நோக்கம், ஒன்றை மற்றொன்று கூடிப் பூரணப் படுத்துவதேயாகும். பூக்கள் வண்டுகளைக் கவர்ந்து, அவற்றின்மூலம் தம் பூந்தூட்களைப் (Pollen) பெண் பூவிற்குச் செலுத்தியல்லவா தாவரங்கள் வளம் பெற்றோங்குகின்றன? அதுபோலவே அழகென்னும் மாயா சக்தியாலும், காதலென்னும் இயலுணர்வாலும் மனமலர்கள் ஒன்றன் சக்தியை மற்றொன்று பெற்று

இரண்டும் நிறைவுற்று, உலக வாழ்விற்கே ஆதாரமாகின்றன. இப்படிக் காதலும், கற்பும், அன்பும் ஈகையும், உள்ளொற்றுமையும் அழகின்பமும் நுகர்ந்து உலக வாழ்வை மேன்மையாக்குவதே இல்லறத்தின் கருத்து. இல்லறத்தில் எய்தும் சிற்றின்பத்திற் பழுத்து, மனமாசகன்று, உலகின்பத்தினும் பெரிய பேரின்பம் உள்ளதென்று அறிந்து, அந்தப் பேரின்பமான இறைவனடி பற்றிக் கடைத்தேறுதலே இல்லறம் அளிக்கும் பெரும்பயனாகும். இல்லறமில்லாவிட்டால் உலகமேயிராது. நல்ல மனையறத்தினுல்தான் ஒரு நாடு பெருமை பெறும். அன்பும், அறமும், ஐங்கடனும் போற்றி இல்லறத்தொழுகும் சதிபதிகள் நாட்டிற்குப் பெரும்பணி புரிந்தவராவார்.

வீட்டின் விரிவே வியனுலகம் ஆதலினல்
வீட்டறத்தில் வெற்றி விளக்கு.

சுமார் 23 வயதிற்கு மேற்பட்டு முப்பத்தைந்து வயதிற்குள்ளாக ஆண்மகனும், 16 வயதிற்கு மேற்பட்டு 24 வயதிற்குள்ளாகப் பெண்மணியும், தக்க கல்வியறிவு வாய்ந்து ஒருவரையொருவர் இயல்பாகக் காதலித்து நன்மணம் புரிந்து நடத்தும் இல்லறமே மனிதனுக்கு இவ்வுலகில் ஒப்புயர்வற்ற உடலுயிர் இன்பத்தை நல்கும். கண் கருத்தொத்த மனையில், பிணக்கின்றி ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்து, இரு கண்ணெனவும், ஒரே மார்பிலுள்ள இரண்டு உயிரிகள் (Lungs) போலவும், இடை பிங்கலை நாடிகள் போலவும் வாழும் இல்லறத்தில் அட்ட மங்கலங்களும் விளங்கும்.

கண்ணொத்த வீட்டிற் கனதன மங்கலமாம்
மண்ணொத்த வான்பயிரைப் போல்.

தூய கற்பு, துகளறு நேயம், உள்ளுயிர்க் கலப்பு, உன்னத நினைப்பு, இனிய நல்லுரை, இயன்ற நல்லீகை, பசிக்கொரு நற்றொழில், பரமனிடம் நெஞ்சு, இயற்கை வழி வாழ்வு, உயிர்களுக்கு அன்பு, கலைவளர்ச்சி, கல்விப் பெருக்கம், தொழில் முயற்சி, தூயசெய்கை ஆகிய இவற்றுடன் தமக்கும், தம்மைச் சார்ந்த கிளையினர்க்கும், தம் அருமை மக்களுக்கும், ஊருக்கும், நாட்டிற்கும், உலகிற்கும் பயனகும்படி இல்லறமாகிய நல்லறம் ஓங்குக!

மண்ணின வுயிர்களெல்லாம் மகாசக்தி மைந்தரென்றே
எண்ணிநன் மதிப்போம்; அன்பும் ஈகையுந் தொண்டுஞ்
[செய்வோம்;
கண்ணின மென்னக் காதற் கருத்தினில் ஒன்றுபட்டுப்
பெண்ணினப் பெருமை போற்றிப் பீடுயர் ஆண்மை வாழ்க!

௫௫. திருமணக் குறிப்பு

பெண்கள் சக்தி வடிவங்கள்; செய்வளர்க்கும் காமதேனுகள்; உலகின் ஸ்ரீதேவிகள். அவர்கள் புன்னகை, உலகின் மகிழ்வு; அவர்கள் இன்னல், உலகின் இன்னல். அவர்கள் ஒழுக்கம், உலகின் ஒழுக்கம். அவர்கள் இழுக்கம், உலகின் நாசம். மனிதனுக்கருகே அவர்கள் சக்திக்கனலாக விளங்குகிறார்கள். ஒரு சமுதாயத்தில் இரக்கம், அன்பு, அருள், ஈகை, அழகுக் கதிர் ஆகியவற்றைப் பரப்புவது பெண் சக்தியே. மனிதன், வீரம் தைரியம் ஆண்மை ஆட்சி பலம் முதலியவற்றை இயற்கையாகக் கொண்டவன். பெண்மையின் அன்பும், ஆண்மையின் வீரமும் சேர்ந்தால்தான் மனித சமூகம் பூரணமாகும். பெண்மையும் ஆண்மையும் வாழ்வின் இரண்டு துடிப்புகள்; உயிரின் இரண்டு நாடிகள். ஆணும் பெண்ணும் சேர்ந்து பூரணம் பெறலே மணவாழ்வின் பண்பும் பயனுமாகும். ஒன்றுபட்டு வாழும் காதலரால் உலகம் நடக்கிறது. குணத்தைக் கணித்தே கன்னியை மணக்க வேண்டும். ஒருவர்பால் குறைந்த குணம் மற்றொருவரிடம் நிறைந்திருத்தல் காணவேண்டும், பெண்களைப் போகப்பதுமைகளாகவும், சமையல் செய்யும் இயந்திரங்களாகவும் கருதக்கூடாது.

புதுயுகத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் திருமணச் சாலை யொன்று உண்டு. அதிலேதான் எல்லா மணச் சடங்குகளும் நடைபெறும். சித்திரை, தை, மாசி, பங்குனி முதலிய மாதங்களே திருமணத்திற்கு ஏற்றவை. புதன் வெள்ளி இரண்டும் நன்னாட்கள். அந்தக் கிராமத்தில் நடக்கும் எல்லா விவாகங்களுக்கும் ஒரே நாளாயினும் பாதகமில்லை. எல்லாரும் ஒன்று பட்டு ஒரே சுப முகூர்த்தம் நடத்தலாம். மேளக்காரன், உபாத்தியாயர் முதலியோர் கிராம சமுதாயத்தின் காப்பிலிருப்ப

தால் அவர்கள் இனமாகவே வருவர். அவரவர்கள் செய லுக்கேற்றபடி ஏழைகளுக்கு அன்னமிடலாம்; அற நிலயங்களுக்கு உதவலாம்.

முகூர்த்தத்திற்கு முதல்நாள் இல்லற வாழ்வைப் பற்றிப் பெரியார்கள் சொற்பொழிவு செய்யவேண்டும்; அந்நாள் இரவில், மணமகனும் மணமகளும் அன்பும் அறமுங்கொண்ட இல்லறங்காப்பதாக உறுதி பூணுதல் வேண்டும்.

பிறகு சதிபதிகள் கடவுளைத் தியானிக்கவேண்டும்; "இறைவ, எமது இல்வாழ்வு அன்பும் அறமும், திருவும் அருளும், அறிவும் நிறைந்து பொலிக; எமக்கு அருட் செல்வமும் அன்பும், அருட்பணியும், வீரமும் ஆற்றலும், நன்மக்கட்பேறும் தழைத்தோங்குக!" என்று வணங்கித் தியானிக்கவேண்டும். மறுநாட்காலை 4 மணிக்கு, எழுந்து நீராடித் தூய உடையணிந்து, நாயகனும் நாயகியும் சூரி யனைப் பார்த்துக் கைகோத்துத் தியானித்து நிற்பர். பெரியார் வாழி கூறித் தீ வளர்ப்பர். "கதிரும் கதிரவ னும், தீயும் ஒளியும்போல நாங்கள் ஒன்றுபட்டு வாழ் வோம்" என்று மணமக்கள் வாக்களிப்பர்; பிறகு மாலை சூட்டி அக்கினியை வலம் வந்து இருவரும் வணங்குவர். பெரியோர் இராமாயணம் பாகவதம் பைபிள் குரான் திருக்குறள் முதலிய அறநூல்களினின்று நீதிமொழிகள் சொல்லி விளக்குவர். அவற்றைக்கேட்டு ஏதாயினும் ஒரு நீதிநூலை உபதேசமாகத் தம் வாழ்க்கை முழுதும் ஆராய அக்கினி முன்னே எடுத்துக் கொள்ளுவர். மதியத்தில் வெயிலில் $\frac{1}{2}$ மணிநேரம் இருந்து, பின்னர் முழுகி, மனைவி கணவனுக்கு நல்லுணவு கொணர்ந்து வணக்கமுடன் வைப்பாள். மணமகன் தன் மனைவியை அன்புடன் அழைத்து இருத்தி அவளுடன் உணவு கொள்வான். மனைவி கணவன் கொடுப்பதை யுண்பாள். கணவன் மனை விக்கு உணவுதருவான். இது முடிந்ததும் கைகால்களைக் கழுவி மலர்சூடி இருவரும் கைகோத்து மணவறைக்குச் செல்லுவர். மணவறையில் இனிய பாட்டுகள் முழங்கும். சித்திரம், சிற்பம், சங்கீதம், நூலறிவு முதலிய பலதுறைப் புலவர் ஆற்றலெல்லாம் அப்போது விளங்கும். அவர்கள் சன்மானம் பெறுவர். மாலை 4 மணிக்குப் பெண்கள் மண

மகனை வாழ்த்தி நலங்கிடல், பூச்செண்டாடல், ஊஞ்சலாடல் முதலிய வைபவங்களைக் கொண்டாடுவர். 6 மணிக்கெல்லாம் மணமக்கள் தனித்தனியே சென்று மாலைக் கடன்களை முடித்து வந்து, அக்கினிதேவனை வணங்கி, "எ தேவ, நீயே எமது சக்தி; நீயே எமது உள்ளொளி; எமது வாழ்வில் அன்பும் கற்பும் இணைக; எமது இல்லற வாழ்வு உனது அருளால் மங்கலமாகுக!" என்று வலம் வருவர். அப்போது நல்லோர் வாழ்த்துவர்! பொருள் விளங்காத மந்திரங்களைக் காட்டிலும் தேவாரம் திருவாசகம் திருவாய் மொழி முதலிய அருள்வாக்குகளை இன்னிசைக் கருவிகளுடன் பாடுதல் நலம். பெண்கள் வாழ்த்திப் பூச்சொரிவர்; ஆலத்தியெடுப்பர். பின்பு ஆகாயத்தில் அருந்ததி பார்த்துக் கற்பின் திறமுணர்வர். அதன்பின் மணமகள் கணவனுக்குப் பாலும் பழமும் கலந்து கொடுக்க, நாயகனும் நாயகிக்கு அவ்வாறேசெய்ய இருவரும் உண்பர். பின்னே இரவு 10-மணிக்குச் சகலவைபவங்களுடன் மணமக்கள் தனியிடத்திற் கூடுவர்; அன்று முதல் தங்கள் கடமையையறிந்து ஒன்றுபட்டு வாழுவர். இல்லற நெறியை நன்கு உணர்ந்த பிறகே மணவினை முடித்தல் மாண்பு. ஆடவர் 23 வயதிலும், பெண்கள் 16 வயதிலும் மணத்தலே நலம். அதுவரை இருவரும் பிரமசரியம் வகிக்கவேண்டும்.

௩௬. காதலர்

திருமண வாழ்வு நலம் பெற்றொளிர்க! ஒருவருக்கொருவர் பொறுப்பான அன்பும், ஆதரவும், காதலும், கற்பும், நேசமும், பாசமும் பூண்டு, சதிபதிகள் நல்லறமாகிய இல்லறத்தை இனிது நடத்துக!

இரண்டு கம்பிகள் இணைந்தே ஒரு மின்சாரப் பொறியை நடத்துகின்றன; கதிரும் கடலும் இணைந்தே மேகமுண்டாக்கி மழைபெய்து உலகம் செழிக்கிறது. பூக்களும் நூலும் இணைந்தே பூமாலையாகின்றன. அது போல, உலகமும் மனமொத்த காதலரால் நடைபெறுகிறது. உலகம் ஆண் பெண் ஆடல்; ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை. இருவரும் சேர்ந்தே உலகம்; இருவரையும் சேர்க்கும் இதய மின்சாரமே காதல். ஆணும் பெண்ணும் சேர்ந்தே மானிடம்.

பூக்களிலும் ஆண் பெண் பூக்களும், காதலுணர்வும் உண்டு. மானிடத்தின் ஒரு பாதியான ஆண், தனது மற்றொரு பாதியான பெண்ணினால் பூரணம்பெற வேட்பதே காதல். சிவனும் உமையும் கூடி அர்த்தநாரீசுரரா யிருப்பதன் இரகசியம் இதுவே. நம் கோயில்களில் சுவாமியுடன் அம்மனுக்கும் சந்நிதியிருக்கிறது. ஆணில் உள்ள சிவம், பெண்ணிடமுள்ள சக்தியை விரும்புவதே காதல்.

உலக வளர்ச்சிக்காக மாயா சக்தியால் ஏவப்பட்ட காந்த சக்தியே காதல்; இவ்வுணர்வைத் தடுக்கவோ தப்பவோ யாராலும் முடியாது. மிகச்சில கடுந்தவ யோகிகளே இவ்வுணர்ச்சியை வெல்லுகின்றனர்.

ஐம்புலவின்பத்தையும் ஒரே காலத்தில் அளிக்கும் இக் காதல்வாழ்வைத் தமிழர் ஒரு கலையாகவே வளர்த்தனர். அதற்காகவே நம் புலவர்மணிகள் அகப்பொருள் இலக்கண இலக்கியங்களை ஏராளமாக எழுதியிருக்கின்றனர்.

திருக்குறள் காமத்துப்பாலே தமிழரின் காதல் வாழ்விற்குப் போதிய சான்றாகும். திருக்குறள் இல்லற வேதமாகும்.

கல்வி கேள்வி ஒழுக்கங்களிற் சிறந்த வாலிபனொருவன் வாழ்வென்னும் தோட்டத்தில் நுழைகிறான். அங்கே ஓர் இளங்கன்னியைக் காண்கிறான் : இருவர் விழிகளும் புல்லுகின்றன ; ஒருவர் அழகை மற்றொருவர் மனத்தில் வியக்கின்றனர் ; நாணம் தலைப்படுகிறது ; இருவரும் ஒருவரையொருவர் அறியாதவர்போலப் பொதுநோக்கு நோக்குகின்றனர் ; கண் கண்ணைக் கதுவுகிறது ; ஒருவர் மனத்தில் மற்றொருவர் புகுந்துறைகின்றனர் ; தோழி தூதுரைக்கிறாள் ; காதலர் கலக்கின்றனர் ; இருவரும் கூடி இல்வாழ்வு நடத்தச் சம்மதிக்கின்றனர். இவர் காதலையறிந்து பெற்றோர் மணவினை முடிக்கின்றனர். தக்க தொழில் செய்து பொருள் தேடி மணமகன் மனையைத் தாங்குகிறான். மணமகள் மனையினுள் அரசியாக விளங்குகிறாள். அன்பு, அறம் இரண்டும் இல்லறத்தின் இரு கண்கள்.

ஒழுங்காக இல்லறங் காத்தால் அதைப்போன்ற நல்லறம் வேறில்லை ; துறவறத்தைவிட அன்பு, அறம், உண்மை,

பொறுமை, நல்லொழுக்கங்களுடன் கூடிய இயல்பான இல்லறமே பன்மடங்கு மேலாகும். உலகில் எல்லாரும் உண்மையான துறவியாக முடியாது; இல்லறமே பொதுவாக எல்லோரும் போற்றும் நல்லறம். வீடு எப்படியோ அப்படியே நாடும்; கோடிக்கணக்கான வீடுகள் சேர்ந்தே நாடாகிறது. ஆதலால், இல்லறம் இனிதானல் நாடும் இனிதாகும். வீடெப்படி நாடப்படியாம்.

ஆண்—ஆண்மை, வீரம், வலிவு, அறிவு, வீரியம்; பெண்—அழகு, அன்பு, அணி, சக்திக்கனல்; வாழ்வின் இந்த இரண்டு சக்திகளும் பூரண வளர்ச்சிபெற இல்லறம் பயனுகும்.

சுமார் 23 ஆண்டுகள் வரை ஆண்மக்கள் பிரமசரியம் பூண்டு, கல்விகேள்விகளில் தேர்ச்சிபெற்று, குடும்ப நிர்வாகத்திற் கேற்ற தொழிற்பயிற்சியும் உடலுறுதியும் பெறவேண்டும். பெண்கள் சுமார் 16 வயதுமட்டுமாவது தக்க கல்விப்பயிற்சியும் குடும்ப நிர்வாகத்திற் கேற்ற அறிவும் திறனும் பெறவேண்டும். இயல்பாக, உள்ளார்ந்த காதலாற் கூடி இருவரும் இல்லறந் தாங்கவேண்டும்.

இவ்வாறு இயல்பாகக் காதலிப்பவர் தமதிச்சைப்படி களவொழுக்கம் செய்யக்கூடாது. பெரியார்களுக்குத் தெரிவித்து, அக்கினி சாட்சியாகத் தக்காரைக்கொண்டு மணவினை நடத்திய பிறகே, மனைவாழ்வு வாழவேண்டும். இதுவே தமிழர் நாகரிகம். தமிழ் இளைஞர் ஆண்மையும், தமிழ்ப் பெண்டிர் கற்பும் புகழ்பெற்றன.

இல்லறம் அனுபவச்சாலை; பயிற்சிக்கூடம். அதில் இன்பமும் உண்டு; துன்பமும் உண்டு; இரண்டையும் சமமாகத் தாங்கவேண்டும். வண்ணன் வேட்டியின் அழுக்கை எப்படிப் போக்குகிருன்? மற்ருேர் அழுக்கான மண்ணைக்கொண்டு வேட்டி வெளுக்கிருனல்லனே? அதுபோல உலகானுபவத்தால் மனிதவாழ்வு மாசறுகிறது.

௩எ. மனைவி

மனைவி வீட்டுத் திருமகள்; அவளைக் கணவன் சக்தியாக மதித்துப் போற்றவேண்டும். எந்த வீட்டில் மனைவி மனக் கசப்பில்லாது, கண்ணீர் விடாது, புன்னகையுடன் விளங்குகிருளோ, அந்த வீட்டைத் தேடிவருவாள் ஸ்ரீதேவி. பெண்ணை அடிமைப்படுத்தும் மனைவாழ்வு நாட்டை அடிமைப்படுத்தும். பெண்ணைப் பெருமைப் படுத்தும் மனைவாழ்வு நாட்டைப் பெருமைப்படுத்தும். பெண் வீட்டரசி; அவள் மனையை அழகு செய்வாள்; வீட்டை மெழுகிக் கோலம் போட்டு, மலரால் அலங் கரித்து, சாமான்களை ஒழுங்காக அடுக்கி, விளக்கேற்றி வீட்டை மங்கலமாக்குவாள்; தனது அழகாலும் கிளி மொழியாலும், பாசத்தாலும், முறுவலாலும், முகவிலா சத்தாலும், அன்பாலும், பணிவாலும் கணவன் உள்ளத் தைக் கவர்ந்து, காதலை வளர்ப்பாள்; கணவன் விரும்பும் இனிய உணவுகளைச் சமைத்து சுசிருசியாக ஊட்டி உபசரிப்பாள்; குழந்தைகளைத் தாலாட்டிச் சீராட்டிப் போற்றி வளர்த்துக் குலம் விளங்கச் செய்வாள்; வீணையும் தந்தியும், தேரும் உருளையும், மலரும் மணமும், நீரும் நிலமும்போல நாயகனுடன் மனமொத்து வாழ் வாள்; அவனது இன்ப துன்பத்தைத் தனது இன்ப துன்ப மாகக் கருதுவாள்; கணவனுடன் சேர்ந்து பக்தி சிரத்தை யுடன் கடவுள் வழிபாட்டையும் சமயக் கடமைகளையும் நடத்துவாள்; வந்த விருந்தை உபசரித்து ஊட்டுவாள்; கள்ளம், கபடு, போட்டி சண்டை, அழகுச்செருக்குகள் இன்றி, கற்பும், அன்பும் மிகுந்து கணவனுக்கு உற்ற துணையாவாள்.

அன்பு, பொறுமை, அழகு, அணி ஆகியவற்றில் பெண்மைக்குச் சமானம் பெண்மையே! ஆண் கட்டித் தங்கம்; அதை நகாசு செய்து வகை வகையான அணி யாக்குவது பெண்மை. பெண் அன்புக் கற்பகம்; மக்களை வளர்த்துக் குலத்தை விளக்கும் காமதேனு. பெண் சமைத்துப்போடும் இயந்திர மன்று; சிற்றின்பப் பாவை யன்று. பெண்ணை மகாசக்தியாகக் கருதவேண்டும்; வாழ் வென்னும் மரத்தின் வேரும் அடிமரமும் ஆண்; கிளை, மலர், கனியெல்லாம் பெண் சக்தியாய் விளங்குகின்றன.

மனிதனிற் பாதி பெண். பாதியுடலை எப்படிப் பாதுகாப் போமோ, அப்படியே பெண்ணை மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

கற்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் வேண்டும். இருவர் கண்ணும் கருத்தும் ஒத்திருக்க வேண்டும். தாரம் வாழ்வுத்துணைவி. தலைமுதல் கால்வரை தங்கமாகவும் வயிர மாகவும் இழைத்தாலும் பயனில்லை. அன்பும், கற்புமே பெண்மைக்கழகு. நகை போடும் வழக்கத்தைப் பெண் கள் குறைக்கவேண்டும். தூய ஆடை, மஞ்சளும் குங் குமமும் குலுங்கும் புன்னகை முகம், நல்லொழுக்கம் ஆகிய இவையே பெண்களுக்கு அழகு. நம் பெண்டிர் நகைகளிற் போடும் பணத்தை யெல்லாம் சேர்த்துத் தொழில் முயற்சியில் போட்டால் நமது தேசம் குபேர நாடாகுமே!

மற்ருென்று: குலப்பெண்கள் தினந்தோறும் இரண் டொரு மணிநேரம் அறிவை வளர்க்க வேண்டும்; நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்; நாட்டு நடப்புகளை அவ்வப் போது அறிந்துகொள்ள வேண்டும். வீட்டுப் பொறுப் புடன் நாட்டுப் பொறுப்பையும் பெண்கள் உணர்தல் தகும். கணவன் நாட்டுக்கு நன்மையான ஒரு பணி புரிந்தால், குறுக்கே நிற்காது, அவன் செய்யும் தன்னல மற்றப் பொதுநலப்பணி வெற்றி பெறும்படி உடனிருந்து உதவி செய்ய வேண்டும்; தம் குழந்தைகளுக்குச் சோறூட்டுவதுடன் நாட்டன்பும் புகட்டி அவர்களை வீர தீரராக்கவேண்டும். நாட்டின் நன்மையே வீட்டின் நன்மை என்றுணர வேண்டும் பெண்டிர்.

மற்ருென்று: கணவன் செயலுக்கேற்றபடியே சிக்கனமாகக் குடும்பப் பொறுப்பை வகித்து, அவசரத் திற்குச் சிறு தொகை மீதி யிருக்கும்படியே செலவிட வேண்டும். கணவன் அளவிற்கு மிஞ்சிய பொருளில் ஆசை வைக்கக்கூடாது. மனைவி உடல்; கணவன் உயிர்; ஒன்றிற்கு மற்ருென்று ஆதாரம்.

௩௮. கணவன்

கணவன் கடமை யென்ன? வீட்டிற்கரசியான மனைவியைப் போற்றவேண்டும். குடும்ப நலத்திற்காக அவள் சொல்லும் நன்மதிகளைப்போற்றி நடக்கவேண்டும். கெடுதல் இருந்தாலும் இதம் பதமாகச் சொல்லித் தனது உதாரணத்தாலும் அன்பாலும் தூய நடையாலும் திருத்த வேண்டும். சொந்த மனைவி காக்காய்போ லிருந்தாலும் அவளையே தேவலோக அரம்பையாகக் கருதவேண்டும்: பிறமாதரைக் கனவிலும் கருதக்கூடாது. குடும்பக் கலகங்கள் பெரும்பாலும் மனவேறுபாடுகளால்தான் வளர்கின்றன.

கணவன் தன் அறிவு, ஆற்றல்களுக்குத் தக்க ஒரு தொழிலைச் செய்து குடும்பத்திற்குப் போதுமான பொருளைச் சம்பாதிக்க வேண்டும். ஈட்டிய பொருளை, மனைவியுடன் கலந்துகொண்டு செலவிடவேண்டும். வீட்டில் அடுப்பிற்கு விறகிராது; விளக்கிற்கு எண்ணெயிராது. தாம்மட்டும் இரசியமாகப்போய்க் காப்பிக்கடையில் வயிற்றை நிரப்பி வருவர் சிலர். இது நம்பிய மனைவியை வஞ்சிப்பதாகும். இல்லறத்தோர் மனைவி கையினல் அன்புடன் அளிக்கும் கூழையும் அமுதமாக உண்ண வேண்டும்; மனைவி மக்களுக்குப் போதுமான உடை உணவு சௌகரியங்களைச் செய்யக் கணவன் கட்டுப்பட்டிருக்கிறுன்; குழந்தைகளை அன்புடன் பேணி வளர்த்துக் கல்வி கற்பித்து ஆளாக்கக் கடமைப்பட்டிருக்கிறுன். ஓர் அரசபாரம் போன்றதே குடும்ப பாரமுமாம். கனிமுகங் காட்டல், கடுஞ்சொல்லின்மை, குற்றம் மறத்தல், குறையைத் திருத்தல், குறிப்பறிந்தொழுகல், கரவொழுக்கமின்மை, அறவழி நடத்தல், சிறுமையின்மை, செருக்கின்மை, கண்கருத் தொற்றுமை முதலியவற்றைப் பேணி இல்லறப் பொறுப்பை வெற்றியுடன் வகிக்க வேண்டும்.

மனைவியை அடுப்பங்கரைப் புகைக்கே ஆளாக்காது, அவளுக்கு உடல்நலத்திற்கேற்ற பயிற்சி தரவேண்டும். காலை மாலை இரண்டொரு மணிநேரம் மனைவியுடன் காற்ருட உலாவி வரலாம். பெண்கள் வெளியே கைவீசிச் சென்ருல் குடிகெட்டுப் போகும் என்னும் பழைய

கொடுமை ஒழியவேண்டும். நம் தமிழ்ப்பெண்கள் சுதந்தரமாகவே வாழ்ந்தனர்; தம் மக்களை வீர தீரராகவே பயிற்றினர். முக்காடும், பெண்ணடிமையும் இடையே புகுந்தன. இன்றும் வடநாட்டைவிடத் தமிழ்நாட்டில் பெண்ணுக்குச் சுதந்தரம் அதிகம்; கோஷாமுறை கிடையாது. மனைவி, இல்லாள், இற்கிழத்தி, வாழ்க்கைத்துணை நலம், வீட்டரசி என்று பெண்டிரைத் தமிழர் பெருமைப் படுத்தினர்.

இவ்வாறு ஆணும் பெண்ணும் சமவுரிமையுடன், பொன்னும் பணியும், கதிரவனும் கதிரும்போல உட்புற மொன்றி இல்லற வாழ்வை நல்லறக் கற்பக மாக்குக! வீட்டின் விரிவே வியனுலகம். ஆதலினால் வீட்டறத்தில் வெற்றி விளக்குக!

௩௯. அவதாரம்

மதச்சண்டையும், சாதிச்சண்டையும், சமூக ஊழல்களும், அநாசாரமும், அடிமைத்தனமும், வறுமையும், மடமை யிருளும், நோயும், போரும், பேராசையும், கொலையும், களவும் நிறைந்த காடானது உலகம். மக்கள் அறத்தை மறந்து, தன்னலமுற்று, வயிறே கடவுள், விஷயபோகமே மோட்சம் என்று திரிகின்றனர். அத்யான்ம ஒளி மங்கியது. அசுரக்கொடுமை அழிநடம்புரிகிறது. உலகை உய்விக்க ஒரு சக்தி உதிக்கவேண்டும்.

தெய்வ சக்தி ஒவ்வொருவருள்ளும் நிலவுவது. புலனடங்கி மனங் குவிந்திருந்தால் சக்தி உணர்வாகும்; புலன்வழி மனம்விட் டலைந்தால் சக்தி சிதறி வீணாகும்.

தெய்வ சக்தி சிலரிடம் மறைந்தும் சிலரிடை வெளிப் படையாகவும் நிலவுகிறது. இந்தச் சக்தி வாழ்க்கையில் இறங்கி விளங்கிப் பலருக்கும் பயனாகவேண்டும். அதுவே அவதார ரகசியமாகும். மனிதன் ஒவ்வொருவனும் அவதார அமிசமுள்ளவனே. ஒவ்வொருவனும் அமர வாழ்விற் குரியவனே. தன்னை யறிந்தவன் தேவன். அவனே பிறர்க்கென வாழும் பெரியோன். அவனே தன் னலந் துறந்து பன்னலம் புரிவோன். அன்பும் வாய்மை யும் தூய்மையுங்கொண்ட அவன் வாழ்க்கை மின்சார

சக்தியுள்ளது. தெய்வ சக்தியை உலகிருள் நீர அருளும் போது அத்தகைய மகானை நாம் அறிவோம். புதுயுகம் பூக்கப்போகிறது; சக்திக் கனல் பரவுகிறது. திவ்விய ஜீவனம் வருகிறது. ஒவ்வொருவருள்ளும் சக்தி அவதரிக்கிறது. ஒவ்வொரு உள்ளத்திலும் தெய்வமணிவிளக்கு சுடரோங்கி விளங்குகிறது. மனித வாழ்க்கையில் அமர கங்கை பொங்குக! வாக்கில் அருள்வாணி பேசுக! நெஞ்சக்கோயிலில் கடவுள் துலங்குகிறது. விண்ணரசு வருகிறது! மனித சமுதாயமே கடவுளவதாரம்; திரை விலகுகிறது; இருள் மறைகிறது; அருளொளி துலங்குகிறது; இன்பசக்தி அவதரிக்கிறது!

௪०. தேவீ!

தெய்வசக்தியன்னையை அறியுங்கள்! அவள் அன்புடன் அழைக்கிருள்! பீரங்கி சுடாது; விஷப்புகை மூச்சைப் பிடிக்காது; ஆகாச குண்டு தகர்க்காது; தசைத் திமிர்களெல்லாம் ஒன்றுகூடி வந்தாலும், பதினுயிரம் இராவணர்கள் வந்தாலும் இந்த அத்யான்ம சக்தியை அசைக்க முடியாது. அத்தகைய சக்தியை உங்களுடைய துய ஆதாரங்களில் பொழிய அன்னை புன்னகையுடன் அழைக்கிருள். அகந்தையில் அலையவேண்டா. ஆணவத்தால், மனிதச் சிறுமதியால், காரியம் நடவாது; நடப்பினும் நிலைக்காது; நிலைப்பினும் இனிக்காது! காரியம் மனித பலத்தை மிஞ்சிப்போயிற்று. எவ்வெப்போது அசுரபலம் உலக மாந்தரை நடுநடுக்கித் தர்மத்தை அழிக்கிறதோ, அவ்வப்போதெல்லாம் மகான்களும், தீர்க்கதரிசிகளும் தெய்வ சக்தியைக் கூவியழைத்தனர். அந்தச் சக்தி அவதரித்து அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலைநிறுத்தியது. பாரத சக்தியைச் சரண் புகுங்கள்! "தேவீ! தெய்வ சக்தியே! முயற்சிகள் பல செய்தோம். எங்கள் குறை நீங்கவில்லை; எங்களுக்குள் ஒற்றுமை பிறக்கவில்லை; அச்சம் ஒழியவில்லை. ஓர் ஆவேசச் சூறுவளியில் ஆடிச் சாகின்றன எம் இயக்கங்கள். போட்டி பொருமைகளும், சிறுமதியகந்தைகளும், சிறுமைகளும், பொய்யும், கோளும், வஞ்சமும் புகழ்வேட்டையும் இன்னும் ஒழியவில்லை. தாயே! நாங்கள் உனது சக்தி மைந்தரென்று உணர

எமது கண்ணைத்திற! உன்னடியிற் சரண்புகுந்தோம்! உன்னிச்சை எம்முள் நிறைவேறுக! எமது அகந்தை வேரோடறுக! உனக்கே வாழ்வு வேள்வியாகுக! உன்னருளமுதிற்கு நாங்கள் தூய ஆதாரங்களாகுக! உள்ளே பிரமஞானமும், வாழ்வில் சக்தியொளியும் வீசவேண்டும். இவ்வுலகம் உனது கோயில். இதில் ஏதோ ஒரு பணி எங்களுக்கு உள்ளது. இல்லையேல் நாங்கள் ஏன் பிறந்தோம்? நீ ஏன் பெற்றாய்? திருவருட்சக்தியே, உள்ளும் புறமும் நீயென்று அறிந்து உனதருளால் உன்னிச்சையை இந்த மனித சமுதாயத்திடை நிறைவேற்றும் திறமையைத் தா! உள்ளே பிரமானுபவமும், உலகில் பிரம சக்தியான நினது திருவிளையாடலும் காண அருள் புரி! வேறுபாடுகளை ஒழி! உன்னில் அனைவரும் ஒன்றுபட்டு உன் மயராகி, உன் கரங்களாக உலகில் பணி புரிந்து உன்னுடன் இரண்டறக் கலக்கட்டும்.

௨௪. வீர விளக்கம்

பாரின் பெருமை வீரர் பெருமையாம். வீறு படைத்தவர் வீரர். வீறுவது சக்தி. ஞான வீரர், தர்ம வீரர், கர்ம வீரர் என வீரர் மூவகைப்படுவர். புலன்களை வென்று, பொய் மனமொடுக்கி, தன்னையறிந்து, தன்மயராகி, ஆன்ம கோடிகளுக்கு அருளொளி காட்டினோர் ஞான வீரராவார். வேதரிஷிகள், வியாசர், வள்ளுவர், அப்பர், சம்பந்தர், நம்மாழ்வார், வள்ளலார், பரமஹம்ஸர், இரமணமுனிவர் ஞான வீரர் அல்லது ஆன்மவீரர். மனித சமுதாயம் புலிவாய் மான்போல அசுரமாயத்தால் வாடி வருந்தி அறமிழந்து, திறமிழந்து, கதியற்ற காட்டில் கண்ணில்லாக் குழந்தைபோலத் தவிக்கிறது. அப்போது இறைவன் அருட்சக்தி அவதரித்து, அச்ச மொழித்து, அபயமளித்து அரக்கரை நலித்து அறத்தை நிலைநிறுத்துகிறது. அத்தகைய அருட்சக்தி வாய்ந்தவர்களே தர்ம வீரர். இராமன், கண்ணன், புத்தர், ஏசுநாதர், நபிமணி, நானகர் முதலியோர் தர்ம வீரராவர். நாட்டின் அடிமைத்தளையை நீக்கி, கல்வி செல்வம் தொழில் வீரம் விடுதலை ஒற்றுமை —இவற்றிற்காகத் தன்னலம் விடுத்துப் பொதுநலத் தவம் புரியும் திருத்தொண்டர் **கர்ம வீரராவர்.** லெனின், மஜினி,

ழாந்தார்க், சிவாஜி, குருகோவிந்தன், பிரதாபசிங்கன், வாஷிங்டன், காந்தி போன்றோர் கர்மவீரர். ஃபிரான்ஸின் பெருமை ழாந்தார்க்; இங்கிலாந்தின் பெருமை ஷேக்ஸ்பியர், க்ராம்வெல்; உரோமின் பெருமை தாந்தே, விர்கிலியன், அகுஸ்தன், யூலியகேஸரி; கிரீஸின் பெருமை ஹோமர், இலியாது வீரர்; கார்தாகத்தின் பெருமை அனிபால்; அமெரிக்காவின் பெருமை வாஷிங்டன். இவ்வாறு ஒவ்வொரு நாடும் வீரரால் பெருமை பெற்று விளங்குகிறது. வீரர், நாட்டன்னையின் வெற்றித் திருக்கரங்களாவார்.

ஞான வீரன்

தன்னையறிந்தவன் தேவமனிதன். அவன் கடவுட் கலப்பில் சுடர்பெற வாழ்பவன்; அச்சமில்லான்; அகந்தையில்லான்; மாசறு தூயன்; தேசுறு ஞானி; யோகசித்தன்; தியாகமூர்த்தி; புலனடக்கியோன்; பொறுமை மிக்கோன்; இன்னுரை சொல்வோன்; தன்னலமில்லான்; உள்ளத்துறைபவன்; அனைத்திலும் ஒருமையங் காண்போன்; யாருக்கும் தீங்கிலான்; ஆன்மானந்தன்; அருள்வலி மிக்கான்; இன்ப துன்பம் இரண்டும் சமமாக நினைப்பவன்; இத்தகைய தெய்வத்தன்மைகள் பொருந்திய புலவனே ஞானவீரனுவான். அவன், தன்னைப்போல அனைத்தையும் கருதித் தற்பெருமை யின்றி, தன்னலமின்றி, அற்புதமான அருள் வல்லபத்தால் உலகிற்கு அறிவும் திறனும், ஒளியும், இன்பமும் நல்கவல்லான். நெய்யும் திரியும் அழிவதைக் கருதாது விளக்கு வெளிச்சந் தருகிறது. அதுபோல இத்தகைய ஞானவீரன் தன்னைக் கொடுத்தும் பிறர்க்கு இதஞ் செய்வான்; அவன் பலாபலன்களிற் கட்டுப்படான். அவன் இறந்தும் இறவான்; பிறந்தும் பிறவான்; செய்தும் செய்யான்; சும்மாவிருந்தும் எல்லாம் புரிந்தவனுவான். அவனைச் சுற்றிக் கடவுட் காந்தம் வீசும். அதுவே பல அற்புதங்கள் புரியும். அத்தகைய மகாத்மாக்களே பாரத சமுதாயத்தின் பரமானந்தக் கனிகள்.

அத்தகைய கடவுட் பெரியாரே பாரத நாகரிகத்தை அமைத்தனர். தவம், வீரம், தொழில், தொண்டு—இந்த நான்கும் பாரத நாகரிகத்தின் நான்கு சக்திகள். பாரத நாடு அத்யான்ம தீரரைப் படைத்தது; போர் வீரரைப்

படைத்தது ; தொழிற் புலவரை யீன்றது ; அருள் தொண்டரைப் பெற்றது. அத்யான்ம தீரமே பாரத சமுதாய புருஷனின் தலை ; தர்மவீரம் உடல் ; கர்மவீரம் கைகால். அன்பு, அருள், வாய்மை, வீரம்—இவை பாரத வீர யாழின் நான்கு தந்திகளாகும். இத்தந்திகளை இனிது மீட்டி இன்னிசையளித்த வீரமணிகள் மிகப்பலர்.

"உலகில் இன்னும் ஓர் ஆன்மா துயரில் வருந்துவதைக் காணினும் இந்த மோட்சவாயிலிற் புகேன்" என்று உலகுயிர்களுக்கு இரங்கி, மோட்சத்தையும் வெறுத்த புத்தன் தர்ம வீரன். உண்மை தாய், அறிவு தந்தை, அறம் சகோதரன், தயை தோழன், சாந்தம் மனைவி, மன்னிக்கும் தன்மை மைந்தன்—இவை எனது ஆறு உறவினர் என்றான் தருமபுத்திரன். தருமன் மாயா நரகத்தை எதிரே கண்டான். அதில் துன்பப்படுவோர் அனைவரும், "புண்ணியரே! தாங்கள் எம்மருகே வரவர எமது நரக வேதனை தணிகிறதே!" என்றனர். "அப்படியானால், உங்கள் வேதனை முழுதும் தீர நானே நரகத்தில் குதித்து விடுகிறேன்" என்றான் தருமன். அவ்வாறே செய்தான்! அது தெய்வ சோதனையாயிற்று. பிறகு, இந்திரனே அவனைச் சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றான். இத்தகைய தியாகம் மிகவும் அரிது. ஒரு காலத்தில் மலையரக்கர் இறக்கைகொண்டு பறந்து உலகைப் பாழ்படுத்தினர். அவர்களைச் சிறகறுத்து ஒடுக்க இந்திரனுக்கு வச்சிராயுதம் வேண்டியிருந்தது. ததீசி முனிவரிடம் சென்று "உலகை நலிக்கும் மலையரக்கரை ஒடுக்க உறுதியான ஆயுதம் ஒன்று அளித்தருள வேண்டும்" என்றான். "இந்தா, எடுத்துக்கொள் என் முதுகெலும்பை! அது வலியதவத்தால் வயிரமானது" என்று முனிவர் தனது வீணாதண்டத்தையே அளித்தார். இஃது அற்புதமான தியாக வீரமாம்!

மன்னர் நீதி

பாரத மன்னர் மன்னுயிரைத் தன்னுயிர்போற் காத்தனர் ; பயிர் நலம், உயிர்நலம், உடல் நலம், கலைநலம், கல்வி நலம், செல்வ நலம், தொழில் நலம், அமைதி, அன்பு அனைத்தையும் போற்றினர் ; மனச்சாட்சிக்கு மாறின்றி

நீதி வழங்கினர் ; தொழிலாளருக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணினர் ; நீர்ப்பாசனம், பயிர் விளைவு, கைத் தொழில், வாணிபம், தீர்வைகள், வரிகளுக்காகத் தனித் தனி இலாகாக்கள் - இவற்றை முறைவகுத்துக் குடிநலம் போற்றினர் ; இந்திய நாகரிகத்தை உலகில் முந்திய நாகரி கமாக்கினர். காசிக்குச்சென்ற ஏழைப்பார்ப்பானொரு வன் குடும்பத்தைப் பாண்டியன் உளவறிந்து காத்தான். அக்குடும்பத்துடன் அத்தெரு முழுதிற்கும் படியளந் தான். இரவில் மாறுவேடம் பூண்டு தானே அத்தெரு வைக் காவல் புரிவதுபோல, இவ்வேழையின் வீட்டைப் பாதுகாத்தான். ஒருநாள் வழக்கம்போல உஷார்ப்படுத்த அவ்வீட்டுக் கதவைத்தட்டினன். அன்று அந்தணன் வந்திருந்தான். அவன் "சோர புருஷனே கதவையிடிக் கிறான் ?" என்று ஐயுற்றான். பாண்டியன் எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக்கொண்டு சென்றான். மறுநாள், பெரிய புகார் ! "யாரோ என் வீட்டுக் கதவை யிடித்தான் நான் காசிக்குப் போயிருக்கையில் என் மனைவியிடம் வரும் கள்வனே அவன்" என்று முறையிட்டான் அந்த ணன். "இதோ அக்கள்வனை ஒறுக்கிறேன்" என்று இரகசியமாகச் சென்று தனது கையை அறுத்தான் பாண்டியன்—குடிகளிடம் பொற்கை பெற்ற பாண்டி யன் ! குடிகளுக்குத் தன்னால் இம்மியும் இடர்வராது காத்த இம்மன்னனின் வீரம்—அறப்பெருமை—அள வற்றது.

ஆயிரக்கால் மண்டபத்தில் தன்னைமறந்து ஒரு சிலை யைச் செதுக்கிக் கொண்டிருந்த சிற்பிக்குப் பாண்டிய மன்னனொருவன் தம்பலம் தாங்கினான். சட்டென்று திரும்பினான் தொழிலாளி ; 'மன்னனா'! என்று திகைத்து நின்றான். "நீ தொழிலரசன் ; தம்பலம் தாங்கும் பையனைக் காணோம். அதனால் உனது வேலைக்கு இடர்நேரு மென்று நானே தாங்கினேன்" என்றான் பாண்டியன். நம் மன்னர் தொழிலை வளர்த்த பெருமை யென்னே !

வடக்கே மன்னனொருவன் பஞ்சகாலத்தில் தொழி லாளிகளுக்கு வேலை வேண்டுமென்று தனது அரண் மனையை மூன்றுதரம் இடித்து இடித்து அழகாக அமைக் கச் செய்தான்.

இளங்கன்றென்று தன் மைந்தன் தேர்க்காலிற் சிக்கி நசுங்கியதற்காகத் தனது அரசிளங் கன்றையே தேர்க் காலில் பலியிட்டான் மனுநீதி சோழன். நம் மன்னர் தாம், பிறர், தன்னவர், வேற்றவர் என்று பாராமல் நீதி கடைப்பிடித்தனர். சேரசோழ பாண்டிய மண்டலத்தில் அக்காலம் அற்புதமான வீரர் நிலவினர். "தன் மகன் போருக்குப் புறங்காட்டினால், அவன் உண்ட முலையை அறுத்தெறிவேன்" என்றாள் ஒரு வீரத்தாய். அவன் போரில் களிறெறிந்து பட்டதுகண்டு அவனை ஈன்ற நாளினும் பெரிதும் மகிழ்ந்தாள் அம்முதியள். நேற்றுத் தன் கணவன் போரில் பட்டான் ; இன்று தன் அருமைச் செல்வனைத் தலைவாரி, அமுதூட்டி, கையில் வேல் கொடுத்து, "செல் ; போர் வெல் !" என்று அனுப்பும் தமிழ்த்தாயின் நெஞ்சுரந்தான் என்னே ! நெடுஞ் செழியன், இராஜராஜ சோழன், சேரன் செங்குட்டுவன் போன்ற வீர மன்னர் பலரைத் தமிழ்த்தாய் பெற்றாள்.

பாரத வீரம்

கிரேக்க வீரரும், உரோம வீரரும், தோள்வலியை வணங்கினர். பாரத வீரர் ஆண்மைகொண்டு அறங் காப்பதிற் பெருமை கொண்டனர். இராமாயண பாரத புறநானூற்று வீரருக்கு நிகர் உலகில் இல்லை. புத்தருக்குப் பிறகு, சந்திர குப்தன், சமுத்திர குப்தன், அசோகன், பாலாதித்யன், சிலாதித்யன், ஹர்ஷன், பிருதிவிராஜன் காலம்வரை பாரத நாட்டின் வீர விளக்கு புகழோங்கி விளங்கியது. ஜயசந்திரன் வஞ்சனையால் கோரி முகமது பிருதிவிராஜனை வென்றான். பாட்னா யுத்தத்திற்குப் பிறகு வீர விளக்கு "பக் பக்" என்று அணையும் சமயம் இராஜ புத்திரர், சீக்கியர் மராட்டியரிடையே சக்திமைந்தர் தருமாவேசத்துடன் அவதரித்த வீரச் சுடரைத் தூண்டி னர். தேசம், தருமம் இரண்டையும் காக்கவே இவ்வீரர் தமது வாழ்வைப் பலிதானமாக்கினர். "இறந்தால் வீர விண், வென்றால் உலகாட்சி ; எழுந்துநில் ; போர் புரி ! அது வீரன் கடமை ; கடமை வழுவினால் இழிவு ; இகழ்ச்சி ! பயனைக் கருதாதே ! பணி செய்யக்கருது ! கருத்தைக் கடவுளிடம் இருத்து ; உன்னறத்தைச் செய் !" என்னும்

கீதையின் வீரவாசகம் மீண்டும் பாரத புத்திரரைத் தூண்டியது. படைவலிமிக்க முகலாய சாம்ராஜ்யத்துடன், மலையில் திரியும் பில்லர் துணைகொண்டு 25 ஆண்டுகள் தேச விரதம் பூண்டு தர்மாவேசத்துடன் போர் புரிந்து, சொல்லொணுத் துயர் பொறுத்த பிரதாபசிங்கனுக்கு இணை யார்? அவன் வீரவுலகின் விசித்திரம்! ராவல்சாகி என்ற அக்னிகுல வீரன் நோய்ப்படுக்கையில் சாவது இழிவென்று மன்னனெருவனுடன் வலுப்போர் செய்து இறந்தான். இரும்புமுளை யடித்த கதவை யானை முட்டித் தள்ளும்படி தனது மார்பையீந்து சமர்வென்ற சக்தவாதரஜபுத்திரன் வீரம் எண்ணினல் மயிர்க்கூச்செறிகிறது. தனது கற்பைக் காத்த சித்தூர் ரதி பத்மினி, நாட்டைக்காக்கத் தன் பதினெரு பிள்ளைகளையும் கணவனையும் வீரமுடன் போருக்கனுப்பினள். தன் மதலையைப் பாம்பீரின் கத்திக்குப் பலியாக்கி அரசிளங் குழந்தையான உதயசிங்கனைக் காத்தாள் பன்னு என்னும் வீர செவிலி. நீலா என்ற கற்பரசி பகைவர் சிறைப்பிடித்த கணவனைமீட்ட துணிவு கவியேறியது. துர்காதாஸின் வீரப்புகழ் அற்புதமானது. துர்காவதி தாராபாய் முதலிய வீரமாதர் சரிதை, போதிஸியா, ழாந்தார்க் சரிதை போன்றது. சீக்கியர் வீர உதாரணங்கள் இணையற்றன. சுடுசட்டியில் பகைவர் வாட்டியும் தர்மத்தை விடாத குரு அர்ஜுனன், கழுத்தைக் கொடுத்தும் அறத்தைக் கடைப்பிடித்த தேசபகதூர், வீரசக்தி வடிவான குரு கோவிந்தன், பகைவர் செங்கலடுக்கிப் புதைத்தபோதும் கலங்காது அகாலன் திருவடி சேர்ந்த ஜொராபர், பதேஸ் சிங், குருவிற்காக வாளேந்தி நாட்டின் விடுதலைப் போர் செய்த சுந்தரி, பாகோ எனும் மாதர், ஆனந்தபுரிப் போருக்குப் புறங்காட்டிக் கள்ளத்தனமாக ஓடி வந்த கணவரை "நீங்கள் புடவை கட்டிக்கொண்டு வீட்டிலிருங்கள்; நாங்கள் வாள்பிடித்துப் போர்புரிகிறோம்" என்று இடித்துச் சுணை வரச்செய்து போருக்கனுப்பிய அகாலிய மாதார் — இவர் உதாரணமெல்லாம் வீரநூல்களிற் பொன்னெழுத்தால் எழுதத்தகும். இன்றும் சத்தியாக்ரகப் போரில் சீக்கியர் அற்புதமான உறுதியும் துணிவும் காட்டிப் புகழ் பெற்றனர்.

இராமதாஸின் அருள்பெற்று, ஹிந்து தருமத்தை நிலை நிறுத்தி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை யாண்டான் சிவாஜி,

சிவாஜியும் வீரன்; நெப்போலியனும் வீரன். எனினும் இருவருக்கும் வேறுபாடுள்ளது. சிவாஜி விடுதலையிழந்த நாட்டிற்கு உயிரீந்தான்; அறங் காத்தான், அறப் பகைவரை வீழ்த்தினன். நெப்போலியன் குடியரசிற்குச் சிறிது தொண்டு செய்தான்; எனினும், தனது நாட்டை நிறைமுறையுடன் ஆண்டு முன்னேற்றாது கோடானு கோடி பேர்களைத் தனது மண் வெறிக்குப் பலிவைத்தான். ஃபிரான்சு கோடானு கோடி பொருளையும் வாலிப மணிகளையும் இழந்தது. நெப்போலியனும் அலெக்ஸாந்தரும் ஸீஸரும் போரால் சாதித்ததென்னை? எத்தனை மாந்தரை இவர்கள் பேராசை கொன்றழித்தது! குருகோவிந்தன், அர்ஜுனன், பிரதாபசிங்கன் போன்ற பாரதவீரர் போர் புரிந்தனர். எதற்காக? பாரததர்மத்தைக் காக்கவே. பாரத வீரன் கீதையின் வடிவு. பாரத வீரர் புரிந்தது அறப்போர். ஆர்லியனில் ஆங்கிலேயரை முறியடித்து, ஃபிரெஞ்சு நாட்டின் அடிமைத் தளையை முறித்தெறிந்த வீராவேசக் கன்னியான ஜோந்தார்க்கை ஐரோப்பிய வீரரின் முன்னணியில் வைக்கலாம். அவள் புரிந்தது அறப்போர்; விடுதலைப்போர்.

அறிதல், அறஞ் செய்தல், அருட்பணி புரிதல்—இம் மூன்றும் மனிதர் கடமை. கேவலம் உண்டுடுத் துறங்கி, ஊடிக் கூடிப் பெற்றுப் பேணி, மூத்துச் சாவதே மானிடத்தின் நோக்கமன்று. இந்த அன்னமயகோச விவகாரங்கள் விலங்குகளுக்கும் உண்டு. நம்மைவிடச் சுதந்தரமாக அவை உண்டுறங்கித் திரிகின்றன. மனிதன் பகுத்தறிவுள்ளவன். அன்பு, அறிவு, ஈகை, இரக்கம், நன்றி ஒப்புரவு முதலியன மனிதன் இயல்பு. அன்னவிசாரம், சொன்னவிசாரம், காமத்துடிப்பு, சூது, பொறாமை, சினம், தீது, தன்னலம், பேராசைபற்றிப் பிறர்க்கிடர் செய்து வாழ்வைச் சூதாடுவோர் காட்டு விலங்கினும் கடுவிலங்காவார். அவர் செய்யும் போர்கள் அதர்மப் போர்கள்; அசுரப்போர்கள். அவர் செயல்கள் தசைத் திமிர்

கொண்டு, நகை மதங்கொண்டு, எளியவரைக் கசக்கிப் பிழிந்து ஈனக்கொடுமைகளால் பிறர் உரிமைகளைப் பறிக்கும் காட்டு மிராண்டித்தனமாகும். அவர் விரிக்கும் வாணிபமெல்லாம் தந்திரமான பகற் கொள்ளையாம். அவர் பெறும் அற்ப மகிழ்வு பிறரைக் கெடுத்த அழிமகிழ்வு. அவர் பெறும் இசையும் பிறரை நலித்த வசையின் வடிவேயாகும். புலிக்குப் பல்லும் நகமும் இருப்பனபோல அவர்களுக்குக். கத்தியும் படைக் கலங்களும் உள்ளன. அவர் வலிமை பொதுநல நலிவாகும். பஸ்மாசுரன் தொட்டதை எரிக்கும்வரம் பெற்று, சிவன் தலையிலேயே கை வைக்கத் தொடங்கினன். திரிபுர அரக்கர் பெருவலி பெற்று ஊர்களை அழித்தனர். அதே மாதிரியே பண்படாதவனுக்குக் கிடைத்த திறமையும் ஆதிக்கமும் உயிர்களை வருத்தும்.

உலகில் அசுரபலம் அட்டூழியங்கள் செய்யும்போது அதையடக்க ஒரு தெய்வ சக்தி அவதரிக்கும்; அவதரித்துள்ளது! கொலைக் கருவிகள் தாங்கிக் கொலையே தொழிலாகும் அதர்மக் கொடுமை இனி யொழியும். தருமசக்தி இப்போது அஹிம்ஸையினல் வெற்றிபெற்று வருகிறது; இனி ஆன்ம சக்தி யெழுந்து உலகில் அமைதியை நிலை நாட்டும்; ஒளியைப் பரப்பி இருளை யொழிக்கும்; மனித சமுதாயத்தை ஒருகுல தெய்வ சமுதாயமாக்கும். கத்தி வீரர் போய்ச் சக்தி வீரர் வருவர். மாந்தரிடையே புகுந்த சைத்தான் ஒழிவான்; சைதன்யம் விளங்கும். இரத்தவெறி யொழியும்; பக்திநெறி பொலியும்; சித்த சுத்தி யுண்டாகும். அதர்மக் கொடுங்கோல் ஒழியும்; ஆன்ம தருமம் உலகையாளும்; மண்வெறி யொழியும்; உண்மையும் உயிரிரக்கமும் பொலியும்.

"எழுக தீரர்; சுத்தான்ம சித்திபெறுக! உலகமெல்லாம் பலப்பல உடல்களைக் கொண்டுலவும் சுத்தான்ம மயம் என்றுணர்க! பிறகு யாரை யார் அஞ்சுவது? யாரை யார் பகைப்பது? யாரை யார் திருடுவது? யாரை யார் அடக்கியாளுவது? வருக ஆன்மவீரர்! வெற்றி பெறுக!!

௪௨. கடவுளுண்மை

ஏன் அனைவரும் கடவுளைக் காண முடியவில்லை? அவனைக் காண்பதற்குத் தடையாயுள்ளதெது? ஆராய்வோம். உயிரினங்களை உணர்ச்சியின் அளவால் மூன்று படிகளாகப் பிரிக்கலாம்—விலங்குப்படி, மனிதப்படி, தெய்வப்படி.

மனித விலங்கு

விலங்குகளுக்குப் புலனுணர்ச்சி மட்டுமே உண்டு. அதனால் அவை உண்ணும்; உணவு தேடும்; உறங்கும்; குட்டி போடும்; குட்டி பெரிதாகுமட்டும் பேணும்; தமக்காகவே வாழும்; தன்னெதிரேயுள்ள புறப்பொருள்களையே காணும். வேறுள்ளனவெல்லாம் அவற்றிற்கு நினைவிரா. இதுதான் விலங்கு நிலை. விலங்கு தனது உணவிற்காகத் தனது இயல்பிற்கேற்ற வண்ணம் திரிந்து, தன் விழைவிற்காகக் கூடி முயங்கிக் குட்டிபோடும். இத்தூல விவகாரங்கள் எல்லா வுயிர்களுக்கும் இயலும். மனிதன் பகுத்தறிவுள்ளவன்; ஆன்ம வுணர்ச்சியும் சர்வான்மவுணர்ச்சியும் பெறுபவன்; தெய்வ நிலைக்குரியவன்.

சுடர், காற்று, கடல், புவி, செடி, கொடியனைத்தையும் உண்டாக்கி உலகை இயக்கும் அருளை மனிதன் அறிகிறான். அந்த அருளிறைவன்பால் அவன் நன்றி செலுத்த வேண்டும்; அவன் அருள்பெற மனங்குழைந் துருக வேண்டும்; அருள்வழி நிற்கவேண்டும். அறிவிருந்தும் அருளைப் பெறாதவன் அதமனாகிறான். கீழ்க்குணங்களால் மனிதன் விலங்காகிறான். ஹோம்ர் எழுதிய ஓதேஸி என்ற காவியத்தில் ஸெர்ஸி என்ற ஒரு மாய நங்கையின் கதையுள்ளது. அப்பெண் தனது மாயத்திறனால் மனிதனை விலங்காக்கிவிடுவாள். ஒருநாள் ஓதேஸனுடைய வீரர்கள் ஸெர்ஸியின் அரண்மனைக்குச் சென்று அவள் அளித்த விருந்தைப் பன்றிபோன்று பேராசையுடன் உண்டனர். ஸெர்ஸி தனது மாயக்கோலால் அவர்களைத் தொட்டாள்; அனைவரும் பன்றியாயினர். ஸெர்ஸியின் மாயக்கோல் இப்போது மனித சமுதாயத்தைத் தொட்டால் கோடிக் கணக்கான விலங்குகளைக் காண்போம். ஒருவன் சினமுறும்போது அவனை 'நீ ஒரு மனிதனா!'

என்கிறோம். வஞ்சம் புரிவோன் நரி; மறைந்து தீங்கிழைப்போன் பாம்பு; புன்மை விழைவுகொண்டு திரிவோன் பன்றி; எடுத்ததற்கெல்லாம் சினப்பவன் நாய்; அறத்தையும் நாட்டையும் பிறர் அழிக்கப் பார்த்தும் பொறுத்திருப்பவன் பொதிக்கழுதை; பிறர் என்ன நயம் புகன்றாலும் கேளாது போனபோக்கிலேயே சென்று தீங்கிழைப்போன் வெறிமத யானை; உண்மையான பொருளைக் காணாதவன் பகற்கூகை; தான் பாடுபடாமல் பிறர் பொருளைத் திருடுவோன் கழுகு; சோம்பித் தூங்கி மயங்குவோன் பனிக்கரடி அல்லது தேவாங்கு.

பன்றியும் உண்கிறது; உறங்குகிறது; ஊடல் கூடல் ஈனல் குட்டியைப் பேணல் எல்லாம் செய்கிறது. மனிதா, நீயும் அதற்காகவே வாழ்ந்தாயானால் நீ விலங்கினும் எப்படி உயர்ந்தவன்? உனக்குள்ளே மூச்சினும் அருகேயுள்ள எல்லாம் வல்ல பொருளையறியாமல் நீ என்னென்னவோ செய்கிறாய்! விழித்தெழு! உன்னையறி!

மனித மனிதன்

மனிதனுக்குப் பகுத்தறிவுள்ளது. மனிதன் தன்னலம், பொதுநலம் புரிவான். கட்புலன் செவிப்புலன்களைக் கடந்த உலகினின்று அவன் வேறு. அவன் தன்னுள் உலகினும் பெரிய ஒரு செம்பொருள் உள்ளது என்றறிகிறான். திமிங்கிலத்திற்குத் தன் நிறையில் 30ஂ9-ல் ஒரு பங்குதான் மூளையுள்ளது. யானைக்கு 100-ல் ஒரு பங்கேயுள்ளது. மனிதனுக்கோ தன்னெடையில் 45-ல் ஒரு பங்கு மூளையுள்ளது. மனிதனுக்கு ஏன் அனைத்தினும் பெரிய மூளை கொடுக்கப் பட்டது? தன்னறிவால் உள்ளே தேடி, அனைத்திற்கும் மூலமான ஒரு பொருளை யறிந்து அப்பொருள் மயமாக உலகைக் காணவன்றோ? அன்பு, அறம் நன்றி, ஒப்புரவு, நாண், கற்பு, ஆராய்ச்சி, உண்மை, பொறுமை, சீர்மை முதலிய தன்மைகளை வளர்த்துக் கடவுட்டன்மை யடைந்து உலகமுழுவதையும் கடவுள் மயமாகக் காண்பதற்கன்றோ மனிதனுக்கு ஆண்டவன் பெருத்த மூளையைக் கொடுத்தான்?

மனிதன் அமரனுவான். மனிதன் என்பது தோலன்று; இரத்தமன்று; தசையன்று. மனிதன் என்பது அறிவு. அவ்வறிவில் தெய்வப்பொருள் விளங்கும். அது சொல் மனங் கடந்த பொருள். அப்பொருளைச் சுற்றி ஐந்து கோட்டைகளுள்ளன. அக்கோட்டைகளைப் பற்றி ஆராய்வோம்.

ஐந்து கோசம்

இக்கோட்டைகளே பஞ்சகோசம் என்பன. அதாவது முறையே அன்னமய கோசம் (உடல்), பிராணமய கோசம் (உயிர்), மனோமய கோசம் (மனது), விஞ்ஞான மய கோசம் (அறிவு), ஆனந்தமய கோசம் (இன்பம்). இக்கோசங்களின் தன்மைகளைத் தெளிக :—

சாதி குலம் நிறம் நடை உடை முதலியன அன்னமய கோச வேற்றுமைகளே. இக்கோசத்தை மனிதன் தன் திமிரினுல் தீய செயல்களுக்குப் பயன் படுத்துகிறுன். கேவலம் அன்னமய வேற்றுமைகளைக் கொண்டு உலகில் எத்தனைச் சாதிசமயச் சச்சரவுகள் விளைகின்றன! அன்னமயகோசத்தை இயக்குவது பிராணமய கோசம். இதில் மனிதனுடைய பசி, தாகம், இன்னல், இன்பம், வாதனை முதலிய உணர்ச்சிகள் அடங்கியுள்ளன. இவ்விரு கோசங்களையும் உறுதியாக்கவே ஹடயோகம் ஏற்பட்டது.

மூன்ருவதான மனோமய கோசமே மனிதனின் இருக்கை. மனமெப்படியோ, மனிதனப்படியே.

மனமதே தோற்ற வாதி; மனமதே பற்றும் வீடும்;
மனமதே யெண்ண மாகும்; எண்ணமே வலிய பந்தம்;
மனமதே மாயா பாச மதிலென வொளி மறைக்கும்;
மனதினை யுறுதி செய்தால், மற்ருெரு வெற்றி யேனே?

*   *   *

மனத்தை வென்றவன் அனைத்தையும் வென்ருன்.

*   *   *

சினத்துடனே மண்ணைச் செயிப்பதினுந் தத்தம்
மனத்தை யடக்கிடலே மாண்பு.

ஆகாயத் தந்தி, தொலையொலி கேட்டல், தொலைப் பொருள் காண்டல், பிறர் மனமறிதல், பிறர் நோய்

தீர்த்தல், வியன் செயற் செய்தல் முதலியவெல்லாம் பழக்கிய மனத்தின் செயல்களேயாம். மனத்தை அடக்கவே இராஜயோகத்தில் தாரணை தியானம் சமாதி ஆகிய சாதனங்கள் ஏற்பட்டுள்ளன. மனத்தின் வடிவு நான் எனும் அகந்தை. அவ்வகந்தை அழிந்து எல்லாம் அவன் எனும் உண்மை எழுந்தால் கவலை நீங்கும், கீழியல்பின் நாடகம் முடியும்.

அடுத்தபடியான விஞ்ஞான கோசத்தில்தான் அருட்பெருஞ் சோதியின் வாயிற்படியுள்ளது, தெய்வப் புலமையுள்ளது. தெய்வப்புலமையால் மனிதன் ஆண்டவனுடைய லீலைகளை அறியலாம்; அவனை உணரலாம். ஆனந்த கோசத்திலேதான் கட்டொழிந்த இன்பம் உணர்வாகும். இப்பஞ்ச கோசங்களைத் தாண்டிய சுத்தான்ம வடிவாகக் கடவுள் உள்ளான்.

பஞ்சகோசாதீதனை அருளிறைவனை மனிதன் தன் வாயாலும் மனத்தாலும் அறிய முடியாது. இந்நிலையில் ‘கடவுள் இல்லை’ யென்றால் அஃது அறியாமையேயாகும். மனிதனுடைய சிற்றறிவினால் முடியாததை மறுத்தல், எட்டமுடியாத திராட்சை புளிப்பென்று நரி யோடிய கதையே யாகும். நரியாவது தான் நேரே கண்டது. இவன் கனவிலுங் காணக் கூடாதவொன்றை இல்லையென்று உபதேசஞ் செய்யக் கிளம்புவது அகம்பாவங் கொண்ட புல்லிய மடமையாகும்; பித்தக்காரன் பலாப் பழம் கசப்பு என்பது போலாகும்.

புறக்கண் புறவுலகையே காணும்; உட்கண்ணே உள்ளப்பொருளை யுணரும். உட்கண்ணே அருள்விழியாம். மனந் தெளிந்து, சித்தம் நிலைத்து, அகமொடுங்கி, ஆணவம் தேய்ந்து, பதியன்பெழுந்தால் அருள்விழி மலரும்; அருளுணர்வாகும். அவ்வுணர்வையே பற்றி உட்குவிந்து தியானித்தால் உள்ளொளி துலங்கும்; இதயக்கடவுள் இலங்கும். அக்கடவுட் கலப்பினால் மனிதன் பூரணம் பெறுவான்; இன்புறுவான். தெய்வக்கலப்பில் வாழ்வதே திவ்விய ஜீவனமாகும். ஆர்வம், அன்பு, அருள், அறிவு, வாய்மை, தூய்மை, அமைதி, இன்பம், சக்தி, முக்தி— இவையே திவ்விய ஜீவனத்தின் இலக்கணமாம். கடவுளுணர்வால் அனைத்தும் எய்தும்.

௪௩. உலகம் பலவிதம்

அன்பனே, உலகம் பலவிதம்; ஊர் பல; நாடுகள் பல; பழக்க வழக்கங்கள் பல; கொள்கைகள் பல; எண்ணிப் பார்! உலகில் சுமார் 150 கோடி மக்கள் இருக்கின்றனர்; இவர்கள் ஐந்து கண்டங்களில் சுமார் 75 நாடுகளில் வசிக்கின்றனர். பலவகையான நடையுடை பாவனைகள், பல கொள்கைகள், பலசமயங்கள், பலதொழில்கள் கொண்டு பலவாக வேறுபட்டு வசிக்கின்றனர் மாந்தர். திராவிடர் ஒருவகை; இந்திய ஆரியர் ஒருவகை; ஐரோப்பிய ஆரியர் ஒருவகை; அரபியர், துருக்கியர், பாரசீகர் ஒருவகை; ஆப்பிரிக்கர் ஒருவகை; சீனர், ஜப்பானியர், பர்மியர் ஒரு வகை; அமெரிக்க இந்தியர் ஒருவகை. அமைப்பிலும், நாகரிகத்திலும் மக்கள் பலவகை; கிறித்தவர், இஸ்லாமியர், புத்தர், ஜைனர், கொன்புத்ஸர், வேதாந்திகள், சித்தாந்திகள், உலகாயதர் எனப் பல மதத்தினர் உள்ளனர். இம்மதங்களில் உட்பிரிவுகள் பல; உதாரணமாகக் கிறித்தவருள் கத்தோலிகர், புரோதஸ்தாந்தியர், ப்ரிஸ்பிதேரியர், ஆங்கிலகர் எனப் பலபிரிவினர் உள்ளனர். இஸ்லாமியரில் ஷியாக்கள், ஸுன்னிகள் உள்ளனர்; இப்போது அஹமதியரும் பஹாய் மதத்தினரும் எழுந்துள்ளனர்; புத்தருள் மஹாயனர், ஹினயனர்; ஜைனருள் திகம்பரிகள், ஸ்வேதாம்பரிகள், ஸ்தானக வாசிகள்; வேதாந்திகளுள் அத்வைதிகள், துவைதிகள், விசிட்டாத்வைதிகள்; சித்தாந்திகளுள், சிவாத்துவைதிகள், வீரசைவர், கபாலிகர் உள்ளனர்; இதுதவிர தாந்திரிகர்கள், ஸுர்யோபாசிகள், காணபத்யர்கள், கபீர்பந்தாக்காரர்கள்; ராமபக்தர், கிருஷ்ண பக்தர் உள்ளனர். தற்காலம் ப்ரஹ்மஞான சபையினர் (தியாசபிகள்), ஆரியஸமாஜத்தார், பிரம்மஸமாஜத்தார் (இவர்களில் ஆதிபிரம்மஸமாஜம் சாதாரண பிரம்மஸமாஜம் என இருபிரிவுகள்), ராமகிருஷ்ண சங்கத்தார், ராமதீர்த்த பக்தர் உள்ளனர். இவற்றுடன் அருள்வள்ளலாரின் சமரஸ சன்மார்க்கரும் சமதர்ம சங்கத்தாரும் உள்ளனர். இவர்களில் எத்தனையோ வேற்றுமைகள் உள்ளன. இத்தனை மதக் கிளைகளில் உனக்கு எது நல்லது; எதில் நீ சேருவது என்கிறாய். அப்பனே! தான், தனக்கு என்று கோட்டை கட்டிக்கொள்ளும் சங்கங்கள் குண்டுநீர்

போலத் தேங்கி, ஓட்டமின்றி நாளடைவில் வற்றிப்போம். இத்தனைச் சங்கங்களும் பொதுவாக என்ன சொல்லிக் கொள்ளுகின்றன? "நான் உண்மை; உண்மையே உயர்வு" என்று. ஒரு மதமே உண்மையாயின் மற்றவை பொய்யா? இல்லை. கேள்: கடவுளுண்மை ஒரு பெரிய கற்பகம்போலும்; அதில் பல கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் அன்பெனும் இலைகள், அறிவு மலர்கள், உண்மைக் கனிகள் நிறைந்துள்ளன. பலவகைப் புட்கள் இக்கனிகளையுண்ண நாலா பக்கங்களினின்றும் வருகின்றன; ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாகப் பாடுகிறது; ஆடுகிறது. ஒவ்வொன்றின் வடிவும் நிறமும் வேறு. ஆனால் எல்லாம் இந்த உண்மையின்பக் கனிகளையே நாடி வருகின்றன. அதேமாதிரி எல்லாச் சன்மார்க்கங்களும் கடவுளின்பக் கனிகளையே நாடுகின்றன. அவரவர்க்கிசைந்தபடியே அருளாளர் தங்கள் அனுபவத்தைச் சொல்கிறார்கள். சிலர் அருட்பா பாடுகின்றனர், சிலர் தேவாரம்; சிலர் திருவாய்மொழி; சிலர் உபநிடதம்; சிலர் பைபிள், குருன், புத்ததர்மம், தவோவேதம், ஜெந்தவஸ்தா — இப்படிப் பல குரல்கள் ஒரு உண்மையைப் பலவகையாகப் பாடுகின்றன. காலமானதும் அவரவர் செல்கின்றனர். சிலர் புதிதாக வருகின்றனர். இப்படிப் போக்குவரவு செய்துகொண்டு இருக்கும் நாட்களில் ஏதோ ஒரு கிளையைப்பற்றி, ஓயாச் சத்தம் போட்டுக்கொண்டு மாந்தர் வாழ்கின்றனர். சத்தமடங்கி உள்ளே தேடினல் உண்மை புலனுகும்.

கிளைகள் பல, கனி ஒன்று; இனிய கனிகள் பல, இனிப்பு ஒன்று; மதங்கள் பல, உண்மைப் பொருள் ஒன்று. சில மதங்கள் கடவுள் உண்டெனும்; சில இல்லையெனும்; சில நானே கடவுளெனும்; சில கடவுள் ஒருவன் எனும்; சில பல வெனும்; சில சக்தியெனும்; சில உயிர் உலகம், இறைவன் வெவ்வேறெனும்; சில ஒன்றெனும்; இப்படிப் பல பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகள் எல்லாம் கடந்த உண்மைப் பொருளே கடவுள்; அது மனங்கடந்த மௌன வுள்ளத்துள்ளது. அதை அறிக; அதுவாகுக!

௪௪. மதவாதம் வீண்

சில ஆண்டுகளுக்கு முன்னே யான் ஆண்டிற்கு நான்கு மாதங்கள் கால்நடையாக நமது நாட்டைச் சுற்றி மனித வியல்பையும், உலகியல்பையும் அறிந்து குறித்துக் கொள்வது வழக்கம். இவ் வுலகமே எனது பள்ளிக்கூடம்; இயற்கையே எனது சுவடி. முன் வருஷம் முடிவாகச் சென்ற இடத்தினின்று பின் வருஷயாத்திரை கால்நடையாகத்தொடங்குவதுண்டு; (நாடோறும் 10 அல்லது 15 மைல் நடப்பது வழக்கம்) அப்போது நாட்டில் நாலா பக்கத்தினின்றும் பலபான்மை மாந்தர் உறவு கிடைக்கும். அதனால் யான் அடைந்த பயன்கள் மிகப் பல. ஒரு முறை கோயிலடி ராயர் சத்திரத்தில் தங்க நேர்ந்தது. இன்னும் மணியடிக்கவில்லை. திண்ணையில் ஏகக் கூச்சல், வாய்ச்சிலம்பம், ரகளை; எட்டுப்பேர் சத்தம் போடுகின்றனர். இருவர் வைராகிகள், ஒருவர் தெலுங்கர், ஒருவர் நம்பூதிரி (விகடன்), இருவர் பரதேசிகள், மற்றிருவர் வைணவர்கள். வைணவர் பல்லாண்டு ஆரம்பித்தார்கள்; பரங்கள் "சங்கர சங்கர சம்போ, ஆதியனாதியும் ஆகி" என்று கப்பரை தட்டத் தொடங்கினர். "இதென்ன அபசகுனம், நாராயணா" என்று காதில் கைவைத்தார் வைணவ ரொருவர். மலையாளி "ஜனகந்தன் மகளெல்லோ சீதைப்பெண்ணே — தத்தாய் — மொண்டு கொடுத்தது ராமாச்சாரி" என்று கிளிராமாயணம் பாடியதுடன் இருவருக்கும் சிண்டு முடித்துவிட்டான்; இடையே வைராகிகள் "பஜரே பையா ராமகோவிந்த ஹரீ" என்று கமாஸ்ராகத்தில் மேல்ஸ்தாயி பிடித்தனர். தெலுங்கர் ஒரு தூக்கம் போடலாமெனக் கண்ணை மூடினார்; இந்தச் சத்தம் அவருக்குப் பொறுக்கமுடியவில்லை; "ஏமி, முண்ட கொடுகுலு!" என்று எல்லாரையும் அதட்டினார். வைராகிக்கும் அவருக்கும் வலுத்த வாய்ச்சண்டை; அவர் தெலுங்கில் ஊசிமிளகாய் மாதிரி சுரீர் சுரீரெனப் பேசுகிறார்; வைராகிகள் ஹிந்தியில் சிறிது நேரம் சீறுவதும் சிறிது நேரம் பாடுவதுமாயிருக்கின்றனர். மற்றொருபுறம் சிவ விஷ்ணுசண்டை. "எங்கள் பெருமாள் கவுத்துவ மணிந்தார்; திருவை யணிந்தார்; உங்கள் சிவன் விடமுண்டார்; சுடுகாட்டில் எலும்புகளை யணிந்தார்; மண் சுமந்தார். எங்கள் திருமாலின் அடி

கழுவிய தண்ணீர்தான் கங்கை. அதை உமது சிவன் தலையிலணிந்தார்!" என்றனர் வைணவர். சைவர் "மாலுக்குச் சக்கரம் அளித்தவன் எங்கள் சிவன்; உமது விஷ்ணு பன்றியாக பூமியைத் துளைத்துப் பார்த்தும் எங்கள் சிவனின் அடிகாண முடியவில்லை; பிரமன் முடிகாண முடியவில்லை" என்றனர். அவர்கள் "எங்கள் பெருமான் மோகினியாகி பஸ்மாசூரனை எரிக்காவிடில் உங்கள் சிவன் என்னபாடு படுவான்!" என்றனர். "அந்த மோகினி எங்கள் சிவனிடம் மோகப்பட்டு ஹரிஹர புத்திரனையும் பெற்றது நினைப்பில்லையோ?" என்று இப்படிப் பழைய புராணமெல்லாம் பேசத் தொடங்கினர்கள். மலையாளி "சிவனும் மலைஞாளி, விஷ்ணுவும் மலையாளி" என்கிறான். "இல்லை எங்கள் சிவன் கொழுத்த வடமன்" என்றான் அந்தணன். இச்சண்டைகள் ஓய்ந்தபாடில்லை. நான் காவிரியில் முழுகிவிட்டு அடுத்தாற்போலத் தியானம் செய்து ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்தேன்; [அப்போது ஏராளமாக ஜபம் செய்வதுண்டு]; யுத்தகளத்தில்கூட அமைதியாகத் தியானம் செய்ய முடியும்; மனம் அப்படி அமைதியில் பழகியிருந்தது. இந்தச் சிறிய வாய்ப்பாரத யுத்தம் என் பக்கம் திரும்பியது. "அவரிடம் சொல்லுவோம், வாரும்" என்று வந்தனர்; அப்போது எனது நெற்றியில் குங்குமம் இருந்தது. நான் எப்போதேனும் குங்குமமே இடுவது. அது சிவன், விஷ்ணு இருவருக்கும் பொது. பெரும்பாலும் சாதிசமயக் குறிகளை யிடுவதில்லை. 'சிவமே பர' மென்றனர் பரங்கள்; வைணவர் 'நாரணனே பரம், நீரென்ன சொல்கிறீர்?' என்றனர். வைராகி "ஹரி, போல்" என்றான். "ஐயா, நீர் சொல்வதெல்லாம் ஒன்றுகத்தானேயிருக்கிறது. வாய்ப்பேச்சைவிட்டு மனத்தில் எண்ணுங்கள்; அப்போது ஒன்றே காணும்" என்றேன். ஆளுக்கொருமூலை வாதம் பேசினர். "எப்படி ஒன்றாகும்? நானும் நீரும் ஒன்றா? பெருமாள் பெரிதுதான்..." என்று வாதம் கிளம்பிற்று. இவர்களுடன் மேற்கோள் கூறி வாதமிடுவது வீண் முயற்சி என்று சில கேள்விகள் கேட்டேன்.

"ஐயா, ஆளுக்கு ஒரு மூலையாகப் பேசுகிறீர்களே, பேசுவது எது? நாக்கு. நாக்கு ஒன்று பலவிதமாகப்

பேசுகிறது. எதைப்பற்றி வாதாடுகிறீர்? கடவுளைப் பற்றி. நீர் என்ன சொல்லுகிறீர்? என் சாமி பெரிது; நீர்? எஞ்சாமி பெரிது; என் என்பதை அழித்தால் மீதி? மீதி சாமி பெரிது. அதனுல் ஒரு பெரிய சாமியை நீர் சிவமென்கிறீர்; அவர் விண்டு வென்கிருர்; இவர் மலே யாளி என்கிருர்; இவர்கள் இராதாகாந்தன், ஹரி என் கின்றனர்; அந்தத் தெலுங்கருக்கு உங்கள் சாமிவாதம் தலேவேதனேயாயிருக்கிறது. அவர் அமைதியாகத் தூங்க வேண்டுகிருர். சிவன் விஷ்ணு வென்று சாமிக்குப் பேர் கொடுத்ததார்? முன்னேர்கள். விஷ்ணு எங்கே? இதோ இருக்கிருர் அப்பக் குடத்தார்; அப்பக் குடத்தார் சிலே செய்தது யார்? சிற்பி; அவன் எப்படிச் செய் தான்? சாஸ்திரம் பார்த்து முறைப்படி செதுக்கினன்; அதற்குப் பெயரிட்டது யார்? பட்டாச்சாரியார். ஆத லால், பெயரும் வடிவும் தந்தது யார்? மனிதன். கோவில் கட்டினது யார்? மனிதன். உமது கோவிலில்லாவிட் டால் சாமி இருக்குமா, இராதா? இருக்கும், எங்கும் நிறைந்திருக்கும். ஆதலால் மனித மனத்தின் கற்பனே தானே இப்படிப் பெயர் வடிவுகளேக் கொண்டு வாதாடு கிறது? ஆம். நீர் எதனுல் வாதாடுகிறீர்? அன்பினுல். நீர்? அன்பினுல். ஆதலால் நீங்கள் எம்மதமேனும், எப்படி வாய் பேசினும் உள்ளே கடவுளிடம் கொண்ட அன்பு ஒன்றே யன்ருே? ஆம். ஆதலால் அன்பு எல்லா மதங்களுக்கும் பொது. உமது கடவுளே நீர் கண்ட துண்டா? இல்லே. கேட்டதுண்டா? புராணங்களில் தான். காணுத ஒரு பொருளேப்பற்றி ஏனிப்படிக் கூச்சல் போட்டு இச்சத்திரத்தின் அமைதியைக் கெடுக்கிறீர்கள்? நாம் பெரிதென்பதை இவர் மறுக்கவாவது என்னும் காழ்ப்பினுல். சிவனுவது விண்டுவாவது உங்களுக்குப் பேசும்படி வக்காலத்துக் கொடுத்தனரா? இல்லே. ஆத லால் பேசுவது எது? ஆத்திரம். இப்பேச்சால் கடவுள் மகிழுவாரா? உங்கள் முன் தோன்றிடுவாரா? மாட்டார். நீர் சிவன் என்கிறீர்; நீர் விண்டுவென்கிறீர்; இருபெயர் களேயும் சொல்லாதவர்கட்குக் கடவுளில்லேயா? அவர் எல்லாருக்கும் பொது; அப்ப, அப்படி வாருங்கள்! இதோ இந்தக் காவிரி ஓடுகிறது; இக்கரையில் இதற்குப் படித்துறைகள் பல உள்ளன; அதில் வெவ்வேறு வகை

யினர் முழுகுகின்றனர். அவற்றிற்குப் பார்ப்பனர் படித்துறை...............முதலிய பேர்களும் உண்டு. சில வேளை ஒரு படியில் மற்றவர் இறங்கினல் குடுமியைப் பிடித்துக்கொள்வதுமுண்டு. அதற்கொரு காவற்காரன் அதோ இருக்கிருன். இவற்றையெல்லாம் காவிரியாறு பாராட்டுகிறதா? அது பிராமணக் காவிரியா, சிவகாவிரியா, விஷ்ணுகாவிரியா, அல்லாகாவிரியா—இல்லே. காவிரி ஒன்றுதானே? ஆம்! படித்துறை அவரவர் சௌகரியத்திற்காக வெவ்வேறு கட்டிக்கொண்டுள்ளனர். அது மனிதன் வேலே. காவிரி என்ற பெயர் கூட மனிதனிட்டது. அதுபோல ஆண்டவன் ஒருவன்; அவனது சக்தி உலகமாக விளையாடுகிறது. மன மாயையால் மனிதன், அந்த அகண்ட சுத்தசுதந்தர சமத்துவ வெள்ளத்தை அறியாமல் எங்கெங்கோ சாதிமதப் படித்துறைகள் கட்டிக்கொண்டு வாதாடுகிருன்" என்று எடுத்துச் சொல்லவே அவர்கள் சண்டை ஓய்ந்தது.

பிறகு பிரியமுடன் பல கேள்விகள் கேட்கத் தொடங்கினர். அதற்குள் சத்திரத்தின் மணியடித்தது. மணியக்காரர் வந்து என்னை மரியாதையுடன் அழைத்தார். பரதேசிகளை விட்டு நான்மட்டும் சாப்பிட ஒப்பவில்லே. இருவருக்கும் பசி ஒன்றுதானே. ஆதலால் "எனக்குக் கடலையும் கனியும் உணவு. இதோ இக்குடுக்கையில் கொத்துக்கடலே ஊறப்போட்டுள்ளேன். வாழைக்கனி வாங்கிச் சாப்பிடுகிறேன்" என்றேன். மணியக்காரர் ஏதோ ஒருவித அன்பு மேலீட்டவராய் உள்ளிருந்து பழமும் பாலும் கொண்டுவந்தார். பரங்களுக்குத் தந்து யானும் கடலையுடன் கனியுண்டேன். மணியடித்ததும் எல்லாரும் எழுந்து போய்ச் சாப்பிடத் தொடங்கினர். மலேயாளி ஏதோ வாயெடுத்தார். "கடோ; பஹலே போஜன்கரோ" என்ருன் வைராகி (பிராமணன்). அப்படியே பிறரும். சாப்பாடாயிற்று. திண்ணைக்கு வந்து மல்லாந்து விழுந்தனர். மலேயாளி விகடம் செய்தான்; பட்சிகள் போலக் கத்தினன். அப்போது வைராகி என்னைச் சாதுவென் றழைத்து, "சாப்பிடுமுன் இவ்வளவு கூச்சல் போட்டோம்; இப்போது சிரித்து மகிழ்கிருேம். எல்லாம் நீங்கள் சமாதானம் செய்ததால்; சிறிது எங்களுக்கு ஏதாயினும் சொல்லுங்கள்!" என்ருன்.

"ஐயா, இஃது ஒரு சத்திரம்; இதில் பலர் கூடினர்; வெவ்வேறு இயல்பினர்; சத்தம் போட்டனர்; மணியடித்ததும் சட்டென எழுந்து வந்த காரியம் பார்த்தனர்; சாப்பிடும்போது பேச்சில்லை. அதுபோல் இவ்வுலகம் ஒரு சத்திரம்; இதில் நாடோறும் புதிய மனிதர் வருகின்றனர்; போகின்றனர். அவரவர் இக்காவிரியில் துறையறிந்து மூழ்கி அனுட்டானங்களைச் செய்துகொண்டு மணியடித்ததும் காரியத்தை முடித்துக்கொண்டு சென்றால் வம்பில்லை. சாப்பாடு போடுமுன் எத்தனை வாதங்கள் பேசினீர்கள்? மணியடித்ததும் அத்தனையும் அடங்கி விட்டனவே! சாப்பிடும்போது பேச்சுண்டா? அது போல, ஒருவன் உலகில் தான் வந்த காரியத்தை மறந்து வீண்வாதம் புரிகிறான். ஆண்டவன் அருள் மணியடிக்கிறது; "அடே, இது சத்திரம்; உன் வீடன்று; இங்கு ஒரு காரியத்திற்கு வந்தாய்; காரியத்தைப் பார்த்துக் கொண்டு செல்!" என்கிறது; உடனே தனது காரியம் நினைப்பிற்கு வருகிறது; "ஆகா! நாம் வாது வழக்காட இங்கு வரவில்லை; ஆண்டவன் அருளமுதை உள்ளாழ்ந்து உண்ணவன்றோ இவ்வுடலான சத்திரத்தில் புகுந்தோம்?" என்று அறிகிறான். அவ்வருளமுதை யுண்ணும்போது வேறு பேச்சும் வாதும் வெறுப்பா யிருக்கின்றன. ஆதலால் வாதமும் பேச்சும் வாய்மையைக் காட்டா. உட்குவிந்தாலே உண்மை யின்பமுண்டு. அப்போது இவ்வாதங்கள் வெறுத்துப் போகும். ஒருவன் வீணை மீட்டுகிறான்; அஃது எல்லாருக்கும் இன்பமளிக்கிறது. இன்பமளிப்பது அவன் மீட்டும் கீர்த்தனத்தின் மொழிகளல்ல; அதன் இன்னொலியே. அதுபோல எல்லா மத நூல்களும் ஒரே ஆண்டவனையே இனிதுறப் பாடுகின்றன; மொழிகளைக் கண்டு மயங்க வேண்டா! "நான் பேசுகிறேன்; எனது சாமி" என்றீரே இந்த நான் யார்? உடலா? உயிர்போனால் நானெனக் கை வீசுவீரா? இந்தப் பெயர் வடிவு வேற்றுமையெல்லாம் தூலவிகாரம்; பொருள் உள்ளத்திலுள்ளது; உள்ளத்திலுள்ளதே உலகெங்கும் உள்ளது. உமக்கிருக்கும் உயிர்தான் எறும்புக்கும் உள்ளது. பெயரையும் வடிவையும் நீக்கி நோக்குமின்! மிச்சம் ஒரே உயிர்; அந்த உயிருக்குயிர் இறைவன். அவனைத் திடமாகப் பற்றுங்கள்! அன்பர்களே, உங்கள்

மதங்கள் உண்டாகுமுன் உங்கள் மதாசாரியர்கள் பிறக்கு முன் இறைவன் இருந்தான்; என்றுமுள்ளான்; எங்கு முள்ளான். நூறு வகையான மதங்களில் தேடுவதைவிட உள்ளே தேடுங்கள்!" என்றதும் எல்லாருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மாலை என்னுடன் நீராடி அனைவரும் தியானம் செய்தனர். பிறகு இவர்கள் 150 மைல் என் னுடன் சுற்றினர்.

* * *

உலக வாழ்வு ஒரு குடிநீர் ஊருணி போலும். அதில் சிலர் விதிப்படி குடிநீர் மொண்டு செல்கின்றனர்; விதி முறைகளை மதியாத சிலர் மெதுவாக இறங்கி முழுகிச் செல்கின்றனர்; இரவில் சிலர் கால் கழுவி ஓசைபடாது செல்கின்றனர். காவற்காரன், "இது குடி நீர், கால்கை கழுவாதே! ஆபாசம் செய்யாதே!" என்று கூவுகிறான். உணர்ச்சியுள்ளவர்கள் "இது முறை; நாம் ஆபாசம் செய்தால் தண்ணீர் கெடும்; ஊருக்குத்தானே அது கெடுதல்" என்று உணர்ந்து செல்கின்றனர்; சிலர் "அவன் சத்தம் போடட்டும், நாம் இரகசியமாக......" என்று முறை தப்பிக் காரியம் செய்கின்றனர். காவற்காரன் கிட்டே வந்து சொல்லுகிறான். முரடர் சிலர், "கிழவா, பேசினால் உதை; நான் யார் தெரியுமா?" என்று வயிர மோதிரத்தைக் காட்டி வீம்பாக ஆபாசம் செய்து செல் கின்றனர். கிழவன் பிடிவாதமாக நீதியுரைக்கிறான். முடிவில் சிலர் ஆபாசத்தால் குளமே கெட்டுப்போகிறது. அதைத் தூர்வை யெடுக்க தருமவான் (அறவோன்) ஒரு வன் வருகிறான். இக்குளம் மனித வாழ்வு; காவற்காரனே மனித தர்மம். "அப்பனே! சுத்தமாக வாழ்! பொய், சூது, களவு, வஞ்சம், அகந்தை, திருட்டு, விபசாரம், பகை, சண்டை—இவை வேண்டா: இக்குளம் பரிசுத்தமா யிருக்கிறது; உனக்கு வேண்டிய நீரை முகந்து, வேறு தீங்கிழையாது செல்!" என்கிறான். சிலர் தர்மத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்றனர்; சிலர் இரகசியமாகத் தீது செய்கின்றனர்; சிலர் தாம் செல்வரெனும் மமதையால் முறை தப்பி நடக்கின்றனர். இதனால் மனித சமுதாய வாழ்வு முழுதும் கெடுகின்றது. அக்கேட்டைப் போக்கத் தர்மம் ஆண்டவனை யழைக்கிறது. ஆண்டவன் குரு மாரை யனுப்பி வாழ்வுக்குளத்தை மீண்டும் சுத்தம்

செய்கிருன். குருமார்களையே உபசாரத்திற்காக அவதாரம் என்பர். தூய்மை, அன்பு, உண்மை, தன்னறிவு, இன்சொல், அச்சமின்மை, பெரியோர் நட்பு, ஆன்ம வுறுதி, ஒப்புரவு, நல்லொழுக்கம், தீங்கற்ற தொழில்முயற்சி, அறிவுவளர்ச்சி, ஆசையாணவங்களை யடக்கல், ஒற்றுமை, உள்ளமைதி ஆகியவை எந்தமதத்திற்கேனும் விரோதமா? இல்லை. இவை குருமார்களின் உபதேச சாரமாகும். சுத்தி, முத்தி, சமதி (தூய்மை, கட்டின்மை, ஆன்மநேய ஒருமைப்பாடு)—இம்மூன்றுமே எல்லாத் தத்துவங்களின் பிழிசாறுமாகும்.

௬௫. சுத்தான்ம வாழ்வு

ஐயனே, உலகில் பல மதங்கள் உள்ளனவே, எதைப் பற்றுவது என மயங்குகிருய்! இம்மதக் கோட்டைகளுள் நடக்கும் சண்டை சச்சரவுகளையும், சிறுமைகளையும் நீ கண்ணுரக் கண்டால் மனங் கலங்கி நாஸ்திகனுய் விடுவாய். உன் சொந்த மதத்தையே எண்ணிப் பார்! அதில் எத்தனை வகுப்புகள் பகுப்புகள் உள்ளன? உன்னுற் சிறிதும் பின்பற்ற முடியாத எத்தனை விதிகள் உள்ளன! அந்த மதம் இந்த மதம் என்ற வாதமெல்லாம் அகம்பாவக் கூச்சலாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் மனச்சாட்சி உள்ளது. உள்ளிருந்து அஃது உணர்த்தும் வழியே தன்னறம். அதுவே அவனுக்கு அமைதி தரும். அதன்வழி எம்மதத்திற்கும் சம்மதமா யிருக்கும். வேடமும் பூச்சும் வேறுபடலாம். நாடக மேடையில் விதவிதமாக வேடம் போட்டு ஆடுகின்றனர்; வேடவிகாரமற்ற மனிதன் உள்ளே உள்ளான். அதுபோலே மேல் பூச்சுகளால் வேறுபடாத சுத்தான்மா ஒவ்வொருவருள்ளும் உள்ளது. அதைப்பற்றி அதுவாயிரு! ஒருவன் கரகம் ஆடுகிருன்; எவ்வளவு துள்ளித்துள்ளி ஆடினுலும், அவன் கவனம் பானைமேல் இருக்கிறதன்ருே? அதுபோல, ஆன்மாவாகிய உன்னில் கவனத்தை வை! பிறகு, உலகின் குணந்தொந்த விகாரங்கள் உன்னை விகாரப் படுத்தாவாம். பிறகு "குணம் குணத்துடன் குடுமி பிடித்தலைகிறது; எனக்கொன்று மில்லை; நான் உள்ளவாறு இருக்கிறேன்" என்றுணர்வாய்.

உலகின் இயல்பையும், அறிவாளி உலகில் எப்படி இருக்க வேண்டும், எத்தகைய முயற்சி செய்யவேண்டும் என்பதையும் அனுபவித்த புலவர்மணிகள் பலவாகச் சொல்லிப் போயினர். என் வாழ்வினின்று உதிர்ந்த சில அனுபவ மலர்களை உனக்குத் தருகிறேன். அவற்றை ஆழ்ந்து யோசித்துப் பின்பற்றி நில்! உன் அனுபவத்திற்கு அவை ஒவ்வாவிடில் விட்டுவிடு! உனக்கு எப்போது அவை உசிதமென்று காணப்படுகின்றனவோ அப்போது அவற்றைப் பின்பற்று! பசித்தபோது ருசித்து உண்பாய்.

௫௬. உலக மாயம்

பத்து வருஷமாகப் பாகவதம் படித்தார் ஒரு சாஸ்திரிகள். அவரை அரசன் மெச்சினான்; "சாஸ்திரிகளே தங்கள் பக்தியும் சிரத்தையும் என் மனத்தை உருக்குகின்றன; தங்கள் குடும்ப வாழ்வு எப்படி நடக்கிறது?" என்றான்.

"இரவில் 4-மணி நேரம் பாகவதம்; அதில் வரும் வரும்படி உப்புப் புளிக்குச் சரி; அரிசி வகையறுவிற்குப் பகல் முழுவதும் புரோகிதம்—அலைகிறேன்."

"தங்களுக்கு இக் கவலை வேண்டா; குடும்பத்திற்கு வேண்டிய சாமான்கள் அரண்மனை உக்கிராணத்தினின்று போகும்."

"மஹாராஜன் நன்றாயிருக்க வேண்டும்!"

அன்ன விசாரம் ஒழிந்தது. ஆறு மாதம் சென்றது. அரசன்—"சாஸ்திரிகளே, இப்போது கவலையில்லாமல் பக்தி நடக்கிறதா?"

"என்ன சொல்லட்டும்? ஆத்துக்காரி தினுசு தினுசாகப் பட்டுப் புடவை வேண்டுமென்கிறாள். 50 ரூபா போட்டால் தானே ஒரு டில்லி தர்பார் புடவையாவது வாங்கமுடிகிறது! 'சாப்பாட்டுக் கவலைதான் இல்லையே, சம்பாதிக்கிற பணத்திற்குப் புடவை வாங்குங்கள்' என்கிறாள்."

"கவலை வேண்டா. வருஷம் நான்கு புடவைகளும் வேண்டிய ஆடைகளும் தருகிறோம். பக்தி நடக்கட்டும்!"

ஆறு மாதம் கழிந்தது.

"பக்தி எப்படி?"

"மஹாராஜா, புடவைதுணிக் கவலையில்லை; சம்ஸாரம் நகை நாணயம் வேண்டுமென்று பிடுங்கித் தின்கிருள். அதற்காக அல்லும் பகலும் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது; "கிருஷ்ணு, ராமா" என்று சொல்லக்கூடப் போவதில்லை."

"கவலைவேண்டா; வேண்டிய ஆபரணம் தருகிரோம், பக்தி நடக்கட்டும்."

ஆருண்டுகள் ஆயின.

"பக்தி எப்படி?"

"தெய்வம் வீடு நிறையக் குழந்தை கொடுத்து விட்டது; 5 பெண் குழந்தைகள். ஐந்து பெற்ருல் அரசனும் ஆண்டியாவான் என்ருல், ஏழையின் கதி என்ன? முதல் இரண்டு பெண்களுக்கும் இந்தத் தை தப்பாது கலியாணம் ஆக வேண்டும். இந்தக் காலத்துப் பிள்ளையாண்டான்கள் பைபையாகப் பணம் கேட்கின்றனர். ஐந்து பெண்களுக்கும் சுமார் 20,000 ரூபாயாவது இருந்தால்தான் மானமாகத் தாலிகட்டி முடியும். இதைப்பற்றி அவளுக்கும் எனக்கும் வாக்கு வாதங்கள் நடக்கின்றன."

"இவ்வளவுதானே இந்தாரும் பணம்! கவலையற்றிரும்."

சரி. ஆறுமாதம் ஆனது.

"பக்தி எப்படி?"

"மஹாராஜா பெண் பார்க்க வருகிறவர்கள் இந்தக் கூரைக்குச்சில் நான் பெண்ணெடுக்க மாட்டேன் என்கின்றனர். வீட்டை நாகரிகமாகக் கட்ட வேண்டுமென்கிருள் மனைவி."

"அதுவும் சரி, உங்களுக்குப் பெரிய பங்களா அமைத்துத் தருவோம்."

சரி. குச்சு போச்சு பங்களா வந்தது! நாலு வருஷம் ஆனது.

"பக்தி எப்படி ?"

"மஹாராஜா! வீடு சரிதான். இரண்டு காணி இருந்தால் தானே கவலையில்லாதிருக்கும் என்று மனைவி தூண்டுகிருள். இந்தக் காலத்தில் தான தர்மங்கள் யார் செய்கிருர்கள்? கோதானம் பூதானம் எல்லாம் ஆதிகாலம்; மஹாராஜாதான் கண் பார்க்கவேண்டும்."

"இதற்கென்ன பிரமாதம்; தங்களுக்குப் பத்து வேலி ஆற்ருேரத்தில் தானம் செய்கிறேன்."

"மஹாராஜா நீடூழி வாழ்க!"

ஒரு வருஷம் ஆயிற்று.

"பக்தி எப்படி ?

"மஹாராஜா! என்னென்று சொல்வேன்! ஆசைக்கொரு ஆண் குழந்தை வேண்டுமென்று இருக்கிறது. அதற்காகக் காசியாத்திரை போகவேண்டும்."

"சரி போம்; இந்தாரும் பணம்!

காசியாத்திரை ஆண் குழந்தையாகப் பழுத்தது. பயல் செழுசெழு வென்று வளர்ந்தான். பி.ஏ. தேறினன். ரூ. 2000 வரதட்சிணையுடன் பெண் வந்தது; போலிஸ் சேவகம் கிடைத்தது; மனைவியைக் கூட்டிக் கொண்டு துண்டாய்ப் போனுன், தகப்பனுடன் சண்டை!

"பக்தி எப்படி ?"

அந்தப்பயல் செய்கிற அக்ரமம் பொறுக்க முடியவில்லை; என் பணத்தையெல்லாம் வாரிக்கொட்டிக் கொண்டு, படித்து, வரதட்சிணைப் பணத்தையும் தன் பெயருக்குப் போட்டுக்கொண்டு துண்டாகப் போய் விட்டான்; வயதுகாலத்தில் திண்டாட விட்டான். பெண் குழந்தைகள் அவரவர் வீடுகளில் குடித்தனம் செய்கின்றன."

"போனது போகட்டும், கவலையற்று பக்தி பண்ணும்!"........

"இப்போது பக்தி எப்படி ?"

"நான் பக்தி பண்ணி வாழவில்லையா? பாகவதமும் போயிற்று; துண்டாய்ப் போனவன் ஒரு கலகத்திலே மண்டையுடைந்து மாண்டு போனான்; வயிறும் பிள்ளையுமாக நாட்டுப் பெண் வீட்டிலிருக்கிறாள். என் செல்வத்திற்கு அவள் பக்கம் சீட்டு விழுந்தது. இரண்டு பெண்கள் கணவரை யிழந்து நண்டுஞ்சிண்டுமாக ஒரு டஜன் குழந்தைகளுடன் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டனர். மற்றொரு பெண்ணைப் பேயிடம் கொடுத்தேன்; அடிக்கிறான்; திட்டுகிறான். மற்றொன்றிற்குக் காசக்காரன் வாய்த்தான்; ஒரு சுகமுமில்லை. சதா கவலை. அவளுடம்பும் மனமும் உடைந்துபோயின. என்ன செய்வது?"

"இதற்கென்ன செய்யலாம்? நான் செய்யக் கூடியதைச் செய்தேன். தங்கள் மனம் குடும்பச் சக்கரத்திற் சுழல்கிறது."

"ஆம் மன்னா, உண்ண உடுக்க இருக்கக் குறைவில்லை; மனைவியும் இருக்கிறாள்; குழந்தைகளும் இருக்கின்றன. உலகின் இன்ப துன்பங்களை வெல்ல முடியவில்லை; மனத்தை இதில் புகுத்தினால் மீட்பதரிது; பாகவதத்தை மூளையில் ஏற்றி வாயால் சொன்னால் போதாது; இதயத்தில் வைத்து அனுஷ்டானத்தில் காட்ட வேண்டும்" என்றார் பாகவதர்.

மறுநாள் அவரைக் காணோம். ஓராண்டு கழித்து ஒரு மலைக்குகையில் மௌனமாகத் தியானித்திருக்கக் கண்டு, அரசன் 'இதுவே பாகவதப் பயன்' என்று அவரை வணங்கினான்.

சஎ. உலகியல்பு

மனிதன் மூளைகொதிக்கப் படிக்கிறான்; வாய்மாரி பொழிகிறான்; புத்தகம் புத்தகமாக எழுதித் தள்ளுகிறான்; பணம் குவிக்கிறான்; செல்வச் செருக்கில் தீங்கிழைக்கிறான்; எமனோலை வந்ததும் கர்ம மூட்டையைச் சுமந்து செல்லுகிறான். "இத்தனை பேசினாயே, படித்தாயே, எழுதினாயே, பணங்குவித்தாயே, என்ன சுகம் பெற்றாய்?" சுகக்கலம் பூஜ்யம். "எத்தனையோ சாத்திரம் கண்டாயே, உன்னை நீ கண்டாயா?" பெப்பெப்பே! "வீடு வாசல்,

மனை, பெண்டாட்டி, பிள்ளை, உத்தியோகம், காசு பணம், நிலம் காணிகளை வேண்டுமட்டும் அடைந்தாயே, மனத்திற்குச் சமாதானம் உண்டாயிற்றா?" அதேது! கவலைத் தீயில் மண்ணெண்ணெய் வார்த்தேன். "அப்பனே! இந்தச் சிறுசுகங்களுக்குமேல் ஒருபெரிய சுகம் உள்ளதே அதை எண்ணினாயா?" "என்ன ஸம்ஸாரம், என்ன ஸம்ஸாரமடா, கடை நாய்ப்பிழைப்பு!" என்று ஆயிரம்தரம் எண்ணியெண்ணி மீண்டும் அதன் சிற்றின்பத்தையே வேட்டையாடினேன். பேரின்பத்திற்கு வழி தெரியவில்லை" — "அன்பனே, மனது நிரம்ப இத்தனை எண்ணக் குழாங்களை நிரப்பினையே! பரம சுகமான ஒரு கடவுள் உன் உள்ளத்திலேயே உள்ளாரே; அவரைக் காணமுயன்றாயா?" — "அந்தப் பேச்சேது? கடவுளைக் காணப் போகிறேன் என்றால் வீட்டில் "உப்பில்லை; புளியில்லை; பிள்ளைக்குச் சம்பளம், பெண்ணுக்குச் சிற்றாடை, மாப்பிள்ளைக்கு வரதட்சிணை, கிட்டுவுக்குப் பூணல், பட்டுவுக்குச் சாந்தி" என்று உலகமாயை வலைபோட்டு இழுக்கிறதேயொழிய விட்ட வழியாகக் காணோமே! "உமது விலங்கை நீர்தாமே அடித்து மாட்டிக்கொண்டீர்?" "ஆமாம் ஐயா, நானே மாட்டிக்கொண்டேன். அதுவும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டது. ஜன்மக்கைதியாக மாயச்சிறையில் அடைபட்டு விழிக்கிறேன்" என்று அரைக்கணம் வருந்தி மீண்டும் அதேசிறையை வைகுண்டமென நினைக்கும் மாந்தர் மயக்கத்தை என் சொல்வது! வாழ்வுக் குடிசையில் மாயப் பாம்பு விளையாடுகிறது. கடவுளன்பென்னும் குழலூதி அதைப் பிடித்து வெளியே கொண்டுபோய் விடவேண்டும். "அக்கக்கா, ராம ராம, ரங்க ரங்க, சுந்தரேசா!" என்று கிளி கொஞ்சுகிறது; பூனை வந்தால் "கீச் கீச் கீச்!" என்று தனக்கு இயல்பான குரலெடுக்கிறது. உலகமாந்தர் அறிவைப் பேசுகின்றனர்; காரியம் வரும்போது பின்வாங்குகின்றனர்.

ஒரு பணக்காரன்; கொஞ்சம் சித்தாந்தம் படித்தவன்; "வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்" என்றெல்லாம் பேசுவான்; தினம் சிவன் கோவிலுக்குப் போய் சிவானந்தலஹரி பாடுவான்; தேவாரம் பொழிவான்; வெகுநேரம் கோவிலைவிட்டு நகரமாட்டான். "சிவனே;

என்னை இப்படியே ஐக்கியம் செய்துகொள்!'' என்று கூவுவான்; நடிப்பான். கோவில்பட்டருக்கு இதுசங்கடமாயிருந்தது. இவன் ஆடிப்பாடிக் கும்பிட்டுப் போக மணி பதினொன்றானது. ஒருநாள் கோவில் அரவமடங்கித் தனித்திருந்தது. ''அரனே, சிவனே, அம்பலவாணனே, என்னை ஐக்கியம்செய்துகொள்! மாணிக்கவாசகர், அப்பர், நந்தனார் போன்று என்னையும் உனது சோதியில் இதோ மறைத்து விடு!'' என்றெல்லாம் முறையிட்டான். சிவன் மனம் இரங்கிற்று. ''அன்பனே, இங்கே வா; இனி வீட்டிற்குத் திரும்பிப் போகாமல் உடனே உன்னை ஐக்கியம் செய்து கொள்ளுகிறேன்'' என்று மூலஸ்தானத்திலிருந்து ஓர் ஒலி பிறந்தது. ஆசாமிக்குக் கிலி பிறந்தது. ''அப்பாடி, ஐக்கியம் போதும்! கல்லுச் சாமி பேசாதென்றல்லவோ சொன்னேன். ஐக்கியமாம்; வீடு திரும்பாத ஐக்கியமாம்! என் பெண்சாதி பிள்ளை, வட்டிக்கடை, மளிகை வியாபாரம், கோர்ட்டு விவகாரம், காணியாட்சி எல்லாம் விட்டு விடுவேனோ? சீ, இங்கே அரைநொடிகூட நிற்கக் கூடாது'' என்று ஆள் ஒரே மூச்சில் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து புளிமோர் கரைத்துக் குடித்தான். இலிங்கத்திற்குப் பின் ஒளிந்திருந்த பூசாரியும் வெளியே வந்தான். அதோடு கோவில் சரி!

இப்படி யிருக்கிறது உலகின் இயல்பு. ஆசையாணவச் சூளையில் மனிதன் வெந்து இறுகி மனமாயக் கட்குடமாயிருக்கிறான். ஏழை 'இல்லையே' என்றழுகிறான். பணக்காரன் 'இன்னுமில்லையே' என்றழுகிறான். கல்லுக் கணபதி குழக்கட்டை சாப்பிட ஆரம்பித்தால் நிவேதனம் மண்தான்!

அலெக்சாந்தர் முன்னே திருடனொருவன் கைதியாகக் கொண்டு வரப்பட்டான். ''பொல்லாப் பயலே, நீ அநியாயமாக அந்த வீட்டில் 50 ரூபா திருடினாய்; இந்தக் குடிசையில் தீ வைத்தாய்; அடுத்த ஊரில் கொள்ளை யடித்தாய்; நீ பெருந்திருடன்!'' என்றான் அலெக்சாந்தர். ''நான் ஒரு வீட்டில் சிறு தொகை திருடினேன். நீர் நாடுநாடாக நுழைந்து ஆட்களை வெட்டி, குத்தி, கொன்று பெட்டி பெட்டியாகப் பணமும் பொருளும் கொள்ளை யடிக்கிறீரே! நான் ஒரு வீட்டைக்

கொளுத்தினேன்; நீர் ஊர் ஊராகக் கொளுத்தி வருகிறீர். நான் சிலருக்குப் புண்ணிழைத்தேன். நீர் போர் வெறியால் கண்ணிழந்து ஆட்களை இலட்சக் கணக்கில் கொன்று குவிக்கிறீரே! என்னால் இரண்டொரு வீடுகளுக்கு அபாயம்; தேவரீரால் உலகிற்கெல்லாம் பயங்கரச் சனி பிடித்தாட்டுகிறதே! நான் என் பசியினால் திருடுகிறேன். சமூகம் இரத்த வெறியால், உலகையே கொள்ளையடிக்கிறீர். நீரே பெரிய திருடர்; பெரிய கொள்ளைக்காரர்! என்னைத் தண்டிக்குமுன் உம்மையே தண்டித்துக் கொள்ளவேண்டும்" என்றான்.

இப்படி மேலே பார்க்கப் பார்க்க, உலகமாயம் சிற்றப்பனுக்குப் பெரியப்பனாக வளர்ந்துகொண்டே போகிறது. "மஹாராஜா, ஒரு காசு" என்று பாட்டுப் பாடிக் கேட்கிறான் பக்கிரி. "ஆண்டவனே! எனக்கு மலை மலையாகத் தங்கக்கட்டி தா; என் எதிரியை நிர்மூலமாக்கு; உலகை எனக்கு அடிமையாக்கு; உனக்கு அடுத்தபடி உலகில் நானே அதிகாரியாயிருக்கும்படி அருள்! உனக்கொரு கோவில் கட்டுகிறேன். திருக்கல்யாணம் செய்கிறேன்" என்கிறான் பேராசை பிடித்த அரசன். "அரசு என்றால் யான்" (State-it is I) என்றது 14-ம் லூயியின் அகங்காரம். "ஞானியே, உனக்கு வேண்டியதைக் கேள்! தருகிறேன்" என்றான் அலெக்சாந்தர். "அப்பனே, எனக்கும சூரியனுக்கும் குறுக்கே நில்லாதே; போ!" என்றான் தொட்டிச் சாமியான தயாஜெனிஸ். இந்த ஞானி பகலில் விளக்குப் பிடித்துச் செல்வான். "ஏனிந்தப் பைத்தியம்?". "ஐயா நான் மனிதனைத் தேடுகிறேன்; அகப்படவில்லை" என்றான். ஸொக்ராத்தன் தன் சிறிய குடிலில் நெடுநாளாக ஒரு நாற்காலி போட்டிருந்தான். அதைப்பற்றி இறுதிக் காலத்தில் சீடர் கேட்டனர். "நண்பருக்காக அந்த நாற்காலியைப் போட்டிருந்தேன். அதில் உட்கார ஒரு நண்பனுமிலன்; இறுதி மட்டும் எனது நற்காலி காலியாகவே யிருக்கிறது" என்றான். உலகில் நட்பும், அன்பும், உண்மை யுள்ளமும் மிக மிக அரிது. ஆணவமாயம் எங்கும் தாண்டவமாடுகிறது. அதிகாரம் சிறிது வந்தால் ஆட்களை ஏறி மிதிக்கத் தொடங்கித் தானும் முடிவில் மிதிபட்டிறக்கிறான் மனிதன். எவ்வளவோ ஞான நூல்களைக் கேட்கிறான்; கற்கிறான்.

எல்லாம் உவர்நிலத்திற்குப் போட்ட உரம்போல் பயன் படாது போகிறது. சொரியச் சொரிய சொகுசு! பின்னுலே மேகப் புண், வலி, அரிப்பு விடுகிறதா? மேகப் பற்றுப்போலே உலகப் பற்றும் படர்கிறது. கருமி பணம் சேர்க்கிறுன்; புதைக்கிறுன்; மறைக்கிறுன்; இறக்கிறுன். பிள்ளைகள் பங்குச் சண்டை போட்டு மண்டை உடைகின்றனர். தட்டில்லாது வரங்கொடுத்தால், "கடவுளே தொட்டதெல்லாம் தங்கமாக வேண்டு"மென்று வரம் கேட்கிறது மனிதனிடமுள்ள மிதாசு (Midas).

௪அ. உண்மைச் சுடர் வணக்கம்

அன்பனே! வணக்கம் என்பது மனத்தை வணக்குவது. எதற்கு? உள்ளத்தில் உள்ளவாறு உண்மையறிவின்ப வொளியாக விளங்கும் பரம்பொருளுக்கு; உள்ளும் அதுவே; உலகிலும் அதுவே. உள் வணக்கம் தியானம்; புறவணக்கம் வழிபாடு. வழிபாடு என்பது ஆன்மாவாகிய அந்தப் பரம்பொருளை யுள்ளேயுணர்ந்து வாழ்வை அதன் வழிப்படுத்தல்; (வழி+பாடு). வாழ்வை அதன் வழிப் படுத்தலாவது, அதன் இன்பம் இன்னதென்றறிந்து மற்றைப் போலி யின்பங்களைத் துறந்து, அனைத்திலும் அந்த ஆன்மவொருமையையே கண்டு அன்பு, அருள், அறிவு, அமைதி சேர வாழுவது. இத்தகைய வாழ்வைத் தியானத்தினுல் பெறலாம். தியானம் என்றுல் எண்ணல், நினைத்தல், சிந்தித்தல் என்பதாம். எதை எண்ணுவது? எப்படி நினைப்பது? எப்படி வழுத்துவது? எப்படி வழி படுவது? சொல்கிறேன்:

உள்ளது ஒன்று. அதை பிரமம், சிவம், பரம், விஷ்ணு, அல்லா என்று பலவாக உலகோர் வழிபடுவர். தங்கள் மனங்கொண்டபடி தங்கள் தங்கள் ஊகத்திற்கும், நினைப்பிற்கும் எட்டிய பெயர் வடிவுகளைப் பலவாகப் பெருக்கி, ஒரு பொருளைத் தனித்தனியாக, பலவாக வணங்குகின்றனர் உலகோர். அதை ஆணென்பர், பெண்ணென்பர், மாயியென்பர், மாயையென்பர்; சிவம், சக்தி, ஒன்று, இரண்டு, பல, ஒன்றுமில்லை, நிறைசூனியம், உண்டு, இல்லை என உலகில் வழக்காடிப் பொழுதுபோக்குவர். அன்பனே! உள்ளதுஓர் உண்மைப்பொருளே. அதுசுத்தம்.

அமலம், பூரணம், நிறைவு, ஆதி, அநாதி, அவிகாரம், சுயஞ் சோதி! அது மனமொழிக்கெட்டாதது; அஃது அறிவாக உன்னுள் உள்ளது; எங்கே? உள்ளத்தில். நான் செய் தேன்; என்னையா சொல்லுகிறாய்? எனும்போது உன் வலக்கையை எங்கே வைக்கிறாயோ அங்கேயே உனது அறிவான்மா, உனது தெய்வத்தன்மை கொழுந்துவிட் டெரிகின்றது. அங்கே நினை! நீ அதை அறியலாம். அக்கடவுளின் அருளையே சக்தி யென்பர். அந்த அரு ளாலேயே இறைவன் எங்கும் உள்ளான்; எல்லாம் புரிகிறான். அனைத்திற்கும் சாட்சியாக விளங்கும் மோன மணிவிளக்கான இந்தச் சூரியனைப் பார்! இவ்வுலகு முழு தும் ஆண்டவன் வடிவென நினை! இவ்வுலகுடலுக்கு ஆன்மா கதிரவன். கதிரவன் உதித்ததும் அவன் சந்நிதி மாத்திரத்தில் தாமரை இதழ் விரிகிறது; உலகம் விழித் தெழுகின்றது. உலகோர் பலதொழில் பயில்கின்றனர். கடல் ஆவியாகி மேகமாகி மழை பொழிகிறது; பயிர் விளைகிறது; உயிர்கள் அதையுண்டு பிழைக்கின்றன. அதுபோல உண்மைப் பரம்பொருளின் முன்னிலைக்கே எல்லாம் நடக்கும்—ஐந்து தொழிலும் நடக்கும். கதிர் + அவன் = கதிரவன். அவன் ஸத்து, நிலைபொருள், சர்வ சாட்சி; உண்மை; அவனது கதிரே எங்கும் பரவி, எல்லாமியற்றுகிறது. அவனொளி அக்கதிர்களால் எங்கும் ஒளிர்கின்றது; அவன் கனல் அக்கதிர்களின்மூலம் கனலு கின்றது. அதுபோலே ஆண்டவன் நிலையாக, தானே தானாக உள்ளான்; அவனருள் (அருட்பெருஞ்சுடர்) எங்கும் பரவி அனைத்தையும் மேன்மேலும் வளர்த்து, அறி வாக நிறைந்து அண்டங்களை ஆக்கி, அளித்து, அடக்கித் தோற்றுவிக்கிறது. அறிந்தாயா? மற்றோருதாரணம்: இப் பொத்தானை (Switch) அமுக்கியதும் பளிச்சென இந்த மின்விளக்கு எரிகிறதே! ஜடமான ஒளியற்ற இந்தக் கண்ணாடிக் குமிழில் (Bulb) ஒளி எப்படி வந்தது? மின் சக்தியால். எதனின்று? மின்பொறி (Dynamo)யினின்று. மின்பொறி ஸத்து. அது, அவன், பரம்பொருள்; அதன் மின்ஸாரக்கனல் சக்தி. அது பல கம்பிகள் மூலம் விளக் குகளாகவும், மணிகளாகவும், ஒலிபரப்பியாகவும், மின் அச்சாகவும், படக்காட்சியாகவும், மின் வண்டியாகவும் பலவிதமாக விளையாடுகின்றது. இப்படிப் பலவானது

எது? ஒரு சக்தி; எதனின்று? நின்று நிலைத்த ஒரு சக்திப் பொறியினின்று. அப்பனே! இது தூலமான மின்ஸாரம். வானத்தில் பளிச்சென்று மேகத்தைப் பிளந்து ஒரு மின்னல் வெட்டுகிறதே; அதில் இஃது உண்டாகிறது. நாம் சக்தியென வணங்குவது இதற்கும் மேற்பட்டது. இறைவன் சுத்தன்; அவன் அருளாற்றல் சக்தி.

இப்போது உள்ளத்து உண்மை என்றறி! அது தனது அறிவால், அருளால் எங்கும் நிறைந்து தன் இன்பத்தால் பலவகைத் தோற்றங்களாக உலகில் விளையாடுகின்றது. அவ்வுண்மைப் பொருளுக்குப் பல பெயர், பல வடிவுகள் கற்பிக்கின்றனர். அதைச் சுற்றிப் பல சமய நெறிகள், கொள்கைகள், உண்டு இல்லை, ஒன்று இரண்டு மூன்று பல, எனது உனது எனும் வாதங்கள், கோயில்கள், திருவிழாக்கள், கூத்துக்கள் எல்லாம் நடமாடுகின்றன! இவை யெல்லாம் உண்மைப் பொருளினின்று வெகு தூரம் விலகியவை. இந்த விளக்கைப் பார்! அசையாதிருக்கிறது. அதைச் சுற்றிச் சிலர் கூத்தாடுகின்றனர்; பாடுகின்றனர்; படிக்கின்றனர்; வீண் வாதாடுகின்றனர்; சூதாடுகின்றனர்; சண்டை போடுகின்றனர். ஆனால் விளக்கு எதிலாயினும் கலக்கிறதா, வாதாடுகிறதா, சண்டை போடுகிறதா? இல்லை. தானே தானாகத் தாக்கற்று அஃது ஒளிர்கின்றது. அதுபோலவே பரம்பொருள் ஒவ்வொருவருள்ளத்தும் கோயில் கொண்டுள்ளது. அஃது அறிவாயுள்ளது.

அஃது என்னுள் உள்ளதெனில் நான் ஏன் அதை அறியமுடியவில்லை என்கிறாய்? அன்பனே உள்ளத்தை ஒரு கதவு மூடிக்கொண்டு மறைக்கிறது. அக் கதவைத் திறக்கவேண்டும். விளக்கைக் கண்ணாடி லாந்தரில் வைத்தால் சுற்றிலும் தெளிவாக ஒளி வீசுகின்றது. இரும்புக் கதவுகள் போட்ட லாந்தரில் வைத்தால் ஒளி ஊடுருவி நிலவுமா? நிலவாது. அதுபோல உனது அறிவுப்பொருள் சுற்றிலும் மனமயக்கத்தால் அச்சம், ஆசை, ஆணவம், வெகுளி, கலக்கம், பற்று முதலிய பல அடைப்புகளால் சூழப்பட்டுள்ளது. அவற்றை நீக்கவேண்டும். தேங்காயைக் தடிப்பான நார்மட்டை மூடிக்கொண்டிருப்பது

போல உள்ளப் பொருளைக் கள்ள மனமாயை கவர்ந்து கொண்டுள்ளது. இவ்விரும்புக் கதவுகளைத் தகர்க்கலாம்; நாருரித்து ஓட்டையுடைத்துத் தேங்காயுண்ணலாம். வழி? உள்ளே தேடு!

சகூ. சுத்த சக்தி

இறைவன் சுத்தன்; அவனுடைய இணைபிரியாத அருளாற்றல் சக்தி; ஆகலின் சுத்த சக்தி என்று நான் அப்பரம்பொருளைக்கூறுகிறேன். அது சிவ சக்தி; உண்மையறிவு, கதிர்+அவன்; உண்மை அறிவு, இன்பம், அமைதி, எல்லாம் "சுத்தம்" என்ற பொருளில் அடங்கும். எல்லா மதத்ினரும் வணங்கும் தெய்வமும் சுத்தன். ரஸூல் சுத்தன்; பரமபிதா சுத்தன், சுத்த மனத்தில் ஒளிர்பவன்; சிவன் சுத்தன்; புத்தன் சுத்தன்; அவனது அருள் வல்லபம், ஆணை, ஆற்றலே சக்தி—ஓம் சுத்த சக்தி. [ஓம்=அ+உ+ம்=அறிவு+உண்மை+இன்பம். உண்மை அறிவு இன்பப்பொருள் சுத்த சக்தி.] இப்பொருள் ஒன்றினொன்று இணைபிரியாது கலந்தது. பால் சுத்தன், வெண்மையும் சுவையும் சக்தி; அனல் சுத்தன், சூடும், தணலும் சக்தி; ஆகாயம் சுத்தன்; காற்று சக்தி. இப்படி ஒன்றாகக் கலந்து எங்கும் நிலவி நிறைந்த சுத்தசக்தியை எப்போதும் உள்ளக் கோயிலில் நினை! அன்பனே, மனக் கதவு திறக்கும்.

இந்த உண்மையறிவுப் பொருளையே கணக்கற்ற சமயங்கள் தனியுணர்வுடன் வணங்குகின்றன. அவரவர் அறிவு முதிர்ச்சிக்கேற்றபடி சங்கம், கோஷ்டி, நூல், கோயில், ஆசார அனுஷ்டானம் இவற்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இவற்றை ஏற்படுத்திய அறிவாளிகளும் அருட்புலவர்களும் நன்னோக்கத்துடனேயே தங்கள் கொள்கைகளை உலக வொற்றுமையின் பொருட்டு உரைத்துச் சென்றனர். அவர்களுக்குப்பின் மனித மதி, கொள்கைகளைச் சுற்றித் தன்னலமதவாதக் கோட்டைகளை எழுப்பியது. அச்சத்தாலும், ஆசையாலும், பழக்கத்தாலுமே பெரும்பாலும் மக்கள் இச்சாதி சமய சாத்திர கோத்திரக் காட்டில் இன்னும் கண்கெட்டலைகின்றனர். பாவாடைக்

கறுப்பன் முதல், பரம்பொருள் மட்டும் எத்தனைத்தெய்வங்கள்! விதவித வடிவங்கள், பெயர்கள், பூசை முறைகள்—நெற்றியிலும், கழுத்திலும் எத்தனை புனை வேடங்கள்! இவை யெல்லாம் கொள்வோர் கொள்ளட்டும். அப்பனே! நீ எவரையும் பழியாதே! நம்பிக்கையோடு எவன் எதை வழிபடினும் அதுவாக அவனுக்கு ஆண்டவன் அருளுவான். பெரும்பாலும் மக்கள் வரத்திற்காக வழிபடுவர்; நீ பரத்திற்காக வழிபடு! மக்கள் புவிச் செல்வத்திற்காக வழிபடுவர், நீ சிவச் செல்வத்திற்காக வழிபடு! மக்கள் பொறியுணர்வாற் காண்பர்; நீ அறிவுணர்வால் காண்! அன்பனே! ஆழ்ந்து நிறைந்த உண்மையறிவுக் கடல்மேல் எழும் அலைகளிற் பொங்கும் நுரைகளே இப்புற வேறுபாடுகள்.

௩௦. தேகி

உள்ளத்தைக் கோயிலாக்கு! உண்மையறிவின்பமான சுத்த சக்தியை அதில் வணங்கு! பாவும் பூவும் சாற்றி வணங்கலாம். அதனினும் அன்பும், ஆர்வமும் கொண்டு வணங்கு! நாவினும் மனம் ஆயிரம் மடங்கு சக்தியுள்ளது; அதனினும் உள்ளம் பன்மடங்கு; அதனினும் உன்னுது அறிவா யடங்குவது கோடி மடங்கு வலிவுள்ளது. ஆனல், எடுத்தவுடன் சுத்தான்மாவை யறிந்துணர்ந்து அதுவாக அடங்கல் மிகமிக அரிது. அதன்பால் மனத்தைப் பயிற்றவே அருட்பெருஞ் சோதிப் புலவர்மணிகள் உருவழிபாடு, பாவழிபாடு, சரியை, கிரியை, யோகம், ஞானம், இயமம், நியமம், ஆஸனம், பிராணுயாமம், ப்ரத்யாகாரம், தியானம், தாரணை, ஸமாதி என்று பல படிகள் ஏற்படுத்திச் சென்றனர். நம் முன்னோர்கள் மக்களைப் பக்குவப்படுத்த அருட்பாக்களும், ஆலயங்களும், அறநூல்களும், அடியார் கூட்டங்களும் ஆக்கிச் சென்றனர். எல்லாம் நலமே; ஆலயங்களில் ஒரு சுத்த சக்தியையே பலவாக வணங்கினர். அழகு, அன்பு, இன்பம், அறிவு, யோகம், அருள், இளமை, தீரம் முதலிய கடவுட் குணங்களை உருவாகச் செய்து நம்மவர் சுந்தரி, சுந்தரேசன், கண்ணன், கிருபாநாதர், சிவன், சிவகாமி, ஞானம்பிகை, யோகாம்பிகை, முருகன் என்று பல பெயர் வடிவுகளுடன் வணங்கினர். ஆனல்,

இவை பெரும்பாலும் எஞ்சாமி, உஞ்சாமி, எனது பெரிது, உனது சிறிது, சாமி கண்ணைக் கெடுக்கும், மதியைக் கெடுக்கும் என்று வேற்றுமையும், அச்சமும், ஒருவிதமான மூடமதப் பிடிவாதமும் விளைவித்து, இத் தத்துவ வடிவங்களின் கருவான உண்மையை மறைத்து நிற்கின்றன.

சோமநாதனை முகம்மது கஜினி சம்மட்டியாலடித்து உடைக்கும்போது கலகலவென்று பொன்னும் மணியும் கொட்டின. அத்தனையும் அள்ளிச் சென்ருன் கஜினி. சோமநாதனுவது சிவன். சிவன் எங்கே? எங்கு முள்ளான். சோமநாத விக்கிரகத்தைக் கும்பிடும்போது எதைக் கும்பிடுகிருர்? பொன்னையா? கல்லையா? இல்லை. சோமன் என்பது வேதத்தில் அமுதக் கடவுள். எல்லாருக்கும் இன்ப மளிப்போன்; அத்தகைய பரம் பொருளை மனமடக்கி நினைக்க ஒரு குறியாக உருவில் அமைத்தனர் மேலோர். சைவர் சிவலிங்கத்தை வழிபடு கின்றனர்; அதற்கு விநோதப் பொருளைச் சிலர் வழங் கிக் கேலிசெய்கின்றனர். நீ அவர்களுடன் சேராதே! இலிங்கம் என்பது உன் உள்ளத்திலுள்ள ஆன்ம வடிவு. அதன் ஆவுடை சக்தி; அருள் ஆதாரம். உள்ளம் ஆவுடை; ஆன்மா சிவம் எனக் கருது! சிவலிங்கத்தை வணங்குகையில் நீட்டிவைத்த கல்லையா வணங்குகிருய்? இல்லை. கல்லிலும் புல்லிலும், எதிலும் எங்குமுள்ளவனை வணங்குகிருய். ஆதலால் வணக்கம் எதற்கு? ஆன்ம தேவதைக்கு; சுத்த சக்திக்கு. நிலைத்த பிரமன் சுத்தன்; ஆடும் பிரமம் சக்தி. அன்பனே, ஓர் உதாரணம் பார்! இதோ நான் உள்ளேன்; என்னிடம் நீ அன்பு செய்கிருய்; என்னிடம் உனக்கொரு பற்றுள்ளது; உண்மைதானே? என்னிடம் என்ருல் எதனிடம்? என்+இடம் எது? நீ யார்? இதோ இந்த உடல் தனது வினையாட்டம் ஒழிந்ததும் மறைந்துவிடும்; அல்லது விழுந்துபடும். அப்போது அந்தப் பிணவுடலைப் பற்றுவாயா? விரும்பு வாயா? அதைக் குழி தோண்டிப் புதைத்துவிடுவாய். ஆதலால், நீ விரும்புவது இச்சிறிய மெல்லுடலன்றே; பின்னே எதை விரும்புகிருய்? என்னை. நான் யார்? இந்தப் பூத உடலுள் ஒரு நுண்ணுடல், ஒரு நுட்பமான

உடல் உள்ளது; அதுவே அந்தக்கரணம். அதனுள் ஓர் உடல் உள்ளது; அதுவே உள்ளம். அதனுள் என்+இடம் —நான்— ஆன்மா —சுத்தான்மா ஆனந்தமாக இருக்கிறேன். அதன் அருளறிவால் ஏதோ உனக்கோர் ஆறுதலளிக்கிறேன். அதனுல் நீ விரும்புகிருய். நீ யார்? உடலா உயிரா? முன்னுரைத்தது போலவே நீ ஓர் ஆன்மா. இதுவும் அதுவும் உள்ளே உண்மையறிவு; ஒன்று; அஃது உன்னிடத்தில் அன்பாக எழுந்து, என்னிடமுள்ள அன்பறிவை நேசிக்கிறது. இதுதான் ஆன்மநேய வொருமைப்பாடு. ஆதலால் பெயர் வடிவுகளை வணங்குகையில் அவற்றுள்ளே கோயில் கொண்டிலங்கும் சுத்தசக்தியைக் கருதி வணங்கவேண்டும். நாளாக நாளாக உனக்கே அவ்வறிவு எழுந்து பிறகு அனைத்தையும் தன் மயமாகக் காண்பாய். இந்த அறிவு மனவாக்கிற் கெட்டாதது. அன்பு, ஆர்வம், அடைக்கலம், பணிவு, அருட்பணி, அச்சமின்மை, மறவா நினைப்பு, துணிவு, தூய்மை, இனிமை, அடக்கம், அறம், அறிவாராய்ச்சி, நல்லோர் கூட்டம், பெரியோர் வணக்கம்-இவற்ருல் இவ்வறிவு நாளடைவில் தளிர்க்கும்.

நினைப்பிற்கேற்ற நிறைவு. மனம்போல மங்கலம். ஆதலால் எப்போதும் உன்னை ஒரு நடமாடும் கோயிலாகவே நினை! அதன் மூலஸ்தானம் உள்ளம்; அதில் சுத்த சக்தி, சிவசக்தி, பிரம்ம சக்தி (எப்பெயர்கொண்டு அழைத்தாலும் சரி) யாகிய ஓர் உண்மையறிவு நின்று நிலவுவதாகக் கருது! அதன்பால் அதையே வேண்டு!

௫க. சுத்த சன்மார்க்கம்

உலகெங்கும் ஒற்றுமை முழக்கம் கேட்கிறது. 'ஒன்றே குலம், ஒருவனே இறைவன்' என்று எல்லாரும் பேசுகின்றனர். யார் உள்ளத்தைத் தொட்டுப் பார்த்தாலும் எல்லாரும் ஒரு குலம் என்ற துடிப்பையே காண்கின்ருேம். "எனக்குச் சமானம் யாருமில்லை" என்று யாராவது பேசினுல் 'இவனுக்கு எவ்வளவு செருக்கு!' என்று வெறுக்கிருேம். சமரசக் கடவுளை வணங்காத ஆத்திகர் இல்லை. எல்லாரும் சரிநிகர் சமானம் என்பதை

நாத்திகரும் ஒப்புவர். எந்த மதமும் மாந்தர் பல வகுப்பாகப் பிரிந்து சண்டை போடவேண்டும் என்று உபதேசிப்பதில்லை. ஒவ்வொரு சமயமும் தானே மனித சமுதாய வொற்றுமைக்கு வழி என்று மார்பில் கை வைத்துப் பேச முந்துகிறது.

ஆனால் நாம் காண்பதென்ன? எங்கே பார்த்தாலும் வகுப்புச் சண்டைகள், கட்சிப் பூசல்கள், போட்டி பொறாமைகள், நான் என்னும் ஆணவவெறியாட்டுகள்...! சைவ வைணவச் சண்டை, வேதாந்த சித்தாந்த வாதம், துவைத அத்துவைதச் சழக்கு! மொட்டை, குடுமி, கிராப்பு, நாமம், திருநீறு, வெறுநெற்றி, பூணூல் ஆகிய வெளிவேடங்களை யெல்லாம் கண்டு மயங்கிப் போரிட்டுக் கொண்டிருக்கிறோம். கீதை, குறள், பைபிள், குரான், திருவாய்மொழி, தேவார திருவாசகம் முதலிய அருட் சுவடிகள் முறையிடும் கடவுளுண்மையையும் சன்மார்க்க வாழ்வையும் பயிலாமல் "இது பெரிதா, அது பெரிதா?" என்று வாய்வாணம் விட்டுக்கொண்டிருக்கிறோம்; பெயர் வடிவ பேதங்களையே புறவிழிகளாற் காண்கிறோம், அபேதமான உள்ளிறைவனைக் காணாமல் 'எனது, உனது' என்று சண்டையிடுகிறோம்.

சாதி மத வேறுபாடுகளால் உலகம் தற்கொலை புரிந்து கொள்ளுகிறது, 'இந்துமதம்' என்கின்றனர். இப்பெயர் எப்படி வந்ததோ தெரியவில்லை! அதில் ஆயிரத்தெட்டுச் சாதிகள் புகுந்து பிரிவினைகள் செய்து நமது ஒற்றுமையைக் கெடுத்து நம்மையும் அன்னியருக்கு அடிமையாக்கின. அந்த வருணம், இந்த வருணம், ஐயர், ஐயங்கார், ராயர், முதலியார், பிள்ளை, நாயுடு, ராஜு, வடமன், பிரகசரணம் அஷ்டஸஹஸ்ரம், வாத்திமன், தென்கலை, வடகலை, உத்தராஜி மடம், உடுப்பி மடம், அவர்ணன், ஸவர்ணன், அவன் பார்க்கக்கூடாது, இவன் தீண்டக் கூடாது என்பனபோன்ற எண்ணற்ற வேற்றுமைகள் இந்து சமயம் என்பதை உருக்குலைத்தன. எது இந்து சமயம், எவரைப் பின்பற்றுவது என்றே நமக்கு விளங்காமல் மனம் திகைக்கிறது. திருநீறு பூசினால் "மரக்கால் பட்டை" என்பார். நாமம் போட்டால் "ஆட்டுக்கும் மாட்டுக்கும்......" என்று பாடுவர்.

சாதிபேதத்தாலும், யாகக்கொலைகளாலும் இழிவுற்ற சாதியைத் திருத்தவந்தார் மஹாவீரரும் புத்தரும். இருவரும் சாதி வேறுபாட்டை மண்டையிலடித்து எல்லாருக்கும் அன்பாயிருப்பதே சன்மார்க்கம் என்றனர். இருவரும் அஹிம்ஸா தருமத்தையே உபதேசித்தனர். ஆனால், அவர்களுக்குப் பிறகு புத்த மதத்தில் மகாயனம் ஹினயனம் என்று இரு பிரிவுகள் கிளம்பின. சமணமோ திகம்பரி, ஸ்வேதாம்பரி, ஸ்தானகவாசி என்று மூன்று கிளைகளாகப் பிரிந்து போர் புரிந்தது. பல்லுக்குக் கோயில் கட்டுவர்; மயிருக்கு ஊர்வலம் செய்வர்; அரசங்கிளை நட்டு வளர்த்துத் தொழுவர்; தங்கத்தால் ஸ்தூபிகள் எழுப்புவர்; சமயகுரவரை மலைபோன்ற சிலையிற்செதுக்கி வணங்குவர். ஆனால் "அன்பு, உண்மை, அஹிம்சை, கற்பொழுக்கம், சமத்துவம்—இவைதாமே சமயசாரம், அனுட்டியுங்கள்!" என்றால் பேச்சில்லை. இவற்றை அனுட்டிக்காமல் வெறும் வெளி ஆடம்பரங்களால் பயனென்ன? கிறித்து சமயத்தைப் பார்த்தோமானால் அதில் கத்தோலிக்கர், புரோதஸ்தாந்தியர், ஆங்கிலிகர், பிரிஸ்பிதேரியர், அந்த மிஷன், இந்த மிஷன் என்று பலவேறுபாடுகள் உள்ளன. கிறித்துபகவான் அன்பையும் தியாகத்தையும் அனுட்டித்துக் காட்டினார். மாந்தரும் அவற்றை அனுட்டித்தால் இன்று மேற்கு நடக்கும் வெடிகுண்டு வீச்சுகளுக்கும், கடற்கண்ணிக் கொடுமைகளுக்கும், இரத்த வெறிகளுக்கும் இடமிருக்குமா? இஸ்லாம், புனிதமான சமயம். கடவுளுறுதியும், அடைக்கலமும், தொழுகையும், விரதமும் கொண்ட அரிய சமயம். அதிலும் ஷியா, ஸுனி என்ற வகுப்புள்ளது. அகம்மதியர் ஒருபுறம் பிரசாரம் செய்கின்றனர். அனைவரையும் ஒன்றாக்க பஹாய் இயக்கம் ஒன்று கிளர்ந்துள்ளது. இப்படியே சமயங்கள், உட்சமயங்கள், அவற்றில் வகுப்புகள் எழுந்து மனித சமுதாயத்தைப் பலவாகப் பிரித்தன. அதனால் வந்த கொடிய போர்களையும், சிந்திய இரத்தத்தையும் பார்த்தால், "இந்தச் சமயங்கள் எதற்கு? கடவுளின் பெயரால் மாந்தர் ஏன் இப்படிச் சூதாடித் திரிகிறார்கள்? இந்தச் சமயங்களை யெல்லாம் கடவுள் ஏற்படுத்தினரா? இவையெல்லாம் மனிதன் செய்து கொண்ட வேறுபாடுகள் தாமே? எல்லாருக்கும் பொது

வான கடவுள் தன்னை அந்த மதம் இந்த மதம் என்று சொல்லிக்கொண்டதுண்டா? சங்கர சாஸ்திரி அன்பு செய்தாலும், திருக்குலச் சாம்பான் அன்பு செய்தாலும், இஸ்மால்கான் அன்பு செய்தாலும், அந்தோணி சூசை அன்பு செய்தாலும் அடைவது ஒரே கடவுளைத்தானே? இதையறியாமல் இவர்கள் ஏன் நான்கு சமயங்களாகப் பிரிந்து போராடுகிறார்கள்?'' என்று அறிவாளர் கேட்கின்றனர். பரமபிதா ஒருவர், திருக்குமாரர் ஒருவரே, பைபிளும் ஒன்றே. மலையுபதேசமும் அன்புமயமே. ஆனால் மத்தியகால ஐரோப்பாவை நினைத்தால் கிறித்து சீடர் ஒருவரையொருவர் தீயிலிட்டுக் கொன்ற காட்சிகளும், மதச்சண்டை அரசியற்போராக வளர்ந்து சிந்திய இரத்த வெள்ளமும் நமது கண்முன் நிற்கின்றன—ஆ, கொடுமை! ஒரே நாராயணன் பெயரைச் சொல்லிக் கொண்டு வடகலை தென்கலை யென்று குறி வேறுபாடு கொண்டு, ஒருவர்மேல் ஒருவர் பகைகொண்டு கல்லெறியும் காட்சியைக் கண்டால்....ஆ! இச்சிறிய வேற்றுமையால் விளைந்த கலகம் பிரீவீ கௌன்ஸில் மட்டும்போய் நமது நாட்டுக் கோயிற்பணத்தைக் கொள்ளை கொடுப்பதைக் கண்டால் இன்னும் அதிகமாக மனம் புண்படுகிறது. சிவனையும் அறியார் விஷ்ணுவையும் அறியார்; சிவன் பெரியவனா, விஷ்ணு பெரியவனா என்று நாளெல்லாம் வாதாடுவர், காலத்தைச் சூதாடுவர். இந்தச் சமயக் கூத்துக்களை யெல்லாம் பார்க்கும்போது, 'கடவுள் உண்டா? உண்டானால் ஒன்றா; பலவா? ஒருவனானால் பல மதங்கள் ஏன்? இம்மதங்கள் இல்லாவிட்டால், கடவுளே இல்லாவிட்டால்தான் என்ன குடிமுழுகிப் போனது? உண்ண முடியாதா, உடுக்கமுடியாதா, பெற்று வளர்த்து மரபைப் பெருக்க முடியாதா?' என்றெல்லாம் இக்காலம் கேட்கின்றனர். நாம் பதிற்சொல்லித்தானே ஆக வேண்டும்?

சமயம்

கடவுள் எந்தச் சமயத்தையும் படைக்கவில்லை. வாத மிடும் சமயநெறிக்கு அரியவன், சாதிமதாதீதன், சர்வபூத மஹேசன், உயிர்மேனியான் என்று கடவுளை நமது புண்ணிய நூல்கள் போற்றுகின்றன. அருட்பெருஞ்சோதி, தனிப்பரம் பொருள், கருணைக் கடல், பெயர்வடிவ பேத

மற்ற நிர்க்குணம், பந்ததொந்த மற்ற சுதந்தரம், நித்தியம், நிரஞ்சனம், சுத்தம் என்று புண்ணியர் கடவுளைப் போற்றுகின்றனர்; அன்பு, மனங்குவிந்த தியானம், அருட்பணி ஆகிய வழிகளால் கடவுட்பேறெய்தலாம் என்று அனுபவத்தால் உரைக்கின்றனர். மனிதன் தனது தெய்வத் தன்மையை மறந்து, மதிமயங்கி மனவழுக்குற்று இடர்ப்படுகிறான். மனத்தழுக்கை நீக்கி, மதியைத் தெளிவித்து மீண்டும் மனிதனை அவனுக்குரிய தெய்வ நிலையிற் சேர்ப்பதே சமயமாகும். ஆன்மாவை மாசறுத்துக் கடவுளுடன் இரண்டறச் சேர்த்துச் சமப்படுவதே சமயமாகும். பல ஆறுகள் கடலிற் புகுந்து அதனுடன் சமமாகின்றன. அதே போல இறைவனருட்கடலிற் புக்கு ஆன்மாக்கள் சமநிலை பெறுகின்றன. அச் சமநிலையை அளிப்பதே சமயமாகும். சமயம் உலக வாழ்விலும் பேதத்தை ஒழித்துச் சமத்துவ மளிப்பதாகும். மாந்தரை வேறுபாடு செய்வது எச்சமயக் கொள்கையும் ஆகாது. "நீங்கள் பிரிவினையால் சண்டைபோட்டு மண்டையுடையுங்கள்" என்று எந்தச் சமயாசாரியர்களும், எந்தப் புண்ணிய நூலும் ஓதுவதில்லை. மாந்தர் உள்ளத்தில் இன்பப்பொருள் உள்ளது. மனம் புறத்தே புலன்களைப் பற்றி யலைவதால் அந்தப் பேரின்பப் பொருள் மனிதருக்கு அனுபவம் ஆகாமல் இருக்கிறது. அந்த இன்பத்தை அறியாமல் மனிதர் புறவேறுபாடுகளைப் பற்றி "இது அது, நான் நீ, எனது உனது," என்று சண்டையிடுகிறார்கள். இதயம் ஒவ்வொருவருக்கும் உண்டு; அங்கே இன்பப்பொருளும் உண்டு. அதில் இவர் அவர் என்ற வேறுபாடில்லை. பார்ப்பானுக்கு ஓர் இன்பப்பொருள்; திருக்குலத்தாருக்கு மற்றொன்று என்பதில்லை. "இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனுகிலும் உன்னை இடைவிட்டு நின்றதுண்டோ.......என்று நீ அன்று நான்" என்றனர் நம் தமிழ்வேத முனிவர். அந்தப் பொருளைச் சிவன், விஷ்ணு, அல்லா, பரமபிதா, யஹோவா என்று எப்படி வேண்டுமானாலும் கூப்பிடுங்கள். சர்க்கரையை ஷுகர் என்றாலும், ஷக்கர் என்றாலும் ஸுக்ர் என்றாலும் ஒன்றுதான்; இனிப்பு மாறாது. கரும்பைச் செருகு என்று தெலுங்கன் சொன்னால் கசக்குமா? ஆதலால் இன்பமாகிய பொருள் ஒன்றுண்டு. ஆன்மாவை மாசறுத்து அதனுடன் சமரசப்

படுத்துவதே சமயம். அதற்கு வழி காட்டாதது சமய மாகாது.

சுத்த சன்மார்க்கம்

அந்தச்சமயம் இந்தச்சமயம் என்று சண்டை போடத் தேவையில்லை. எல்லாருக்கும் பொது நெறியுண்டு. அதுவே சுத்த சன்மார்க்கம். "சுத்தமான இதயர் வாழ்க! அவர் ஈசனைக் காண்பார்" என்றார் ஏசுநாதர். எல்லாச் சமயங்களின் சாரமும் சுத்தமேயாகும். மனத்தின்கண் மாசிலா திருத்தலே அறம்; வாய்மையே மனமாசறுக்கும் மருந்து என்று தெய்வப் புலவர் சொன்னார். கீதை, குறள், பைபிள், குரான், புத்ததருமம், தத்துவார்த்த சூத்திரம் முதலிய எந்த மதநூலைப் பார்த்தாலும் தூய்மை வாய்மை இரண்டும் பளிச்சென விளங்கும். வாய்மைக்கு மற்றொரு பெயர் சத்து. சத் என்றால் உண்மை, நிலையான பொருள், உள்ள பொருள் என்பதாம். அப்பொருளைப் பிரிந்து நாம் வருந்துகிறோம். மீண்டும் நம்மை அதனுடன் கூடிநிற்க வழிகாட்டுவதே சன்மார்க்கம், மெய்வழி யாகும். மனம், மொழி, மெய்த்தூய்மை யளித்து மெய் வழி நடத்துவதே சுத்த சன்மார்க்கமாகும். எல்லாச் சமயங்களுக்கும் இத்தூய மெய்வழி பொதுவாகும். நமது நாட்டில் வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டு பெரிய தத்துவங்கள் வழங்குகின்றன. எல்லாச் சமயங் களும் இந்த இரண்டனுள் அடங்கும். "வேதாந்தம் நானே பிரமம்; எனக்கு அன்னியமானதெல்லாம் மனக் கற்பனை. அவற்றை அல்ல எனத் தள்ளி நானாகிய ஆன் மாவாக இருக்க வேண்டும். அதுவே இன்பம்" என்னும். சித்தாந்தம் படிப்படியாக சரியை கிரியை யோகஞான வழியே மனிதான்மாவை நடத்தி, மனமாசறுத்து, ஆண வத்தைப்போக்கி, இறைவனுடன் உப்பும் அப்பும்போல் இரண்டறக் கலக்கும் இன்பத்தை நல்கும். இந்த இரண்டு சமயங்களும் மனிதனைத் தெய்வநிலைக்கு உயர்த்தும் அரிய பெரிய சன்மார்க்கங்களாம். அவனன்றி யானில்லை, என்பது இரண்டிற்கும் பொதுவான கொள்கையாம். தாயுமானவர் பாடல் இரண்டிற்கும் பொதுமறையாகும். வேதாந்த சித்தாந்த நெறியை வகுத்த குருமார்களெல் லாரும் நம் திராவிடப் பெரியார்களேயாவர். சங்கரர்,

இராமனுஜர், மத்துவர், மெய்கண்டார், சிவஞான முனிவர், நீலகண்டசிவாசாரியார், ஆழ்வார்கள், நாயன் மார்கள் ஆகியோர் அனைவரும் நம் திராவிடத்தாய் ஈன்ற அறிவுச் சுடர்களேயாவர். இவர்கள் செய்த உபதேசங்க ளெல்லாம் சுத்த சன்மார்க்கத்தில் அடங்கும். தவிர, புத்தர், மகாவீரர், நானகர், ஏசுநாதர், முகம்மது ஸல்லம், ஜரதுஷ்டிரர் முதலிய அருட்பெரியார் செய்த உபதேசங் களும் சுத்த சன்மார்க்கமேயாம். மனிதன் மனமாசு நீங்கி ஆசையாணவங்களை வென்று தெய்வத் தன்மை பெறுவதே அனைத்தின் கருத்துமாகும். மனமயக்கத்திற் பட்டழியும் மனிதனுக்குக் கடவுளே கதி. கடவுள் நம்பிக்கையாலேதான் மனிதன் அறம்போற்றி அன்பு வழிநின்று மேன்மேலும் சாதனங்களைச் செய்து பேரின்ப மெய்துகிறுன். உடலெடுத்தபயன் கடவுளைக் காண்பதே, உள்ளும் புறமும் காண்பதேயாம். அவனைக் காண்பதே கண். அவனைத் துதிப்பதே நா. அவனடி பணிவதே உடல். அவன் பணிபுரிவதே கை. அவனைத் தியானிப்பதே மனம், அவனை உணர்வதே உள்ளம், அவன்பால் நடத்துவதே மெய்வழி, அவனை அறிவிப்பதே அறிவு.

கடவுள் ஒன்றேயாம். அஃது எங்கும் நிறைந்தது. எல்லார் உள்ளத்திலும் கோயில் கொண்டது. அஃது அந்தரான்மா, ஜீவசாட்சி. ஒரே ஒளியில் பல விளக்குகளை ஏற்றுகிறோம். அதனுல் ஒளி குறையுமா? அதுபோன்றதே கடவுளருள்; அருட்பெருஞ்சோதி எல்லாருள்ளும் நிறைந்து பலவாக விளையாடுகிறது. மலர்கள் பல, மாலைக் கயிறு ஒன்று; மணிகள் பல, நூல் ஒன்று; துறைகள் பல, ஆறு ஒன்று; பயிர்கள் பல, நிலம் ஒன்று; இலைகள் பல, பசுமை ஒன்று; மலர்கள் பல, தேன் ஒன்று; உடல் கள் பல, உள்ளப்பொருள் ஒன்று; மதங்கள் பல, கடவுள் ஒன்று. இப்படியே பார்க்கப் போனுல் நாம் பலவாகக் காணும் பொருள்களெல்லாம் ஒன்றைச் சார்ந்திருக்கும். கிளைகளும் இலைகளும் பலவானுலும் வேரும் அடிமர மும் ஒன்றேயாம். பலவுயிர்களிலும் ஒன்ருக விளங்கும் ஆதிமூலப் பொருளையே நாம் பரமாத்மன், கடவுள், இறைவன், சிவன், நாராயணன், அல்லா, தந்தை, என் கிறோம். அப்பொருளுக்குச் சாதிமதச்சாயம் பூசியது மனிதனேயாவான். உள்ளது ஒரே சூரியன். ஆயிரம்

நீர்க்குடங்களில் அவன் பிம்பம் தெரிகிறது. மனிதன் பிம்பங்களைக்கண்டு 'ஆயிரம் சூரியன்கள் உள்ளன; எனது குடத்தில் விளங்கும் சூரியனே உண்மை' என்று வாதாடுகிறான். பௌர்ணமியன்று குளத்தில் முழுமதி நிலவுகிறது. குளத்தின் அலைகளால் அதிற்காணும் சந்திரபிம்பமும் அலைகிறது. அதைப்பார்த்து "எங்கள் ஊருணியிற் சந்திரன் நீச்சடிக்கிறான்" என்றொருவன் சொன்னால் எப்படியிருக்கும்? "பாரப்பா ஆகாசத்தில்!" என்று தலையை நிமிர்த்திக் காட்டவேண்டும். மேலே நோக்கினால், பகலில் ஒரே சூரியன், இரவில் ஒரே சந்திரன் தெரியும். ஒன்றைப் பலவாகக் காண்பது அலையும் மனந்தான். பேதபுத்திக்கும் அதுவே காரணம். கண்ணாடி வீட்டில் நாய் புகுந்து சுற்றிப் பார்க்கிறது. நாற்புறமும் உள்ள நிலைக் கண்ணாடிகளில் அதன் உருவம் பலவாகத் தெரிகிறது. எல்லாம் தனது நிழல் என்பதை நாய் அறிவதில்லை. தன்னுடன் அத்தனை நாய்களும் போட்டி போடுவதாக நினைத்து 'வள் வள் வள் வொள்' என்று கண்ணாடிகளைப் பார்த்து ரகளை செய்கிறது. இதேமாதிரிதான் மனிதன் தனது சொரூபமான திருவருளைக் காணமல், பேதபுத்தியால் பலபாவனைகளைச் செய்துகொண்டு, பல சமய வேறுபாடுகளைப் பற்றிச் சண்டையிட்டு 'எனது உனது' என்று அலைகிறான். உட்குவிந்து பார்த்தால் பொருள் ஒன்றுதான். தலையணை உறை பல நிறங்களாயினும் பஞ்சு ஒன்றுதான் ஒவ்வொருவர் உள்ளுறையும் பொருள் கடவுள். அப்பொருளைச் சூழ்ந்து, உள்ளம், மனம், உயிர், நரம்புத்தொகுதி, உடல் எல்லாம் உள்ளன. உதாரணமாக, ஒரு மின்சார விளக்கைப் பாருங்கள்! விளக்குத் தண்டு, குமிழ், கம்பி எல்லாம் பல வகையா யிருக்கலாம். ஓர் ஊரில் இலட்சக்கணக்கான குமிழ்கள் இருக்கலாம். ஆனால், எல்லாம் ஒரே மின்சக்தியினாலேதான் எரிகின்றன. அந்த மின்சக்தி யில்லாதுபோனால் அவையனைத்தும் வெறுமையாகும். அதுபோலே இறைவனருளே எங்கும் எவற்றிலும் பரவி உலகவிளையாட்டை நடத்துகிறது. இறைவனைத் தந்தையென்றும், அருளான சக்தியைத் தாயென்றும் நமது சித்தாந்தம் போற்றும். தாயும் தந்தையும் எல்லாருக்கும் பொது. உயிர்களெல்லாம் அவர்களால் வந்து இருந்து செல்லும் ஒரே குலம். இது

மூக்காலும் உண்மை. இந்த உண்மையை நன்குயறிந்தால் சாதிமத வேறுபாடுகளும் எஞ்சாமி உஞ்சாமி என்ற சண்டைகளும் வெறும் கேலிக்கூத்தாகத் தோன்றும்.

உலகம் கடவுட்கோயில். கடவுள் அட்டமூர்த்தி. ஐம்பூதங்கள், கதிர், மதி, ஆன்மத்தொகுதி — எல்லாம் இறைவிளக்கமேயாம். எதைப் பார்த்தாலும் அதன் உள்ளேயுள்ள உண்மைப் பொருளையே நாம் நினைக்க வேண்டும். பெயர் வடிவங்களே பலவாகின்றன. அவரவர் வினைகளுக்கும் சித்த விருத்திகளுக்கும் ஏற்றபடியே பல வாக வாழ்க்கை யமைகிறது. குலாலன் தண்டசக்கரம் சுழற்றிப் பானை செய்கிறான். தட்டான் பொன்னை உருக்கி அணிகள் செய்கிறான். விவசாயி நிலத்தை உழுது சாகுபடி செய்கிறான். கவி இயற்கையுள்ளத்தில் ஆழ்ந்து உண்மையை அறிந்து சொல்லோவிய மாக்குகிறான். பாடகன் அதற்கு இன்னிசையளிக்கிறான். ஓவியன் பீலி யால் பல சித்திரங்களை வரைகிறான். இந்தமாதிரி அவரவர் திறமைக்கும், தன்மைக்கும், மனப்பான்மைக்கும், பழக் கத்திற்கும் ஏற்றபடி பல வேலைகள் அமைந்திருக்கின்றன. அவற்றைக்கொண்டு அவன் பெரியவன் இவன் அற்பன் எனல் கூடாது. தோட்டிமுதல் தொண்டைமான்வரையில் அனைவரும் உலகாலயத் தொண்டர்களேயாவர். அரசன் செங்கோல் பிடித்துத் தொண்டு செய்கிறான். தோட்டி துடைப்பத்தைப் பிடித்து வேலை செய்கிறான். தோட்டி வேலை ஒருநாள் நடவாது போனால் ஊர் நாறும்! ஆதலால், தொழில் வேறுபாட்டைக்கொண்டு மனிதர் உயர்வுதாழ்வு பேசக்கூடாது. எல்லாம் சிவமயம், பிரம்மமயம், விஷ்ணு மயம் என்று நம் வேதங்கள் முழங்குகின்றன. அத் தகைய சமப்பார்வையை நாம் பெறவேண்டும். "என்னில் அனைத்தையும், அனைத்திலும் என்னையும் காண்பவனே அன்பன், அறிஞன்" என்றான் கண்ணன். ஒரு வீட்டு வேலையை அவரவர் பங்குகொண்டு செய்வதுபோலவே உலகவினைகளையும் செய்ய வேண்டும். பற்றுவிளக்கும் தாயை நாம் தாழ்வாக நினைப்பதில்லை. அதுபோலவே நமது ஊரைச் சுத்தம் செய்து, நம் வயல்களைக் காக்கும் தொண்டரை நாம் தாழ்வாக நினைக்கக் கூடாது. சம தருமம் வாழ்வில் விளங்கவேண்டும். அவ்வாறானால் சாதி

சமய வேறுபாடே இராது. எல்லாரும் சுத்த சன்மார்க்கத்திற் சேர்ந்து வாழலாம். எல்லாரும் கடவுளை யடையலாம்.

ஆறுகளெல்லாம் இயற்கை விட்ட வழிச்சென்று கடலடைந்து ஒன்றுகின்றன. நட்சத்திரங்களெல்லாம் ஒழுங்காக யாத்திரை செய்து காலையொளியிற் கலக்கின்றன. அதேமாதிரியே ஆன்மாக்களெல்லாம் சன்மார்க்கத்தைப் பற்றி இறைவனருளிற் கலக்கலாம். அரசனொருவனை மகிழ்விக்கும் சுருக்குவழி அவன் ஆணையைக் காப்பதேயாம். சன்மார்க்க வொழுக்கமே கடவுளாணை. சன்மார்க்கமே கடவுட் சட்டம். அதை மீறி நடப்ப தெல்லாம் துன்மார்க்கமாம். சன்மார்க்கம் அறம், அஃதல்லது மறம். அறத்தால் வருவதே இன்பம். அறத்தினும் ஆக்கமொன்றில்லை. அறம் வாய்மையும் தூய்மையும் அளிக்கும்.

"மனத்தின் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்" என்றார் நம் தெய்வப் புலவர். சுத்தமனமே அறத்தின் நிலயம். அசுத்த மனத்தில் அறம் நிலைகொள்ளாது. அன்பு, அருள், சமநோக்கம், தியானம், கடவுளுறுதி, அமைதி, களிப்பு—இவையே சுத்தமனத்தின் தன்மைகளாம். சூது, வாது, பொறாமை, அகம்பாவம், சிறுமை, வஞ்சம், அசூயைப் பித்தம், பேதபுத்தி, வன்மம்—இவையெல்லாம் அசுத்த மனத்தின் அழுக்குகளாம். சதா கவலைப்படுவதும் பேராசைப்படுவதும் மனத்தினவுகளாம். அதே போல மனிதன் சுத்த வாக்கைப் பெறவேண்டும்; அசுத்த வாக்கை நீக்கவேண்டும். உண்மை, இன்சொல், நன்றியுரை, ஜபம், அருள் வாக்குகளை ஓதல், அறிவை வளர்த்தல்—இவையெல்லாம் சுத்தவாக்கின் தன்மைகளாம். பொய், கோள், சினம், வம்பு, வழக்கு, செருக்காடல், நாத்திகம், பிறரை நிந்தித்தல், பெரியாரை அலட்சியமாகப் பேசல்—இவையெல்லாம் அசுத்தவாக்கின் இழிதன்மைகளாம். மனிதன் அசுத்த காரியங்களை நீக்கவேண்டும்; சுத்த காரியங்களைச் செய்யவேண்டும். இடம்பம், செருக்கு நடை, பிறவுயிர்களுக்குத் தீமை செய்தல், கொலை களவு, கள், சூது, விபசாரம்—இவையெல்லாம் அசுத்த காரியங்களாம். இரக்கம், ஈகை, பரோபகாரம், எளிமை, நேர்மை,

யண்பு, உயிர்க் கருணை, பொதுநலம், அருட்பணி முதலி யவை சுத்த காரியங்களாம். சுத்தம் அருட்சோதி நல்கும்; மனிதனை உயர்த்தும். அசுத்தம் மனத்தை இருளாக்கும்; மனிதனை நரகில் தள்ளும். மனிதன் சுத்தாசுத்தம் அறிந்து ஒழுகவேண்டும். சுத்தம் மனமாசை யறுத்து மனிதனுக்கு ஆன்ம சுதந்தரம் நல்கும்; முத்தியின்ப மளிக்கும். சுத்த வான் எல்லாரிடமும் அன்பாயிருப்பான்; அருளுடன் நடப்பான். சமத்துவம் அவனுக்கே சித்திக்கும். சுத்தம் சுதந்தரம் சமத்துவம் ஆகிய இம் மூன்றும் சன்மார்க்கத் தின் சாரமாகும். இவை எல்லாச் சமயங்களுக்கும் ஒப்பியனவாகும். எந்தச் சாதி, எந்த மதத்திற் பிறந்தவரா ணலும் மனமொழிமெய்த் தூய்மை ஆன்மசுதந்தரம், சர்வாத்ம சமத்துவம் ஆகிய மூன்றும் உடையவர் சுத்த சன்மார்க்கிகளாவார். அவர் அனைவரும் ஒருகுலமாவார். ஆடை, பேச்சு, பூச்சு, நாடு, சாதி—இவற்றைப்பற்றிக் கவலையில்லை; இவை அன்னமயகோசவிவகாரம். இவற் றிற்கும் உள்மனிதனான சுத்தான்மாவிற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

நான் முதலில் சுத்தான்மா. இயற்கையுடலில் நான் குடியிருக்கிறேன். உடல்விவகாரம் பலவாகும். நானாகிய சுத்தான்மா என்றும் ஒன்று. நான் அது. இந்து, கிறிஸ்து இஸ்லாம், ஐயர், ஐயங்கார், முதலி, பிள்ளை எல்லாம் வெளித்தோல் விவகாரக்கற்பனைகளாம். இவற்றால் உலகிற் சண்டைபெருகுவது மனிதத்தன்மையறியாத மடமை யாம். நான் முதலில் மனிதன்; பிறகே இந்தியன், ஐரோப்பியன், துருக்கியன், ஜப்பானியன் என்னும் விவ காரம். மனிதனை மனிதனாக மதித்தால் நாடு மொழி வேறுபாடே தோன்றாது. எல்லாரும் பஞ்சபூதச் சேர்க்கையான உடலை மாட்டி உலாவுகிறோம். பசிதாகம் எல்லாருக்கும் ஒன்றுதான். ஒவ்வொருவரும் உலகாலயத் தில் ஒரு பயனுள்ள பணிசெய்து உண்ணவேண்டும். ஒருவரையொருவர் திருடாமல், பொறாமையால் தாக்கா மல், அவரவருக்கு வேண்டிய தேவைகளை அடைந்து மகிழவேண்டும்.

ஒவ்வோர் உயிருக்கும் வினையுடலொன்று இருப்பது போலவே அருட்பணி யொன்றும் உண்டு. உண்ணல்,

உறங்கல், கூடல், ஈனல், பேணல் முதலிய உடற் பணிகள் எல்லாவுயிர்களுக்கும் பொதுவேயாம். விலங்குகள் இவற்றை ஐம்புலனுணர்வாற் செய்து நம்மைவிட எளிய முறையில் வாழுகின்றன. மனிதராகிய நமக்கு ஆறுவது புலனான மனம் உள்ளது. மனமே மனிதன். மனம் புறத்தேசென்று அசுத்தமானால் அது நமக்குப் பரம சத்துருவாகும். மனம் உட்குவிந்து ஆன்மாவுடன் கூடி நின்றால் அதன் சக்தி அபாரமாகும். அதனால் அற்புதங்களைச் செய்யலாம். மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு உள்ளாழ்ந்து தன்னுண்மையை அறிகிறானோ அவ்வளவுக் கவ்வளவு அருளும், அன்பும், ஆற்றலும், தீரமும், கருணையும், சமநோக்கமும் கொண்டிருப்பான். அப்படிப்பட்ட ஆன்மதீரர் வாழுமிடத்தில் போர் போட்டி பொறாமைகளுக்கு இடமேயிராவாம். மனப்போர் ஒழிந்தால் இனப்போர் இல்லை. அகப்போரே அக்கப்போராம்! ஆன்மாவுடன் கூடிச் சுத்த நிலைபெற்ற மனோபலத்தால் மனிதன் உலகில் பயனுள்ள அருட்பணிகளைச் செய்யவேண்டும். அப்பணிகள் எல்லாவுயிர்களுக்கும் உயிரான இறைவன் வழிபாடாகும். அப்பணிகளே உண்மையான ஜீவகாருண்யமாகும். அவற்றால் உலகில் அமைதியின்ப மோங்கும்; ஒற்றுமை நிலவும்; சுத்தசன்மார்க்கம் தழைக்கும்.,

உள்ளொன்றி வாழ்வதே யோகமாகும். உள்ளமே வாழ்வின் ஊற்றுக்கண். உள்ளமே உண்மை நிலயம். எல்லாரும் உள்ளொன்றி வாழ்ந்தாலே உலகில் சன்மார்க்கம் வளரும். சாதிமதப்போர்களும், நாட்டுப்போர்களும், ஒழியவேண்டுமானால், சுத்த மனத்தால் உள்ளத்தை நாடி, எல்லாரும் பொதுப்பொருளைக் கூடவேண்டும். அப்போது நான், அவன், உவன், அவள், இவள், அது, அவை எல்லாம் ஒருபொருளின் நானவிகார வடிவங்களாகக் காண்போம். என்னைக் குத்தினால் எப்படி யுணர்வேனோ அதேமாதிரி ஆட்டைமாட்டைக் குத்தினாலும் உணர்வேன்; எவ்வுயிர்க்கும் இன்னலிழைக்க மாட்டேன்; அனைத்தையும் யானாகவே, ஆன்மசமானமாகவே மதிப்பேன். அப்போதுதான் என்னுடைமை அவனுடைமை எல்லாம் இறைவன் பொதுவுடமை, அருளுடைமை என்னும் உண்மை விளங்கும்; அப்போதே உலகில் உழைப்பும்

பிழைப்பும் துய்ப்பும் சரிநிகராகும்; வள்ளுவர் சொல்லும் பாத்தூண் ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும்.

அன்பர்காள்! காலம் மாறுகிறது; வேறுபாடுகள் ஒழிகின்றன. உலகில் ஒரு சமரஸப் பசி யெடுத்திருக்கிறது. சாதிமத பேதங்களெல்லாம் ஒழிகின்றன. அனைவரும். அந்தராத்மாவில் ஒன்றி வாழும் சுத்தசன் மார்க்க யுகம் பிறக்கிறது. அப்பிறப்பின் வலியே இப்போது நடக்கும் போராட்டங்களும், அசுரக் கொடுமைகளுமாம். கலி வீழ்ந்தது; பாரதமாதா சுதந்தரச் சுடர் வீசி மீண்டும் எழுந்து நிற்கிறாள்; ஆன்மசக்தி அளிக்கிறாள்; உலகை அமர வாழ்விற்கு நடத்துகிறாள், நம்புங்கள்!

இறைவன் அருட்குடைக்கீழ் எல்லாரும் இன்ப
நிறைவுற்று வாழ்க நிதம்.

ருஉ. வாழும் வகை

உடலமே கோயி லாக
 உள்ளத்தான் கடவுளாகத்
திடமன மிருக்கை யாகத்
 தியானமே விளக்க மாகச்
சுடர்மல ரன்பே யாக
 நிவேதனந் தூய வாழ்வாய்த்
தடம்புவி மகிழ வேண்டிச்
 சதாகால பூசை செய்வோம்! க

மலரினிலே மதுவுண்ணும் வண்டைப் போலே
 மண்ணுலகில் வாழ்வின்பம் உண்ண வேண்டும்
உலகினரை வருத்தாமல், யாசியாமல்,
 உடையுணவுத் தேவைகளுக் குழைக்கவேண்டும்
மலர் மணக்க மங்கலநன் மனையெழுப்பி
 வள்ளுவர்போல் வாழ்வாங்கு வாழவேண்டும்
கலகமிலாக் கட்டில்லாக் கவலை யில்லாக்
 களிப்புடனே யமரநிலை காணவேண்டும். உ

பசித்தீக்குச் சுசிருசியா யுண்ண வேண்டும்
பருகுநீர் சுத்தமா யிருக்க வேண்டும்
புசித்ததனைச் சீரணித்தே புசிக்க வேண்டும்
பொதுமையுறப் புவிப் பொருளைத் துய்க்க
[வேண்டும்
வசிக்குமிடம் இயற்கைவளம் பொலிய வேண்டும்
வாழ்வெல்லாந் தவயோகமாக வேண்டும்
விசித்திரமாம் ஐம்பூதப் பஞ்சரத்தில்
விளையாடும் பைங்கிளியே விளம்பக் கேளாய்! ௫

கடலைகனி காயரிசி பருப்பை யுண்டு
கட்கொலையூன் காமவெறித் தீமையின்றி,
நடலையிலா நடையுடனே நாலு பேர்க்கு
நலமாக ஞாலத்தில் வாழ வேண்டும்;
உடலையொரு கோயிலென வுன்ன வேண்டும்
உடையானை யுள்ளாரக் கலக்க வேண்டும்.
அடலரிய புலன்களைநன் கடக்க வேண்டும்.
ஆனந்த வூற்றினையுள் ளகழ்ந்து காணாய்! ௬

யார்வாழ்வுஞ் சதமில்லை; உள்ள மட்டும்
அறிந்துதனை யன்புமிகப் பெருக்கி நாளும்
ஊர்வாழ, வுயிர்வாழ, வுலகு வாழ
வுற்றார்பெற் றார்வாழ வுதவ வேண்டும்.
பேர்புகழின் வேடுவனாய்ப் பேதுறாமல்,
பிறந்தவினை முடிந்தினிமேற் பிறவா வண்ணந்
தேர்ந்துசரி யைகிரியை யோக ஞானத்
திருநெறியா லருட்சித்தி சேரவேண்டும். ௭

வீணான சடங்குகளைப் பெருக்க வேண்டாம்,
வெவ்வேறு சாமிகளால் வினைபோர் வேண்டாம்;
மாணாத சாதிமத மயக்கம் வேண்டாம்;
மனமலைந்து புறந்திரியும் வழக்கு வேண்டாம்;
ஆணாகிப் பெண்ணாகி யாவு மாகி
அகிலமெலாம் ஒன்றாம்சுத் தான்ம நேயம்
பூணாது பொய்வேடம் புனைய வேண்டாம்;
பொதுப்பொருளாந் உட்பொருளே புணர்ந்து
[கொள்ளே. ௮

நன்மறைகள் சொல்லுநடுப் பொருளாம் ; வேத
நாதவிந்து கலைகடந்த சத்தாம் ; என்றுந்
தன்மயமாந் தன்னிலைநின் றருளா லேந்து
சகத்தொழில்செய் தாக்கற்ற தனியாம்; தன்பால்
அன்புறுதி கொள்ளறிஞர்க் கமுதாம் ; சச்சி
தானந்தக் கனிரசமாம் அருந்து வோர்க்கே ;
இன்பவொளி காட்டியொளிர் இரவியே யாம்
இதயத்தில் அகமகமென் றியங்கு மொன்றே. எ

எழுத்தாலும் வாயாலும் இயம்பொணுதாம் ;
எள்ளுமலை யாக்கியினம் பிரித்துப் போர்செய்
கொழுத்தமன மாயத்தை யொழித்த பேர்க்குக்
குளிரருவிப் பாட்டொலிக்குஞ் சக்திக் குன்றும்.
அழுத்தமாய்ச் சொல்லுகிறேன் யானுநீயும்
அகிலமெலா மப்பொருளே ; அறிந்தா லஃதை
வழுத்தவொரு சொல்லுண்டோ? வரைக டந்த
மௌனனந் தக்கடலே வாழ்வு கண்டாய் ! அ

பாரால யத்தினிலே பரந்த தோற்றம்
பரதனரு ளாடலெனப் பார்ப்பான் ஞானி ;
தாராள மாயன்பு செய்வான் ; பெண்ஆண்
சக்திசிவ மெனக்காண்பான் ; அனைத்தி னுக்கும்
வேரான வொன்றினிலே நின்று, வாழ்வின்
விரிவெல்லாம் அதன்கிளையாய் விளங்கக் காண்
சோராது பணிசெய்துந் தொந்த மில்லான் [பான் ;
சுத்தமுத்த சமரசசன் மார்க்கத் தோனே ! சூ

முற்றிற்று.

2358

ஓம்
சுத்த சக்தி
அன்பு நிலையம்

COMMERCIAL PRINTING &
PUBLISHING HOUSE, MADRAS